# புதுநகரும், புதுநகர்
# ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வரலாறும்



வெளியீடு

ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபை
புதுநகர்
2015

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பழமையை பறைசாற்றும்
அரசமரத்துடன் ஆலயத்தின் அழகிய
இன்றைய தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்நூலைப்பற்றி...

இவ்வரலாற்று நூலை எழுதுவதற்காக 2003ஆம் ஆண்டு தகவல்களைத் திரட்டும் பொருட்டு துண்டுப் பிரசுரம் மூலம் விபரம் கோரப்பட்டும் அவை பலன் தரவில்லை.

2015ஆம் ஆண்டு மீண்டும் நாங்கள் இப்பணியை ஆரம்பித்த போது சுவரொட்கள் மூலம் தகவல்களைத் தரும்படி கோரிக்கைவிட்டு விளம்பரப்படுத்தியும் அவை பலன் தராத நிலையில் நூலாக்கக்குழு தங்களிடமுள்ள ஆதாரங்களையும், செவி வழித்தகவல்களையும் பெற்று அதனை ஆய்வு செய்து இந்நூலை நிறைவு செய்துள்ளது.

இந்நூலில் ஆலய வரலாறு முக்கிய இடம்வகிப்பதனால் அதன் தகவல்களை பொதுமக்களும் அறிந்து கொள்ள வேண்டும் என்னும் நோக்கில் 12.07.2015இல் நடைபெற்ற விசேட பொதுச் சபைக் கூட்டத்தில் ஆலய பரிபாலன சபையினரால் நூல் வாசித்துக்காட்டப்பட்டு அங்கிகாரம் பெறப்பட்டது என்பதை அறியத்தருகின்றோம்.

புதுநகர் ஸ்ரீ சித்தி விநாயகர்
ஆலய பரிபாலன சபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாக்கம்

எழுத்தாக்கம் தொகுப்பு : திரு. மு. வாமநாதன்
(முன்னாள் ஆலய பரிபாலன சபைத் தலைவர்)

நூலாக்கக்குழு :

திரு.க.வசந்தகுமார்
(ஆலய பரிபாலன சபைத் தலைவர்)

திரு.க.தவராசா
(ஆலய பரிபாலன சபை செயலாளர்)

திரு.த.யோகநாதன்
(ஆலய பரிபாலன சபை ஆலோசகர்)

திரு.துரை மனோகரன்
(முன்னாள் ஆலய பரிபாலன சபைத் தலைவர்)

திரு.த.யோகேஸ்வரன்
(முன்னாள் ஆலய பரிபாலன சபை செயலாளர்)

திரு.இரா.ஜெயபாலன்
(முன்னாள் ஆலய பரிபாலன சபைத் தலைவர்)


நூலின் பெயர் – புதுநகரும், புதுநகர் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வரலாறும்

வெளியீடு – ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபை
புதுநகர், மட்டக்களப்பு.
2015





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாக்கக் குழு



இடமிருந்து வலம் :
த.யோகேஸ்வரன், இரா.ஜெயபாலன், க.தவராஜா, மு.வாமநாதன் (நூலாசிரியர்),
க.வசந்தகுமார், துரை மனோகரன், த.யோகநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை . . .

பல்வேறுபட்ட இன்னல்களுக்கு முகம் கொடுத்தபோதும் துவண்டு வீழ்ந்து விடாமல் நிமிர்ந்து நின்று சாதனை படைத்த மக்கள் வாழும் புதுநகர் பிரதேசமும் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வரலாறும் என்ற நூலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமிதம் கொள்கின்றேன்.

மட்டுநகர் மக்களின் மனதில் நீங்காத இடத்தைப் பிடித்துள்ள இப்புதுநகர் மக்கள் சந்தித்த போராட்டங்கள் ஏராளம், ஏனெனில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை அமைப்பதற்காக சுவீகரிக்கப்பட்ட நிலத்தில் வாழ்ந்த மக்களே புதுநகரில் குடியேற்றப்பட்டனர். தங்களது வாழ்விடங்களை விட்டு வெளியேறிய துயர் ஆறும் முன்பாகவே விமான நிலைய விஸ்தரிப்புக்காக மீண்டும் அவர்களது நிலங்கள் சுவீகரிக்கப்பட்டது. எனினும் "துணிந்து நில், தொடர்ந்து செல்" என்ற வாக்கிற்கிணங்க இப்பிரதேச மக்கள் பல்வேறுபட்ட போராட்டங்களுக்கு மத்தியிலும், நிமிர்ந்து நின்று தங்களது போராட்டத்தின் வெளியீடாக அரசிடமிருந்து நிலச் சுவீகரிப்புக்கான மாற்று நிலத்தினையும், நஷ்ட ஈட்டையும் பெற்றுக்கொண்டனர்.

அதுமட்டுமன்றி எழுவான்கரையையும், படுவான்கரையையும் பிரிக்கும் வாவிக்கரை யோரமாக இப்பிரதேசம் அமைந்திருந்ததால் யுத்தம் இப்பிரதேசத்தில் ஏற்படுத்திய வடுக்களும் ஏராளம் என்றே கூற வேண்டும். இவ்வாறு பல்வேறுபட்ட இன்னல்களைச் சந்தித்து அதனையே வெற்றியின் முதற்படியாக எடுத்து முன்னேற்றம் கண்ட புதுநகர் கிராமத்தின் வரலாறை எதிர்கால சந்ததியினருக்கு இட்டுச் செல்லும் ஆவணமாக இம்மலர் வெளிவருவது காலத்தின் தேவையாகும். எனவே இம்மலர் வெளி வர உழைத்த அனைவருக்கும் எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.


**வெ. தவராஜா S.L.A.S**
பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம்,
மண்முனை வடக்கு, மட்டக்களப்பு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை . . .

தெய்வீக அருள் நிறைந்த இயற்கை வளம் கொழிக்கும் மட்டக்களப்பின் பெருமை மிகு மண்ணிலே குறுகிய காலத்தில் தோன்றினாலும் புகழ்பூத்து நறுமணம் கமழ்ந்து நிற்கும் புதுநகரின் வரலாற்றுச் சிறப்பினையும், ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் தோன்றிய வழிமுறைகளையும் நுட்பமாக ஆராய்ந்து, கண்டறிந்து அதையொரு வரலாற்று நூலாக தொகுத்து வெளியிடுவதற்கு எமது ஆலய பரிபாலன சபையினரும் இந்நூல் வெளியிட்டுக் குழுவினரும் அயராதுழைத்து இந்த மாபெரும் நற்பணியைச் செய்திருக்கின்றார்கள். இதனால் புதுநகர் மண் பெருமை பெறுகின்றது. பின் வருகின்ற சமூதாயத்திற்கு மிகவும் உகந்ததொரு பொக்கிஷமாக இந்நூல் விளங்கும். இதற்கு ஆசி வழங்குவதில் அடியேன் பெருமையடைகின்றேன். இவர்களின் சமுக, சமய, கல்விப்பணி மென்மேலும் வளரவும், தொடரவும் இறைவனை வேண்டி, பிரார்த்தித்து எனது மனம் உகந்த நல்லாசியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

– நன்றி –

இவ்வண்ணம்
**சிவஸ்ரீ. ச.சபாரெத்தினம் குருக்கள்**
புதுநகர், ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பிரதமகுரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை . . .

ஓம் மகா கணபத்யே நமஹ

புதுநகரிலே மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றும் ஒருங்கே அமையப்பெற்று எழிலுடன் விளங்கும் புதுநகர் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் பரிபாலன சபையினது தலைமைப் பொறுப்பை கையேற்று குறுகிய காலத்துக்குள் இவ்வரலாற்று நூலை வெளியிடுவதை இட்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" எனும் கூற்றிற்கிணங்க எம் முன்னோராகிய "பொக்கர் மாரி முத்து" என்னும் சைவப்பெரியாரினால் சுமார் 80 வருடங்களுக்கு முன்னர் பிரதிஸ்டை செய்யப்பட்ட இவ்வாலயத்தை காலத்துக்கு காலம் பொறுப்பேற்ற ஆலய பரிபாலன சபையினர் தங்களின் சக்திற்கேற்ப இவ் ஆலயத்தின் வளர்ச்சியில் தங்களினது பங்களிப்பை சரிவர, திறம்பட நிறைவேற்றியுள்ளனர். இவர்களில் அநேகர் சிவபதமடைந்து விட்டனர். அவர்களின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை பிராத்திக்கின்றேன். இச்சந்தர்ப்பத்தில் ஏனையோருக்கு எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்வதுடன் விநாயகப் பெருமானின் அருளையும் வேண்டிக் கொள்கின்றேன்.

எமது ஆலயத்தில் காந்தன் குருக்களின் ஆலோசனைக்கு அமைய ஆகமவிதி முறைகளை அனுசரித்து பழைய கோயிலை முற்றாக அகற்றி அவ்விடத்தில் 1994ஆம் ஆண்டு பதவியில் இருந்த பரிபாலன சபையினதும், திருப்பணி குழுவினதும் அயராத முயற்சியினால் நிர்மாணிக்கப்பட்டதே இவ் ஆலயம் ஆகும். இக்காலப்பகுதியில் அலங்கார உற்சவம் நடைபெற்றதுடன், புனராவர்த்தன அஸ்டபந்தன மகா கும்பாபிஷேகம் 1997ஆம் ஆண்டு சிறப்பாக நடந்தேறியது.

அதன் பின் படிப்படியாக ஆலயத்தை முழுமைப்படுத்தியும், மெருகூட்டியும் வந்துள்ளதுடன் 2010ஆம் ஆண்டு இரண்டாவது புனராவர்த்தன பஞ்சகுண்ட பக்ஷ அஸ்டபந்தன மகா கும்பாபிஷேகத்தையும் நடாத்தி முடித்துள்ளனர். இவ்வேளையில் ஆலயம் வளர்ச்சியடைந்தது மாத்திரமன்றி இப்பிரதேச மக்களின் சமய, கல்வி, பொருளாதார முன்னேற்றமும் கணிசமான அளவு உயர்வடைந்துள்ளது. என்பதை இத்தருணத்தில் கூறிக்கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்னும் ஔவையாரின் திருவாக்கிற்கிணங்க புதுநகரிலே கோயில் கொண்டு, நாடிவரும் அடியார்களிற்கு நல்லருள் புரியும் விநாயகப்பெருமானின் ஆலய வரலாற்றை நூல் வடிவில் வார்ப்பதில் முக்கிய பங்கெடுத்த நூலாசிரியர் திரு.மு.வாமநாதன் மற்றும் நூலாக்க குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வண்ணம்

**கதிர்காமத்தம்பி வசந்தகுமார்** (தலைவர்)

புதுநகர் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை...

இக்கிராமத்தில் பிறந்து வளர்ந்தவன் என்ற ரீதியில் என்மனதிலும் ஒரு ஏக்கம், ஒரு தாகம் இருக்கத்தான் செய்கிறது. அன்று கல்வியில் முன்னிலை வகித்த எமது சமூகம் இன்று பின்னடைவை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. சமூக விழிப்புணர்வு ஏற்படாத தன்மையினால் சிந்தித்து செயலாற்ற வேண்டிய எமது இனம் மதியை மயக்கும் மதுவுக்கு அடிமையாகி வாழ்வை சீரழித்துக் கொண்டிருக்கிறதே என்ற கவலை என் மனதை அரித்துக் கொண்டிருக்கும் அதேவேளை வருங்கால சந்ததியினரான எமது மாணவர்களும் கல்வியில் ஊக்கமற்று திசைமாறிப் போகிறார்களே என்ற என் வேதனையும் என்னை வாட்டிட என் உள்ளத்தின் உணர்வுகளை உணர்ந்து தானோ என்னவோ நான் வணங்கும் விநாயகப் பெருமான் உள்ளம் கனிந்திட ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபையினர் நினைவில் நின்று நீங்காது நிலைத்திருக்க புதுநகரும் புதுநகர் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வரலாறும் என்னும் வரலாற்று ஆவண நூலினை வெளியிடுவது ஊருக்கே பெருமை சேர்க்கும் சேவையாகும். மேலும் இக்கிராம நலன் விரும்பிகள் ஒன்றுபட்டு ஐந்து கிராமங்களையும் உள்ளடக்கி செம்மொழி கல்வி மேம்பாட்டு ஒன்றியம் என்னும் அமைப்பினை உருவாக்கி மாணவர் கல்வியில் மேம்பாடுகளை கான விளைவது காலத்தின் கட்டாய தேவையாகவும் இருக்கிறது. இவர்களின் இந் நல்முயற்சிகள் சிறக்க வேண்டும் மென்மேலும் வளர வேண்டும் என இதயம் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு இப்படியான சமூக முன்னேற்றத்துக்கான முயற்சிகளை பாராட்ட வேண்டியதும் ஊக்கப்படுத்த வேண்டியதும் நம் அனைவரினதும் கடமையாகும்.

இவ்வண்ணம்
**ந.ஜெகதீசன்**
ஆலோசகர், செம்மொழி கல்வி மேம்பாட்டு ஒன்றியம்
புதுநகர், மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஐக்கிய சமூக நல அமைப்புக்களின் ஒன்றியத்

# தலைவரின் உள்ளத்திலிருந்து . . .

புதுநகர் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபையினரால் நெடுங்காலமாக இவ்வாலயம் பற்றிய வரலாற்றை எழுதி இப்பிரதேச மக்கள் மட்டுமல்ல, சகல மாவட்ட மக்களுக்கும் இதன் வரலாற்று உண்மையை வெளிப்படுத்தி இதன் சிறப்பையும் இப்பிரதேசத்தின் அன்று தொட்டு இன்று வரையான வரலாற்று உண்மையையும் வெளிப்படுத்த வேண்டுமென்ற எண்ணங்கொண்ட இந்த வேளையில் இதற்கான ஒரு சிறப்புக்குழுவை அமைத்து இவ்வாலயத்தையும் இப்பிரதேசத்தின் அன்றைய வரலாற்றையும் மக்கள் மத்தியில் ஆவணப்படுத்த தீர்மானித்து, ஒழுங்கு செய்யப்பட்டதற்கு முதற்கண் இவ்வாலய பரிபாலன சபைக்கு நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

இப்புத்தக வெளியீட்டு குழுவில் ஒரு உறுப்பினராய் இருக்கின்ற அதேவேளை, ஐக்கிய சமூகநல அமைப்புக்களின் ஒன்றியத்தலைவர் என்ற வகையில் இப்பிரதேசத்தில் நடைபெற்ற போராட்டங்களும், விடிவுகளும், அதன்பால் மக்களடைந்த நன்மைகளும் பற்றி தெளிவுபடுத்தி உறுதிப்படுத்த கடமைப்பட்டுள்ளேன்.

1985ஆம் ஆண்டு மட்டக்களப்பு விமான நிலைய விஸ்தரிப்பு என்ற மாயவலை திட்டத்தை வரைந்த அரசு இப்பிரதேச மக்கள் அனைவரையும் 500 மீற்றர் விஸ்தரிப்பு என்ற போர்வையில் வெளியேற்றி படுவான்கரையின் மேற்குப்புற நுழைவாயிலாக இருக்கும் இப்பிரதேசத்தை விமானப்படையணிகளமாகவும், தளமாகவும் நடாத்த திட்டமிட்டிருந்த வேளையில் ஐக்கிய சமூகநல ஒன்றியம் என்ற அமைப்பினூடே இத்திட்டமிட்ட விமான நிலைய விஸ்தரிப்பில் பாதிக்கப்படுகின்ற பிரதேசங்களான புதுநகர், வீச்சுக்கல்முனை, வலையிறவு, திமிலைதீவு, சேற்றுக்குடா, திருப்பெருந்துறை மக்களின் எதிர்கால நலம் கொண்டு எனது தலைமையில் அமைக்கப்பட்ட இவ்வமைப்போடு மிகவும் முக்கியஸ்தர்களாக என்னோடு செயற்பட்ட திரு.க.தவராஜா, திரு.க.வசந்தகுமார், திரு.த.யோகநாதன், திரு. இரா.ஜெயபாலன், திரு.தி. உதயபாலன், திரு.ம.இதயநாதன் போன்றோர்களின் மிக உயிர்ப்பணயமான பங்களிப்புடன் இத்திட்டமிட்ட விமான நிலைய விஸ்தரிப்புக்கு எதிரான மாபெரும் மக்கள் போராட்டத்தினை 19.06.2002 தினம் வெடிக்கச் செய்து மட்டுமாநகரின் சகல காரியாலயங்களையும் அதன் செயற்பாடுகளையும் முடக்கி எமது அடிப்படைக கோரிக்கைகளான,

1. 500 மீற்றர் விமான நிலைய விஸ்தரிப்பினை 250 மீற்றராக குறைப்பது.
2. பாடசாலை, ஆலயம், மயானம் என்பவற்றை பாவிப்பதற்கு உடன் தீர்வு பெறுவது.
3. இப்பிரதேசத்திலுள்ள குடிநீர் பிரச்சினையை தீர்ப்பதற்கு நிரந்தர தீர்வு காண்பது.
   (உன்னிச்சையிருந்து வந்தாறுமூலை, தாழங்குடா வரையிலான நீர் விநியோகத்திட்டத்தை அமுல்படுத்துதல்).
4. இப்பிரதேசத்தின் வீதிகள், வடிகான்களை புனரமைத்தல்.
5. விமான நிலைய விஸ்தரிப்பிற்குட்பட்ட பாடசாலைக்குப் பதிலாக புதுநகர் ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயத்தை புதிதாக அமைத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. எமது இளைஞர்களுக்கு இருந்த பிரதான விளையாட்டு மைதானத்திற்குப் பதிலாக மாற்று விளையாட்டு மைதானத்தைப் பெற உதவுதல் போன்ற கோரிக்கைகளை முன் நிறுத்தி மேற்கொண்ட தொடர் போராட்டத்தின் விளைவாக ஓரளவு வெற்றி பெற்றோம் என்றுதான் சொல்ல வேண்டும்.

இவ்வகையில் இவ்மாபெரும் போராட்டத்திற்கு ஒட்டுமொத்தமான இப்பிரதேச மக்களின் துணிவும் ஆற்றலும் ஒத்துழைப்பும், ஒற்றுமையும் என்றென்றும் பாராட்டத்தக்கது. ஏனெனில் வவுனியா தச்சங்குளம் விமான நிலைய விஸ்தரிப்பு, பலாலி விமான நிலைய விஸ்தரிப்பு போன்றவற்றிலிருந்து இன்னும் ஒரு சாண் பூமியேனும் மீட்கப்படவில்லை அவ்வகையில் எமது விமான நிலைய விஸ்தரிப்பு விடயம் மக்களை பெரிதளவில் பாதிக்காதது எமது புதுநகர் ஸ்ரீ சித்தி விநாயகரின் அருட்கடாட்சம் கிடைத்தமை எங்கள் பேறாகும்.

மேலும் எல்லாவற்றுக்கும் மேலாக எதிர்வரும் காலங்களில் எமது இளைஞர், யுவதிகள் ஆளுமையை பெறும் பொருட்டு விளையாட்டுத்துறையினையும், எமது சமூகத்தின் கலாசாரப் பண்புகளையும் மதித்து சீரிய பண்புள்ள எதிர்கால சந்ததியாக வருவதற்கு செம்மொழி கல்வி மேம்பாட்டு ஒன்றியத்தினூடே கல்வியில் ஒரு உச்சநிலையை பெற வேண்டுமென்ற எண்ணத்தைக் கொண்டு இதே பிரதேச மக்களை ஒருங்கிணைத்து செயற்பட வேண்டுமென்ற அவாவின் பால் தற்போது செயற்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

இப்புத்தக வெளியீட்டில் எனது கருத்தை வழங்க சந்தர்ப்பம் தந்த புத்தகக்குழுவிற்கும், புதுநகர் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபைக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இவ்வண்ணம்
**திரு.துரை மனோகரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எனது சிந்தனையில் இந்நூல் வெளியீடும் கல்வி மேம்பாடும்

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்"

புதுநகர் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வரலாற்றைப் பல ஆண்டுகளுக்கு முன்னரே நூலாக்கம் செய்ய தீர்மானித்திருந்தும் "அடுத்து முயன்றாலும் ஆகுநாள் அன்றி எடுத்த கருமங்கள் ஆகா" என்னும் ஔவையாரின் பொன்மொழிக்கிணங்க உரியவேளை வரும்போதுதான் இந்நூல் அச்சேற வேண்டுமென எல்லாம் வல்ல விநாயகப்பெருமான் திருவுளம் கொண்டுள்ளார் போலும். அவ்வகையில் இந்நூல் தற்பொழுது ஆக்கம் பெற்று வெளிவருவதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

இவ்வாலய வரலாற்று நூலில் இப்புதுநகர் கிராமத்தின் வரலாறும் பின்னிப் பிணைந்துள்ளது. ஒரே நேரத்தில் இரண்டு விடயங்களையும் இதைப் படிப்பவர்களால் அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும். அதனாலே இப்புத்தகத்தின் தலைப்பு "புதுநகரும், புதுநகர் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வரலாறும்" எனப் பெயரிடப்பட்டுள்ளது. சுமார் 80வருடகால இவ்வரலாற்று நூலைப் படிக்கும் மாணவர்களும், இளைஞர்களும் அரிய பல தகவல்களை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும் என்பதால் எதிர்காலச் சந்ததியினருக்கு இது ஒரு பொக்கிஷமாக திகழும் என்பது எனது தாழ்மையான கருத்தாகும்.

இவ்வரலாற்று நூலின் ஒரு முக்கிய பகுதியாக மண் மீட்புப் போராட்டமும், அதன் பலாபலன்களும், குடிநீர் பிரச்சினையும் அதற்கு போராடிப்பெற்ற தீர்வும் இடம்பிடித்துள்ளது விஷேட அம்சமாகும். போராடுவதற்குரிய சக்தியைத் தந்து அதன்மூலம் வெற்றிகளையும் பெறுவதற்கு விநாயகப்பெருமானின் திருவருள் எமக்கு துணை நின்றது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

நான் புதுநகர் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபையினதும், ஐக்கிய சமூகநல அமைப்புக்களின் ஒன்றியத்தினதும், மட்/விமான நிலைய விஸ்தரிப்பால் பாதிக்கப்பட்டோர் சங்கத்தினதும் செயலாளராக இருப்பதனாலும், மட்/கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர், செயலாளர், பொதுமுகாமையாளராக பல வருடங்கள் சேவையாற்றிய காரணத்தாலும் அநேக தகவல்களும், ஆவணங்களும், பத்திரிகைச் செய்திகளும், நிழற்படங்களும் என் கைவசம் இருந்தமையால் இவ்வரலாற்று நூலை எழுதுவதற்கு தகவல்களை சேகரிக்க இலகுவாக இருந்தது. மேலும் எமது வரலாற்று நூல் ஆக்கக்குழுவினரும் தகவல்களைச் சேகரிப்பதில் தமது பங்களிப்பைச் செய்துள்ளனர். இவ்வூர் மக்களில் சிலரும் தகவல்களையும், நிழற்படங்களையும் தந்துதவி இந்நூலை முழுமைப்படுத்த உதவி புரிந்துள்ளனர் அனைவருக்கும் எமது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்று இக்கிராமத்துக்கு "கல்வி" எனும் அறிவொளி கொடுக்க 1957இல் ஓலைக் கொட்டிலில் பாடசாலை அமைத்த முன்னோடிகளில் முக்கியமானவராக ஆனந்தா சனசமூக நிலைய, கிராம முன்னேற்றச்சங்க செயலாளரும் 1984ஆம் ஆண்டு இறைபதம் அடையும்போது புதுநகர் ஆனந்தா சனசமூக நிலையத்தின் ஆலோசகராகவும் திகழ்ந்த திரு. குமாரசாமி நாகையா அவர்கள் கண்ட கனவு கணிசமான அளவு நிறைவேறினாலும் இன்னும் முழுமையடையவில்லை என்றே கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே" என்னும் வாக்கியமும், "கைப்பொருள் தன்னில் மெய்பொருள் கல்வியே" என்னும் சொற்றொடரும், "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்", எண் எழுத்து இகழேல், நூல் பலகல், கல்வியே பெருந்தனம் என்னும் பொன்மொழிகளும் அள்ள அள்ள குறையாத கல்வியின் மகத்துவத்தையும், சிறப்பையும், பெருமையையும் பறைசாற்றி நிற்கிறது.

எனவே எமது சிறார்களும், மாணவர்களும் பெற்றோர்களும் இவ்வுண்மையை புரிந்து கொண்டு கல்விச்செல்வத்தை பெருக்கவும் அதன்மூலம் நற்பண்பும், அறிவும் கொண்ட சமூதாயத்தை உருவாக்கவும் அர்ப்பணிப்புடன் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். "கற்றதனால் ஆயபயன் என்கொல் வாலறிவன் நற்றாள் தொழார் எனின்; என்னும் வள்ளுவரின் குறளுக்கு இணங்க கல்வி கற்றதுடன் நின்று விடாமல் அறநெறி நின்று வையகத்தில் வாழ்வாங்கு வாழவேண்டும்.

இவ்வூரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் பிரபல வர்த்தகருமான திரு.நடனபாதம் ஜெகதீசன் அவர்கள் இவ்வூர் ஏழை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக பெருந்தொகை பணத்தை செலவிட்டு கல்விச் செல்வத்தைப் பெருக்க ஆவன செய்து வருகிறார். அவரின் வழியைப் பின்பற்றி இப்பிரதேசத்தின் பணம் படைத்தோரும் கல்வி வளர்ச்சிக்கு உதவ முன்வர வேண்டும். அத்துடன் இங்கு சேவையாற்றும் பொது அமைப்புக்களும் இவ்விடையத்தில் அக்கறை கொள்ள வேண்டும்.

புதுநகரிலே கல்விச் செல்வத்தை வழங்கிக் கொண்டிருக்கும் புதூர் விக்னேஸ்வரா வித்தியாலயமும், அதன் அதிபர் திரு.த.அருமைத்துரை அவர்களும் கல்வி வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் செயல்படுவது பாராட்டத்தக்கது. அத்துடன் புதிய பிரண்ட்ஸ் விளையாட்டுக் கழகமும் வருடமொருமுறை பரீட்சையில் திறமைசித்தி பெற்ற மாணவர்களுக்கு ஊக்குவிப்புக்களையும், பரிசுகளையும் வழங்கி கௌரவிப்பதும் வரவேற்கத்தக்கதாகும். தற்பொழுது அமைக்கப்பட்டிருக்கும் "செம்மொழி கல்வி மேம்பாட்டு ஒன்றியம்" கல்வி முன்னேற்றத்துக்கு தங்கள் முழுமையான பங்களிப்பைச் செய்யும் என எல்லோரும் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

இறுதியாக இந்நூலின் ஆசிரியரான முன்னாள் புதுநகர் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் தலைவர் திரு.முருகுப்பிள்ளை வாமநாதன் அவர்களின் இடைவிடாத முயற்சியினால் இந்நூல் மிகக் குறுகிய காலத்தில் வெளிவருவதையிட்டு நான் மிகவும் திருப்தியடைவதோடு எனது மனமுவந்த பாராட்டுக்களையும் அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வண்ணம்

**கணபதிபிள்ளை தவராசா** (செயலாளர்)

புதுநகர் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை . . .



எமது பிரதேச கிராமங்களின் வரலாறும் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வரலாறும் மற்றும் மட்/ புதுநகர் விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் வரலாறும் ஒருங்கமைய எழுதப்பட்ட இந்நூலின் அணிந்துரையை எழுதக் கிடைத்ததற்கு எனது நன்றியையும் மகிழ்ச்சியையும் முதற்கண் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒரு சிறந்த முன்நோக்கிய சமூதாய வளர்ச்சிக்கு, சிறந்த நற்பண்புள்ள, ஒழுக்கமுள்ள, கல்வியில் மேன்மையடைந்த சமய, சமூதாய விழுமியங்கள் தவறாத நற்பிரஜைகளின் வளர்ச்சி மிகவும் இன்றியமையாதது. இந்த வகையில் தெய்வப்புலவர், திருவள்ளுவரின் ஒரு குறள் என் ஞாபகத்திற்கு வருகின்றது.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்"

இக்குறளில் விழுப்பம் என்பது சிறப்பு" என பொருள்படும் ஒழுக்கமானது குணம், நலம், புகழ், பெருமை, உயர்வு ஆகிய சிறப்புக்களை தருவதால் ஒழுக்கம் உயிரிலும் மேலானது இவ்வாறான ஒழுக்கமுள்ளவர்கள் உலகைவிட்டு பிரிந்தாலும் அவர்கள் வாழ்ந்த வாழ்கை என்றும் நிலைத்திருக்கும்.

இங்கே எழுத்தாசிரியர் ஆலய வரலாற்றை மையமாகக் கொண்டு அதன் தோற்றம், காரணகர்த்தாக்கள், அதன் வளர்ச்சிக் காலங்களையும் பாடசாலையின் ஆரம்ப காலம், அதன் காரணகர்த்தாக்கள், ஏற்படுத்தப்பட்ட தடைகள் அதையும் தாண்டி இப்பாடசாலை வளர்ச்சியடைந்த விதங்கள் மேலும் கிராமங்களின் பண்டைய கால பெயர்கள் அது மறைந்து மருவிய பெயர்கள் இந்நிலப்பகுதி வாவிகளால் மூன்று பக்கங்களும் சூழப்பட்டிருந்தமையால் மற்றய நிலப்பரப்புக்கு போக்குவரத்துக்காக ஏற்படுத்தப்பட்ட துறைகளின் (கடவைகள்) பண்டைய பெயர்கள் அப்பெயர்கள் மறைந்து போன விதங்கள் ஆகியவற்றை ஆதாரத்துடன் எழுதியிருப்பது இந்நூலின் சிறப்பம்சங்களாகும்.

தாம் பிறந்து வாழ்ந்து கொண்டிருக்கும் கிராமங்களின் படிப்படியான வளர்ச்சிகளை அறிந்தவர்கள், அறியாதவர்கள் மேலும் எதிர்கால சந்ததியினருக்கும் அறிந்து கொள்ளக் கூடிய வகையில் ஆதாரத்துடன் மிகவும் தெளிவாக காட்டப்பட்டிருப்பது இந்நூலை மேலும் மெருகூட்டுகின்றது. இந்நூல் ஆசிரியரான திரு.மு. வாமநாதன் அவர்களின் சேவையை பாராட்டுவதோடு, அவரின் இச்சேவை தொடர எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு.த.யோகேஸ்வரன்
உபதலைவர், செம்மொழி கல்வி
மேம்பாட்டு ஒன்றியம் புதுநகர்,
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிரியர் சிந்தனையில் . . .

வரலாறு என்பது ஒரு சமூகத்தின் தாகத்தையும் உணர்வுகளையும் வெளிப்படுத்துவது மட்டுமல்ல, அது வருங்கால சந்ததியினருக்கு வழிகாட்டும் ஒரு படிப்பினை நூலாகவும் விளங்குகின்றது. இதனை எழுத்தில் வடிப்பதற்கான கடமை என்மீது கொண்ட நம்பிக்கையின் விளைவாக ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபையினர் என்னிடம் ஒப்படைத்த போது ஒருவித தயக்கம் எழவே செய்தது. கதை, கட்டுரை எழுதலாம் வரலாறு என்னும் போது பல விடையங்களையும் ஆராய்ந்து எழுதவேண்டிய ஒன்றாகையால். அவ்வகையில் திரு.க.தவராஜா அவர்களிடம் உள்ள ஆதாரங்களைக் கொண்டும், செவிவழித்தகவல்களையும் ஆராய்ந்து எழுதிட கடவுளை நம்பித்தான் காரியத்தை ஆரம்பித்தேன்.

சோதனைகள் பல வந்தாலும் மனம் தளரா தடைகளை படிகளாக்கி சாதனை படைத்த நல் உள்ளங்களின் செயற்பாடுகள் பற்றிய வரலாற்றினை பதிவு செய்வதில் பெருமித மடைகின்றேன். இந்நிலையில் சமூக, சமய மேம்பாட்டு ஆர்வத்தின் விளைவாக வருங்கால சமூதாய நலன்கருதி என் மனதில் எழும் சிந்தனைத்துளிகளை சிறு தூறலாக்கி தர விரும்புகிறேன்.

**விண்ணை கண்ணால் பார்த்தால் கண்பார்வையின் தன்மையில் தெரியும் உண்மையின் எல்லை அதுவல்ல. அப்பாலும் உண்மைகளை அறிய விஞ்ஞானமும், மெஞ்ஞானமும் விடை தேடி அலையும் நிலையில் காலம்காலமாக எதை எதையோ தேடியோடி நாம் கண்ட முடிவென்ன?** எதையெதையோ சாதிக்க நினைத்தோம் எதனையோ எதிர்பார்த்தோம் அது கிடைத்ததா? நம் எண்ணம் நிறைவேற சமூகம் நல்ல பலன் அடைந்ததா? என்னும் கேள்விக்கு விடை தேட வேண்டியவர்களாகவே நாம் இருக்கின்றோம்.

இன்று ஆலயங்கள் அழகு பெற்று செயற்பாடுகள், கிரியைகள் விரிவு பெற்று கிராமத்துக்கு பெருமை சேர்த்தாலும் மறுபக்கத்தைப் புரட்டி பார்த்தால் மக்கள் தொகை பெருகியுள்ளது. ஆனால் நமது சமயத்தை பின்பற்றும் மக்களின் விகிதாசாரம் பெருகியுள்ளதா? அல்லது அதே அளவிலாவது இருக்கிறதா? என்றால் ஆம் என்று சொல்லும் நிலையில் எவரும் இல்லை என்பதே உண்மை அதனால் நமது பெருமையை மட்டும் எழுதாது நம் பலவீனத்தின் பக்கத்தையும் சற்றுப்புரட்டி பார்க்க முனைகின்றேன்.

இன்று நமது சமயத்தவர்கள் பிற மதத்துக்கு மாற்றப்படுகிறார்கள் என்பது நம் பலரினதும் ஆதங்கமாகி விட்ட நிலையில் நாம் மக்கள் உணர்வுகளைத் தூண்டாது பிறர்மீது குற்றம் சுமத்தாது நம்மவர் மாறக் காரணமாக இருப்பது எது என்பது பற்றி சிந்திப்பதே அறிவுடமையாகும்.

மக்கள் சேவையே மகேசன் சேவையென வழிவந்த நாம் அதை மறந்து ஆலய தேவைக்கு மட்டும் மக்களைப் பயன்படுத்தி விட்டு அவர்களுக்கு வழிகாட்டியாகவோ நலம்பேணும் அமைப்பாகவோ செயற்படாது அவர்களை தனிமைப்படுத்தி நம்மிடம் இருந்து பிரித்து விடுகிறோம் என்பதே பலரினதும் ஆதங்கமாக இருக்கிறது. தண்ணீர் தேடி தாகத்தால் அலையும் மக்கள் அது கிடைக்கும் இடம் தேடி ஓடுகிறார்கள் என்றால் அதை தடுக்கவோ அவர்கள் தாகம் தீர்க்கவோ நாம் வழி தேடாது சமயத்தின் பெயரால் இருக்கும் ஆலயத்தை மென்மேலும் இடித்துக்கட்டி அழகு பார்ப்பதில் பணத்தையும் காலத்தையும் செலவிடுகிறோம்.

இது சரியா? தவறா? என்னும் சிந்தனையைத் தவிர்த்து யதார்த்தத்தை நோக்கினால் சமயம் சமூகத்துக்கு ஆற்ற வேண்டிய கடமைகள் பற்றி நாம் சிந்திக்காது நாம் வாழாதிருப்போமாயின் வரும்காலத்தில் கலைப் பொக்கிஷங்களாக ஆலயங்கள் இருக்கும். அங்கே வந்து வழிபடும் மக்கள் இருப்பார்களா? என்பது பற்றியும் சிந்தித்து காலத்துக்கு ஏற்ற மாற்றங்களை செய்ய வேண்டியது நமது கடமை என உணர்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாழ வழியமைத்து வாழ்க்கைக்கு வரம்பமைத்து அளவற்ற ஆன்மீக தத்துவ உண்மைகளை தன்னுள்ளடக்கி சமயங்களின் தாயாகிய நமது சமயத்தில் மறைந்திருக்கும் மறை பொருள் அறியா, உடைத்திடும் தேங்காய்க்குள் ஒரு மரம் ஒளிந்திருக்கும் அதிசயத்தின் ரகசியம் அறியா, உண்மைக்குள் உண்மையைத் தேடாது** மனித மனம் மயக்கமுற்று காலம் வகுத்த பல மாற்றங்களால் பல வித புதிய நடைமுறைகள் உள் ஈர்க்கப்பட்டு கனியை விட்டு தோலை சுவைக்கும் நிலைக்கு பக்தி பலவீனமாக்கப்பட நமது சமயத்தாயின் தோற்றத்திலும் பல மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கிறது.

சமயத்தின் நோக்கம் பக்தி வழி சென்று மக்கள் பாவங்கள் செய்யாது வாழ வழி காட்டுவதாக சமூகத்துக்கு பயனளிப்பதாகவும் இருக்கவேண்டும் என்பதற்காகவே நம் முன்னோர்களாகிய முனிவர்கள், ஞானிகள், மகான்கள் எனப் போற்றப்படுவோர் கடவுளால் உணர்த்தப்பட்டதை மக்களுக்கு போதித்தனர். இப்போதனைகள் காலத்தால் சடங்கு முறைகளுடன் இணைக்கப்பட்டு பொழுதுபோக்கு அம்சங்களுடன் கலந்துவிட மக்களுக்கு அது மகிழ்வைத் தந்தது. இது பாவங்கள் பெருகாத அன்றைய சமூகத்துக்கு அது தேவையானதாக இருந்தாலும் இன்றைய நிலையில் இவை சமூக, சமய மேம்பாட்டுக்கு பயனுள்ளதா? என்பதையும் சிந்தித்துப் பார்க்கின்றேன்.

ஒரு சமூகத்தின் வளர்ச்சி அவர்கள் கல்வியிலேயே தங்கியுள்ளது என்பதற்கிணங்க மாணவர்களுக்கு கல்வி அறிவூட்டுவதில் கிராமத்தில் மேற்கொண்டு வரும் முயற்சி பெருமிதம் அளித்தாலும் கல்வியினால் பெறும் அறிவு நல் வழி செல்ல வேண்டும். வழிந்தோட வாய்க்கால் இல்லா வரும் நீர் பயனற்று களைகளை உருவாக்கும். **வாய்க்கால் அமைத்து பாய்ச்சலிடும் நீர் பயிர்செழிக்கப் பயன்பட்டு நற்பலன் தரும். மனித அறிவும் நல்வழி என்னும் வாய்க்காலினூடாக சென்றால் மட்டுமே மானிடப் பயிர் மேன்மையடையும்.** அவ்வழி சென்று நம் முயற்சிகள் பயன்பட வேண்டும் என்னும் கருத்தினை முன்வைத்து

**வானத்தில் கண்சிமிட்டும் விண்மீன்கள்
வையகத்தில் இருள் அகற்றப்போதாது
உலகுக்கு ஒளி கொடுக்கும் சூரியனாய்
இதமாக காய்கின்ற சந்திரனாய்
மானிடரில் உருவாக வேண்டும்
சமுதாய இருள் நீங்க வேண்டும்
உண்மை இதை உணர்ந்த பின்பும்
மனமே மௌனமாக இருப்பது ஏன்?
சூரியனாய் சந்திரனாய் மாற நீ வேண்டாம்
அகல்விளக்காய் மாறியேனும்
ஒளி கொடுக்கக் கூடாதா?
மானிடராய் பிறந்து என்ன பயன் கண்டாய்?
நீ வாழ வேண்டும் உன்னால் பிறர் வாழ வேண்டும்
நீ பேச வேண்டும் உன்பேச்சில் அறம் வாழ வேண்டும்
நீ போகும் பாதை நல்வழியாக வேண்டும்
அவ்வழி நாடி மக்கள் உயர்வினைக் காண வேண்டும்**

என்னும் இலக்கே நம் நோக்கானால் வருங்கால சமுதாயம் பெருமை பெறும் வரலாறு படைக்கும் என்பது திண்ணம்.

அன்புடன்

**திரு. மு.வாமநாதன்** (நூலாசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுநகருக்குள் புகமுன்

## வரலாறு கூறும் பண்டைய மட்டக்களப்பு

இயற்கை வளங்களும் எழிலூட்டும் வாவிகளும் தன்னகத்தே கொண்டு மீன்பாடும் தேனாடு என புகழ் பூத்து விளங்கும் மட்டக்களப்பு மாவட்டம் பண்டைய நாளில் வடக்கே வெருகல் தொடக்கம் தெற்கே குமுக்கன் ஆறுவரை பரந்து தென்கிழக் கிலங்கை என்னும் பெயர் பெற்று விளங்கியது. இதன் தலைநகரமாக கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்தே மட்டக்களப்பு நகரம் விளங்கியதாக வரலாறுகள் கூறுகின்றன.

கி.மு. 543ஆம் ஆண்டு இந்தியாவின் லாலா நாட்டிலிருந்து வந்த விஜயன் இலங்கைக்குள் நுழைவதற்கு முன்னர் இலங்கை முழுவதும் நாகர், இயக்கர் என சாதிப்பெயரால் அழைக்கப்படும் திராவிடர் என்னும் தமிழர் பரந்து வாழ்ந்தனர் என்றும் கி.மு. 5ஆம் நூற்றாண்டு காலம்வரை இப்பகுதியில் நாகர் இனத்தவரின் ஆட்சி நிலைத்திருந்ததாகவும் ஆரியரின் வருகையின் காரணமாக பரந்து வாழ்ந்த இவர்கள் வடக்கு, கிழக்குப் பகுதிகளை நோக்கி நகர்ந்து குடியிருப்புக்களை அமைத்துக் கொண்டனர் என்றும் வரலாறுகள் தெளிவுறுத்துகின்றன.

கி.மு. 237–215 வரை ஆட்சி செய்த கூத்தன் என்னும் தமிழ் மன்னனே இத்தலை நகரை உருவாக்கி தமிழ் குடிகளை குடியேற்றினான். இதற்கு முற்பட்ட காலத்தில் காடாக இருந்த இப்பிரதேசத்தில் இந்தியாவிலிருந்து வந்த திராவிட மக்கள் குடியேறி மீன்பிடித்தல், விவசாயம் ஆகிய தொழில்களைச் செய்து வாழ்ந்து வந்தனர். இவர்களில் சிலர் வாவியில் ஓடம் செலுத்திய போது தென்திசைக்கு அப்பால் ஓடம் செல்ல முடியாதிருப்பதைக் கண்டு இது மட்டும் மட்டடா, மட்டக்களப்பா எனக்கூறியதன் காரணமாக அவ்விடத்திற்கு மட்டக்களப்பு என அழைக்கப்பட்டது.

அநுராதபுரியை இராசதானியாக கொண்டு ஆட்சி செய்த கூத்தன் அல்லது கூத்திகன் என அழைக்கப்படும் அரசன் தன் ஆட்சிக்காலத்தில் சிங்காரத்தோப்பு என்னும் பூஞ்சோலையொன்றை அமைத்து அதன் மேற்கேயுள்ள வாவியை, கல், மண் கொண்டு மூடுவித்து அவ்விடத்தில் அரச மாளிகையொன்றை நிர்மானித்து, பல வீதிகளையும் அமைத்து தன் படைப் பிரிவொன்றையும் களப்பு முனையிலே காவலுக்கு வைத்தான். வீரர்முனை என அழைக்கப்பட்ட இவ்விடம் தற்போது வீரமுனை எனவும், அரசமாளிகை யிருந்த இடம் மட்டக்களப்பு எனவும் பின்னர் அழைக்கப்பட்டது. இம்மாளிகையும் காலத்தால் அழிவுற்று காடாகிய போது அவ்விடம் மாளிகைக்காடு என அழைக்கப்பட்டு இன்றும் அப்பெயரே நிலைத்து விட்டது.

மட்டக்களப்பில் தமிழர்களுக்கென இராசதானியை அமைத்து தமிழையும் சைவத்தையும் வளர்த்து ஆட்சி செய்த இவ்வரசனின் காலத்தில் மட்டக்களப்பு சிறப்புற்று விளங்கினாலும் கி.மு. முதலாம் நூற்றாண்டு காலப்பகுதியில் துட்டகாமினியின் ஆட்சியின் போது தன் பொலிவை இழந்தது.

கி.பி. 362இல் இருந்து 391ஆம் ஆண்டு வரை அநுராதபுரியை ஆட்சி செய்த மகாசேனனின் மகனான மேகவண்ணனும், மட்டக்களப்பு அரசனான குணசிங்கனும் நட்புடையவர்களா யிருந்தனர் இவர்கள் ஆட்சிக் காலத்தில் மண்முனை என்னும் அரசியல் பிரிவு உருவாகியது. இம்மண்முனைப் பிரிவை தலை நகராகக் கொண்டு ஆட்சி செய்த உலக நாச்சியாரின் காலத்தில் இருந்து 12ஆம் நூற்றாண்டு மாகோன் என்னும் மன்னன் காலம் வரை பல தமிழ் மன்னர்கள் ஆட்சி செய்து வந்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துட்டகாமினியின் ஆட்சியின் பின் வந்த அநுராதபுரி மன்னன் சோரநாதனின் ஆட்சிக்காலத்தில் மட்டக்களப்பை தலைநகரமாகக் கொண்டு தமிழ் சிற்றரசர்கள் பலர் இங்கு ஆட்சி செய்தனர். கி.பி. 8ம், 9ம் நூற்றாண்டுகளில் இலங்கை பாண்டிய நாட்டுடன் அரசியல், சமய, கலாச்சார தொடர்புகளைக் கொண்டு விளங்கியதாக கூறும் வரலாற்றுப்பதிவேடுகள் கி.பி. 10ம், 11ம் நூற்றாண்டுகளில் சோழர்களின் ஆட்சி நிலவிய போதும் 12ம் நூற்றாண்டில் மாகோன் என்னும் கலிங்க மன்னன் ஆட்சி செய்த போதும் முக்கிய நகரங்களிலொன்றாக மட்டக்களப்பும் விளங்கி வந்துள்ளது. இந்நிலை 1455ஆம் ஆண்டு வரை நீடித்துள்ளது பற்றியும் மட்டக்களப்பு பற்றிய வரலாறுகளிலிருந்து அறியமுடிகிறது.

கி.பி. 16ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் பிரசன்னசித்து என்னும் தமிழ் அரசனால் உன்னரசு கிரி என்னும் புதிய அரசியல் பிரிவு உருவாக்கப்பட்டு கலிங்க அரசனான புவனேய கஜபாகுவுக்கு அளிக்கப்பட்டது. இக்காலம் முதல் கிழக்கிலங்கையில் இரு அரசுகள் இயங்கி வந்தன என்பதை நா. நவநாயகமூர்த்தி வரலாற்று ஆசிரியர் எழுதிய பண்டைத்தமிழர் பண்பாட்டுக்கோலங்கள் கலாநிதி F.X.C நடராஜா அவர்களின் பண்டைத்தமிழர் பண்பாடு என்னும் நூல்களில் உள்ள தகவல்கள் வெளிப்படுத்துகின்றன.

இலங்கையில் ஒல்லாந்தருக்கு முன் ஆட்சிசெய்த போர்த்துக்கேயர் 1626ஆம் ஆண்டு கோட்டையொன்றை அமைக்க ஆரம்பித்தனர். அது முடிவுறாத நிலையில் இலங்கையை கைப்பற்றிய ஒல்லாந்தர் தாங்களும் கோட்டை கட்டுவதற்கு பொருத்தமான இடமாக போர்த்துக்கேயர் கோட்டை கட்டிய இடத்தையே தெரிவு செய்து 1682இல் அதை பாதுகாப்பு அரனாகக்கட்டி முடித்தனர். அதன்பின்னர் வாவியின் வடக்குப்பகுதியே மட்டக்களப்பு எனப் பெயர்பெற்றது. அக்கோட்டையே தற்போது மட்டக்களப்பு கச்சேரியாகவும், மாவட்ட செயலகமாகவும் விளங்குகிறது.

பின்நாளில் இலங்கையை கைப்பற்றிய போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என ஆட்சி செய்தவர்களால் அபிவிருத்திகள் பல நடைபெற்றதுடன் அரசியலில் மாற்றங்களும் ஏற்பட்டன. ஒல்லாந்தர் கோட்டையை தலைமையகமாகக் கொண்டு இயங்கி வந்த மட்டக்களப்பு மண்முனை நிருவாக எல்லைக்குள் அடங்கும் மண்முனை வடக்குப் பிரிவில் தற்போதைய புதுநகரை மையமாகக் கொண்ட நிலப்பரப்பின் ஒரு பகுதியில் இந்தியாவில் இருந்து வந்த திமிலர் குடியேறியதாகவும், அவ்விடம் திமிலதீவு என அழைக்கப்பட்டதுடன், இந்நிலப்பரப்பின் கரையோரப்பகுதியில் தங்கள் மீன்பிடி வலைகளை கட்டி உலர்த்திய இடம் வலைகட்டறவு என அழைக்கப்பட்டதுடன் மேலும் மீன்களை உலர வைத்து கருவாடாக்கி அநுராதபுரிக்கு கொண்டு சென்று விற்பனை செய்த இவர்களுக்கும் வட இந்தியாவில் இருந்து வந்து குடியேறி மரவியாபாரம் செய்த முக்குவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலின் விளைவாக தோல்வியுற்ற முக்குவர்கள் ஆப்காஸ்தானிலிருந்து வியாபார நிமித்தம் வந்த பட்டாணியர்களைக் கொண்டு திமிலர்களைத் தோற்கடித்ததாகவும் கூறும் வரலாற்றின் மூலம் புதுநகரை உள்ளடக்கிய இந்நிலப்பரப்பும் பண்டைய வரலாற்றில் முக்கியத்துவம் பெறுகின்றதெனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்ந்த நகரின் உறங்கும் நினைவுகள்

நாற்திசையும் கடல் சூழ் இலங்கைத்தீவில் ஒன்பதில் ஒன்றாம் கிழக்கு மாகாணம். அதில் மீன்பாடும் தேனாடாம் என புகழ்பாடும் மட்டுமா நகர் அதன் கிழக்கே கடல் வளமும் அகத்தே வாவிகளும், விவசாய பயிர்ச்செய்கை விளை நிலமும் அவைதரும் கொடையால் வளம் கொழிக்கும் திருநாட்டில் அமைந்திருக்கும் புதுநகராம் பூமியிலே பக்தர் மனம் மகிழ பக்தி மணம் பரப்பி அருள்பாலிக்கும் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் நடுநாயகமாக அமைந்திருக்க அதன் இடது புறம் அமைந்திருக்கும் விமான நிலையம் இப்புதுநகருக்கும் மட்டு மாநகருக்கும் பெருமை சேர்க்க மறுபுறம் புதூர் விக்கினேஸ்வரா வித்தியாலயம் மாணவர்களுக்கு கல்வியறிவூட்ட, மாநகர சபையின் கீழ் இயங்கும் நூல் நிலையம் அறிவுக் களஞ்சியமாய் திகழ, முன்பள்ளிகள் மூன்று, பாலகர்களின் ஆரம்பக் கல்வியறிவினை வளர்க்க, அருகே திரௌபதை அம்மன் ஆலயம் அழகுடன் மிளிர இந்நகரின் போக்குவரத்து மிகுந்த சாலையின் இருபுறமும் பல அங்காடிகள், தொழில் நிலையங்கள், உணவகங்கள், எரிபொருள் நிரப்பு நிலையம், பால் சேகரிப்பு நிலையம், மக்கள் வங்கி, உப தபால் நிலையம் என யாவும் அமைந்து சிறு நகரமாகி மக்கள் தேவையினை பூர்த்தி செய்ய ஆரம்பத்தில் புதுஊராக இருந்த இக்கிராமம் இன்று "புதுநகர்" என பொலிவு பெற்று விளங்குகின்றது.

சீரும் சிறப்பும் பெற்று விளங்கும் இவ்வூர் அன்று எப்படியிருந்தது என சிந்தனையை பின்நோக்கிப் பார்ப்போமானால் அறிவுக்கெட்டியவரை சுமார் 100 வருடங்களுக்கான ஏட்டினைப் புரட்டினால் அன்று மட்டக்களப்பு மாவட்டத்தை நிர்வகிக்கும் நிருவாக கட்டமைப்பு மையம் ஒல்லாந்தரால் கட்டப்பட்ட கோட்டையில் இயங்க நாற்புறமும் வாவியால் சூழப்பட்ட புளியந்தீவு நகரமாய் விளங்கியதுடன் பின்னர் ஆங்கிலேயரின் பாதுகாப்பு அரணாகவுமிருந்தது.

புளியந்தீவு கோட்டையை அண்மித்த சுமார் 500 மீற்றர் தூரத்தில் அமைந்திருந்த "ஆயித்தியன் காடு" என்னும் பகுதியில் இன்று போதனா வைத்தியசாலையாக விளங்கும் வைத்தியசாலை அன்று சிறுகட்டிடத்தில் மருந்தகமாக இயங்கி வந்தது.

அப்போதைய ஆட்சி நிருவாகத்தில் முக்கிய பதவி வகித்த திரு.நல்லையா அவர்களால் புதிதாக நோயாளர் விடுதி ஒன்றினை அமைத்து வைத்தியசாலையை விஸ்தரிக்கும் நோக்கில் அங்கு வாழ்ந்து வந்த மக்களை வேறொரு இடத்திற்கு குடியமர்த்த வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்போது அவர்களால் தெரிவு செய்யப்பட்டு 1946இல் மக்கள் குடியமர்த்தப்பட்ட இடமே "புதூர்" என அழைக்கப்பட்டது.

புளியந்தீவை சூழ்ந்திருக்கும் வாவியைக் கடந்தால் மேற்கே வரும் நிலப்பரப்பிலே அம்மக்களை குடியமர்த்த தீர்மானிக்கப்பட்டது. மூன்று திசைகளாலும் வாவியால் சூழப்பட்டிருக்கும் அந்நிலப்பரப்பினை புளியந்தீவு நகருடன் இணைக்கும் முகமாக 1915ம் ஆண்டு ஆட்சி செய்த ஆங்கிலேயர்களால் வாவியின் குறுகிய இடைவெளி மண்நிரப்பி வீதியாக அமைக்கப்பட்டது. வீதியால் இணைக்கப்பட்ட இந்நிலப்பரப்பினுள் வாவியை அண்டிய பகுதியாக சேற்றுக்குடா, வீச்சுக்கல்முனை, திமிலைதீவு, வலைகட்டிறவு, பெரியதுறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய கிராமங்கள் ஒரு விதானையாரின் நிருவாகப் பிரிவின் கீழ் இயங்கியது. இன்றைய கிராமசேவை உத்தியோகத்தரின் அதிகாரங்களை விட கூடுதலான அதிகாரங்கள் அன்றைய விதானைமாருக்கு வழங்கப்பட்டிருந்தன.

ஆற்றினூடாக வரும் வீதி வழி வந்தால் அடையும் அவ்விடம் சுமைதாங்கி எனப்படும். அன்று நிலமட்ட அளவையாளர்களால் மேடாக இருந்த எழுவான் கரையில் உள்ள ஆனைப்பந்தி திடலும், படுவான் கரைப்பகுதியில் உள்ள ஆயித்தியமலைத்திடலும் சம உயரத்தில் இருக்க அதற்கு இடைப்பட்ட பகுதி தாழ் நிலப்பிரதேசமாக இருந்ததால் அவற்றின் உயர அளவை மட்டப்படுத்தி வெள்ளக்காலத்தில் வெள்ள நீர்மட்டத்தினை அளவிடுவதற்காக வவுணதீவில் தூண் ஒன்றும் (பின்னர் அவ்விடம் தூணடி என்றும் அழைக்கப்பட்டது) ஆற்றினைக் கடக்க அமைக்கப்பட்ட வீதியும் வீச்சுக்கல்முனை வீதியும் சந்திக்கும் இடத்திலும் ஒரு கட்டு அமைக்கப்பட்டது ஆறு அடி உயரத்தில் அமைந்திருந்த அந்த "கட்டு" விறகு வெட்டி அவைகளைச் சுமந்து வருபவர்களும், கன்னன்குடா பகுதியில் இருந்து அரிசி, மரக்கறி, தயிர் விறகு இவைகளை நகருக்கு விற்பனைக்கு கொண்டு செல்லுபவர்களும் தங்கள் சுமைகளை அந்த கட்டின் மீது இறக்கி வைத்து இளைப்பாறுவதனால் அவ்விடம் "சுமைதாங்கி" என அழைக்கப்படலாயிற்று.

சுமைதாங்கியின் தென்மேற்கே அமைந்துள்ள பகுதி சேற்றுக்குடாவாகும். இக்கிராமத்தின் பெயர் பழைய உறுதி பதிவேடுகளில் "எள்ளுச்சேனை" என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் இங்கு வாழ்ந்த மக்கள் எள்ளை சேனைப்பயிராக செய்து வந்துள்ளனர் என அறியமுடிகிறது. இப்பகுதியில் இறால் வகைகளின் பெருக்கம் அதிகமாக உள்ளதனால் மக்கள் "கரப்பு" என்னும் சாதனத்தினால் கூட்டமாக நிரையில் நின்று மறித்துக்கட்டி இறால்களைப் பிடித்தனர். இங்கு பிடிபடும் மட்டுறால் விலையுயர்ந்ததாகும். கரப்பு என்பது மேலே சிறிய வட்டமும் கீழே பெரிய வட்டமும் அமையும் வகையில் வெப்பந்த மரத்தின் கொடியினால் உள்வட்டங்களை அமைத்து, கரையாக்கன் மரத்தின் மெல்லிய கம்புகளைக் கொண்டு அமைக்கப்பட்ட ஒரு கருவியாகும். இதனை ஆற்றில் ஊன்றி சிறிய வட்டத்தினுள் கையை விட்டு அதனுள் அகப்பட்ட மீன்கள், இறால்களைப் பிடிப்பர் இதனால் இப்பகுதி "கட்டுமடு" என்றும் அழைக்கப்பட்டது. இக்கட்டுமடுப் பகுதியில் சேறு உள்ள காரணத்தினால் பின்னாளில் இக்கிராமம் "சேத்துக்குடா" எனப் பெயர் பெறலாயிற்று.

சேத்துக்குடாவின் தென்பகுதியில் இருப்பது வீச்சுக்கல்முனையாகும். இக்கிராமத்தின் முனைப்பகுதியிலே ஆற்றின் நடுவில் பரந்த கல் ஒன்றுள்ளது. இதனை "வெள்ளைக்கல்" என அழைப்பர் இதில் மீன்பிடித்தொழிலில் ஈடுபடுவோர் இரவு வேளையில் உணவருந்தவும், ஓய்வெடுக்கவும் பயன்படுத்துவர். இக்கல் வாவியின் முனைப்பகுதியில் அமைந்துள்ளதனால் இவ்விடத்தை கல்முனை என்றும் இது வீச்சுகத்தொழிலாளருக்கு பயன்படுவதனால் பின்னாளில் இக்கிராமத்தை வீச்சுக்கல்முனை என்றும் அழைத்தனர். இங்கு வாழ்ந்த சில குடும்பங்கள் தங்கள் வாழ்வாதாரத் தொழிலாக மீன்பிடித்தொழிலையே செய்து வந்தனர். பல ஆண்டுகளுக்கு முன்னர் இவர்களால் அமைக்கப்பட்டு வழிபட்டு வந்த மாதாகோவிலில் நடக்கும் வருடாந்த திருவிழா பூசையில் பல இடங்களிலும் இருந்து வரும் மக்கள் கலந்து கொண்டு ஆராதனையில் ஈடுபடுவர். இக்காலப்பகுதியில் றோமன்கத்தோலிக்க சபையின் நிருவாகத்தில் முன்பள்ளி பாடசாலை ஒன்றும் இயங்கி வந்துள்ளதையும் அறியமுடிகிறது.

வீச்சுக்கல்முனைக்கும் சேற்றுக்குடாவிக்கும் இடைப்பட்ட வாவியின் கரையோரப் பகுதியில் முன்னர் ஒரு துறை இருந்ததாகவும் இதுவே இங்குள்ள மக்கள் புளியந்தீவை சென்றடைவதற்கான போக்குவரத்துப்பாதையாக பயன்பட்டதாகவும் இந்நிலப்பரப்பைச் சுற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல துறைகள் இருந்தமையால் இத்துறையில் படகுச்சேவையை செய்து வந்த சவரி என்பவரின் பெயரால் இத்துறை அடையாளப்படுத்தப்பட்டு சவரியின் துறை சவரித்துறையாக மாற்றம் பெற்றதாகவும் அறியமுடிகிறது.

இத்துறையில் இருந்து செல்லும் மக்கள் எதிர்முனையில் உள்ள பரிசாரியார் முனை சென்று புளியந்தீவை அடைந்தனர். தற்போது வாவிக்கரை –2 வீதியில் அமைந்துள்ள ஒருபகுதியே பரிசாரியார் முனையாகும். இங்கு பரிசாரியார் இருவர் இருந்ததனால் இப்பெயர் உண்டாயிற்று.

வீச்சுக்கல்முனையை தாண்டிச்சென்றால் வருவது திமிலைத்தீவு கிராமமாகும். தென் இந்தியாவில் இருந்து வந்து மட்டக்களப்பில் குடியேறிய "திமிலர்" என அழைக்கப்படும் இனத்தவர் மீன்பிடித்தொழிலின் நிமித்தம் வந்து குடியேறிய இடம் திமிலைத்தீவு என அழைக்கப்படுகிறது. இவர்கள் இங்கே விஷ்ணு ஆலயம் ஒன்றினை அமைத்து வழிபட்டு வந்தனர் என மட்டக்களப்பு வரலாறு அறிமுக நூலிலிருந்து அறியக் கூடியதாகவுள்ளது. இவ்வாலயம் முக்குவர்களின் செல்வாக்கினால் அழித்து தரைமட்டமாக்கப்பட்டது. புதர் மண்டிப்போன இப்பகுதியில், மண்முனைப்பற்று பிரிவுக்கு நிலமைப்பட்டம் பெற்று விளங்கிய வேலாப்போடியார் வாழ்ந்து வந்ததாகவும் அவரால் ஸ்தாபிக்கப்பட்ட ஆலயம் அவரின் மகன் சின்னையா விதானையார் என்பவரால் விஸ்தரிக்கப்பட்டதாகவும் அறியமுடிகிறது. இக்கிராமத்தின் தென்பகுதியில் ஆற்றைக் கடந்தால் அப்பாலுள்ள கன்னன்குடா மற்றும் ஏனைய கிராம மக்களும் தங்கள் பொருட்களை விற்பனை செய்ய வருவதற்கும், விஷ்ணு ஆலய வழிபாட்டில் கலந்து கொள்ளவருவதற்கும் திமிலைதீவில் அமைந்துள்ள ஆற்றின் துறையையே பயன்படுத்தி வந்தனர். வீச்சுக்கல்முனையிலிருந்து இக்கிராமம் வரை நீண்டுள்ள சோதையன்கட்டு என்னும் அணை ஆற்றுவெள்ளம் கிராமத்துக்குள் புகாமலிருக்க சோதையர்களால் கட்டப்பட்டதாகவும் அறிய முடிகிறது.

இக்கிராமங்களின் நிலப்பரப்பு மூன்று பக்கங்களினாலும் வாவியால் சூழப் பட்டிருந்தாலும் பெரியதுறையின் வடக்கேயுள்ள பகுதி நிலத்தொடர்பினை ஏற்படுத்தும் பகுதியாக விளங்கியது. வீதிகள் அமைக்கத்தேவையான கிறவல் மண்ணை கொண்ட பகுதியாக இது இருந்ததனால் கிறவல் மண் தோண்டிய குழிகள் பல காணப்பட்டன. பல நூறு ஆண்டுகளுக்கு முன் இக்கிராமத்தில் வாழ்ந்த மக்கள் கொள்ளை நோயாகிய வயிற்றோட்டம், அம்மைநோய் வந்து இறக்கவே அவர்களில் பலர் கிராமத்தை விட்டு வெளியேறிவிட அக்கிராமமே அழிவுற்றது. அவர்கள் அன்று வணங்கி வந்த ஆலயத்தின் இடிபாடுகளின் எச்சம் இவற்றுக்குச் சான்று பகர்கிறது. அன்று இப்பகுதியில் பெரியதுறை ஒன்றிருந்ததாகவும் அதன் பெயராகவே அக்கிராமம் பெரியதுறைக் கிராமம் என அழைக்கப்பட்டதாகவும் அறியமுடிகிறது.

அந்நாளில் மக்களை வாட்டி வதைத்த கொள்ளை நோய்களுக்கு உரிய மருந்து இன்மையால் தொற்று நோய்களுக்கு ஆளாகிய மக்கள் வகை தொகை இன்றி இறந்தனர். இதனால் நோயால் பீடிக்கப்பட்டவர்களின் உடமைகள் மட்டுமன்றி அவர்கள் குடியிருந்த குடிசைகளும் எரிக்கப்பட்டன. இது மக்களை இடம்பெயரவும் வைத்தது. இப்படியான காலப்பகுதியில் வாழ்ந்த அப்பகுதியில் உள்ள மக்கள் அம்மை நோய் தீர அந்நோய் தீர்க்கும் தெய்வமாக மாரியம்மனைக் கருதி, அம்மன் தாலாட்டு பாடினால் நோய் தீரும் என்ற நம்பிக்கையின் விளைவாக பெரியதுறை நிலத்தொடர்பினை ஏற்படுத்தும் நுழைவாயிலில் அமைக்கப்பட்ட மாரியம்மன் கோயில் பின்னாளில் கொத்துக்குளத்து மாரியம்மன் கோயில் என அழைக்கப்பட்டது. என்பது செவிவழிச் செய்தியாகும். அழிவின் பின்னர் இங்கு குடியேறிய மக்கள் முன்னர் ஆலயம் இருந்த இடத்தில் முருகக் கடவுளுக்கு ஆலயம் அமைத்து வழிபட்டு வந்ததுடன் கிராமத்தின் பெயரையும் "திருப்பெருந்துறை" எனவும் மாற்றிக் கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பகுதியில் அன்று வாழ்ந்த மக்கள் தாங்கள் வணங்கும் தெய்வத்திற்கு சித்திரவேலாயுத சுவாமி என பெயர் வைத்து ஆலயம் அமைத்து வழிபட்டு வந்தனர். அப்போது தலைவராக இருந்த சித்திரவேல் என்பவர் திருவிழாக் காலங்களில் தென் இந்தியாவிலிருந்து சின்னமேளம் என அழைக்கப்படும் நாதஸ்வரக் குழுவினரை அழைப்பித்து திருவிழாவை சிறப்பித்து வந்தார். பொழுது போக்கு அம்சங்கள் குன்றிய அக்காலத்தில் நடைபெற்று வந்த இந்நிகழ்ச்சியைக் காண ஏராளமான மக்கள் பல கிராமங்களிலிருந்து மாட்டு வண்டிகளில் வந்து கண்டு கழித்துச் சென்றனர். இக்கிராமமும் ஆலயமும் அழிவுற்றாலும் அது மீண்டும் சிறப்புப்பெற்று திருப்பெருந்துறை என்னும் பெயருடன் விளங்குவது பெருமையே.

பெரியதுறைக்கு தெற்காகவும் திமிலைதீவிற்கு மேற்காகவும் அமைந்துள்ள கிராமமே வலைகட்டிறவாகும். இங்கு வாழ்ந்த மக்களுடன் நற்பிட்டிமுனையில் அமைந்துள்ள "கிரவந்தியன் மேடு" என்னும் பகுதியில் உள்ள மக்கள் தொழில் நிமித்தம் வந்து இங்கு குடியேறியும் திருமணபந்தத்தில் ஈடுபட்டும் வாழ்ந்தனர். இக்கரையோரப்பகுதியில் மீன்பிடித்தலே பிரதான தொழிலாக இருந்ததினால் மீனவர்கள் தங்கள் மீன்பிடிவலையை கட்டி உலர்த்தினர் இதனால் இவ்விடம் "வலைகட்டிறவு" என்னும் பெயர் பெறலாயிற்று பின்னாளில் இப்பெயர் மருகி " வலையிறவு" என அழைக்கப்பட்டது.

இப்பகுதியில் விவசாயத்தில் ஈடுபட்ட போடிமார் பலரும் செல்வாக்குடன் வாழ்ந்தனர். இவர்களுள் சிக்குப்போடியார் என்பவர் ஒரு சிறுமடம் அமைத்து பிள்ளையாரை வழிபட்டு வந்தார். மக்களும் இவ்வாலயம் சென்று வழிபடவே இவ்வாலயம் மடத்துப்பிள்ளையார் ஆலயம் என அழைக்கப்பட்டது.

வலைகட்டிறவுக்கு மேற்கேயுள்ள படுவான்கரை என அழைக்கப்படும் பிரதேசம் விவசாயப் பூமியாக விளங்கியதால் அங்குள்ள மக்கள் தங்கள் விவசாய உற்பத்தி பொருட்களை வள்ளங்களில் பெரியதுறைக் கிராமத்தில் உள்ள துறைக்கு கொண்டு சென்று மாட்டுவண்டிகளில் ஏற்றி நகருக்கு கொண்டு சென்றனர். பெரியதுறை மக்கள் கொள்ளை நோயால் பாதிக்கப்பட்டு வெளியேறவே அக்கிராமமே காடாகி அங்குள்ள துறையும் அற்றுப்போனது. அதன்பின்னர் அத்துறையின் சேவையை வலைகட்டிறவில் அமைந்துள்ள துறையே ஈடுசெய்தது.

வரலாறு என வரும் போது இத்துறையின் மேற்கே ஒரு மைல் தூரத்தில் அமைந்துள்ள சுமார் 97ஏக்கர் நிலப்பரப்புள்ள "மாந்தீவு" என்னும் அழகிய தீவு பற்றியும் குறிப்பிட வேண்டும். முன்னர் இங்கு வசித்து வந்த மக்களை "வவுணதீவு" என அழைக்கப் பட்ட படுவான்கரைப் பிரதேசத்தில் உள்ள கிராமத்தில் குடியமர்த்திய ஆங்கிலேய அரசு, இத்தீவில் தொழுநோயாளர்களுக்கான வைத்தியசாலை விடுதிகளை அமைத்தது. இலங்கையின் பல பாகங்களிலும் உள்ள தொழுநோயாளர்களை இங்கே அனுமதித்து சிகிச்சையும் அளிக்கப்பட்டு வந்த இவ்வைத்தியசாலை இன்றும் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

இப்படியான வரலாறுகளைக் கொண்ட கிராமங்களை உள்ளடக்கிய மையப்பகுதியே புதூர் ஆகும். இதன் நுழைவாயிலில் நம்மை வரவேற்பது அம்மை நோயாளர்களுக்காக கட்டப்பட்ட விடுதியாகும். இந்நோயும் உயிர்கொல்லி நோயாக கருதப்பட்டதனால் இந்நோயாளர்களை தனிமைப்படுத்தி பராமரிக்கும் நிலை ஏற்பட்டது. இதற்காக 24 மணிநேரமும் சேவை செய்ய ஒரு ஊழியரை அமர்த்தினர். அவர் அங்கு அமைக்கப்பட்டிருந்த விடுதியில் தனது குடும்பத்துடன் தங்கி கடமையாற்றி வந்தார். இப்பகுதியில் தான் வைத்தியசாலை விஸ்தரிப்புக்காக எழுப்பப்பட்ட குடும்பங்களுக்கு 40 வீட்டுத்திட்டத்தின் மூலம் இரு ஏக்கர் காணியுடன் செங்கல் கொண்டு நீறினால் கட்டப்பட்ட இரு அறைகளைக் கொண்ட வீடும் வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் குடியேற்றப்பட்ட இந்நிலப்பரப்பின் பள்ளக்காணிகளில் முன்மாரி விவசாயத்தை மக்கள் செய்து வந்தாலும், எல்லாப் பகுதியும் விவசாய செய்கைக்கு உகந்ததாக இல்லை. வறட்சி காலங்களில் கிணறுகளில் நீர் வற்றிப்போகும் நிலையே காணப்பட்ட இவ்விடத்தில் மக்கள் குடியேற்றப்பட்டு இவ்விடம் புதூர் என அழைக்கப்பட்டாலும், சிலரின் கூற்றுப்படி இங்கு சில குடும்பங்கள் சிறுகுடிசை அமைத்து வாழ்ந்து வந்ததினால் முன்னரும் இப்பெயர் இருந்ததாகவும் அறியமுடிகிறது.

இவர்களின் ஒருவராகத்தான் "பொக்கர்" என அழைக்கப்படும் மாரிமுத்துவும் வாழ்ந்து வந்தார். இவர் தனது ஆரம்ப காலப்பகுதியிலேயே தனது காணியில் ஒரு பகுதியில் வேம்பும் அரசமரமும் இணைந்திருக்கக் கண்டு அவ்விடத்தில் கல்லொன்றை வைத்து கடவுளை நினைத்து வணங்கி வரலானார். இவ்விடத்தினூடாக திமிலைத்தீவுக்குச் செல்லும் வீதியும் அமைந்திருந்ததனால் அவ்வழியை பயன்படுத்துவோரும் அவ்விடம் தரித்து இளைப்பாறி வணங்கிச் செல்வர்.

இந்நிலையில் ஒருநாள் மதுபோதையில் வந்த ஒருவர் அருகில் உள்ள "கற்குளி" என அழைக்கப்படும் குளத்தில் (தற்போதைய தீர்த்தக்கேணி) அவர் வழிபாட்டுக்கு பயன் படுத்திய கல்லை எறிந்து விட்டுச் சென்றார் எனவும் மறுநாள் தான் வழிபடும் தெய்வத்தை எங்கு தேடியும் காணாது வேதனையுற்ற மாரிமுத்து கவலையுடன் உறங்கலானார் எனவும் அப்போது " நீ ஏன் கவலைப்படுகிறாய்? உன் தெய்வம் எங்கும் போகவில்லை குளத்தில் தேடிப்பார் கிடைக்கும்" என அவருக்கு உணர்த்தப்படவே, காலையில் சென்று குளத்தில் தேடிய போது கனவில் கண்டது உண்மையாக இருக்கக் கண்டு மகிழ்ந்தார். இந்நிகழ்வுக்குப் பின் மக்கள் மத்தியில் பக்தியும் இறைநம்பிக்கையும் வளர்ந்தது.

சில வருடங்களுக்குப் பின் மாரிமுத்து இயற்கை எய்தவே அவர் மனைவி சீமெந்து கலவையினால் விநாயகர் சிலையை வடிவமைத்து வழிபட்டு வந்தார். பின்னர் அதனை ஊர் மக்களிடம் கையளிப்பதே உகந்ததென எண்ணம் மேலிட அதனை ஊர் மக்களிடம் அறிவித்தார். அன்றிலிருந்து இவ்வழிபாட்டுத்தலம் ஊர் மக்களால் பராமரிக்கப் படலாயிற்று. இந்நாளில் கிராம மக்களின் பக்திக்கும் வழிபாட்டுக்கும் வடிகாலாக அமைந்தது திமிலைதீவில் அமைந்துள்ள விஷ்ணு ஆலயமே இதில் நடக்கும் பூசை வழிபாடுகளும், திருவிழாக்களும் மக்களுக்கு மனமகிழ்வை ஊட்டின இருந்தாலும் நமது கிராமத்திலும் ஒரு ஆலயம் அமைக்க வேண்டும் என்ற எண்ணமும் மக்கள் மனதில் ஆழமாக வேரூன்றி வளரலாயிற்று.

இங்குள்ள ஆறு கிராமங்களிலும் புளியந்தீவு நகரிலும் வசித்து இயற்கை எய்தும் மக்களை அடக்கம் செய்யும் இடமாக ஆலையடிச்சோலை என அழைக்கப்படும் இந்து, கிறிஸ்தவ மயானமே விளங்கியது. புதூரை ஊடறுத்து வலைகட்டிறவு கிராமத்தை சென்றடையும் பிரதான பாதையின் மத்தியில் அமைந்துள்ள இடமே இம்மயானமாகும். பெரிய ஆலமரங்களும் தேக்குமரங்களும் நிறைந்த சோலையாக இது இருந்த காரணத்தினால் ஆலையடிச்சோலை என பெயர் பெறலாயிற்று. அன்று பேய்கள் இருந்ததோ இல்லையோ, பேய்க்கதைகளுக்கு பெயர் போன மயானமாக இது இருந்ததற்கு சாட்சிகளாக பல கதைகளை இன்றும் கூறுவர்.

அந்நாளில் மக்கள் மயானத்தைத் தாண்டி தனியே பயணம் செய்ய அஞ்சுவர். துணிந்து தனித்து சென்றவர்களும் ஏதோ காரணத்தால் பயந்து நோயுற்று பூசாரியை நாடிய கதைகளும் உண்டு. இரவு நேரங்களில் குதிரைகள் கூட்டம் கூட்டமாக ஓடுவது போன்றும், நரிகள் ஊளையிட பெரிய மரங்கள் முறிந்து விழுவது போன்றும் பல விதமான சத்தங்கள் அடிக்கடி கேட்டுள்ளது பற்றியும் கூறுவர். இதைவிட அப்பம் சுட்டுக் கொண்டிருக்கையில் அப்பம் கேட்டு நீண்டு வந்த பேயின் கையில் பயப்படாமல் அவர்கள் சூடு போட்ட கதையையும் கேட்கும்போது அன்றைய மக்கள் பேய்கால சூழலில் எப்படியெல்லாம் வாழ்ந்திருப்பார்கள் என எண்ணிப்பார்க்க வேண்டியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விழித்திடும் உணர்வுகள்

புதிதாக குடியேற்றப்பட்ட மக்களிடம் இது நமது கிராமம், நாம் அதன் மக்கள் என்ற உணர்வு முப்பரிமானம் கொண்டு மலர்ந்திட, பக்தி ஆலயம் வழிபாடு என்றும் கல்வியில் முன்னேற வேண்டும். கல்வி கற்கா இச்சமூதாயம் மாறிட கல்வியறிவுள்ள சமூதாயம் உருவாகிட நமது கிராமத்திலும் ஒரு பாடசாலை நிறுவிட வேண்டுமென்ற எண்ணமும் துளிர்விட சமூக மேன்பாட்டுச் சிந்தனைகள் மேலோங்கியது.

இதன் விளைவாக 1951ஆம் ஆண்டு ஆனந்தா சனசமூக நிலையம் உதயமாக, தொடர்ந்து இரு வருடங்களில் கிராம அபிவிருத்தி சங்கமும் உருவாகி அதனுடன் இணைந்து ஒரே கட்டிடத்தில் இயங்கலாயிற்று. நாளடைவில் உருவாகிய மாதர் சங்கமும் நெசவு நிலையம் ஒன்றினை அமைத்து துணிகள் நெய்து கண்காட்சிகளை நடாத்தி வந்ததுடன் கோழி வளர்ப்புத் திட்டங்களையும் செயற்படுத்தியது.

இச்செயற்பாடுகள் மூலம் மக்களிடையே விழிப்புணர்வும் ஏற்பட்டது. பெரியோர்கள் பத்திரிகை, சஞ்சிகைகளில் விடய தானங்களை அறிய, இளைஞர்களிடையே கிட்டிப்பொல்லு, கிளித்தட்டு, எல்லே விளையாட்டுடன் கரப்பந்தாட்டமும் இணைந்து அவர்கள் உடல்நலம் பேண, பெரிய இருகுழாய்களை இருபக்கம் நட்டு அவற்றினை இணைத்து பெரிய அன்டனா பூட்டிய றேடியோ சனசமூக நிலைய கட்டிடத்தில் இருந்து இயங்கி அக்கிராமத்துக்கே தன் ஒலிபரப்பினை வழங்க கிராமத்தில் வானொலி எவையும் இல்லாத அக்காலத்தில் அது மக்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்தது.

ஒரு கிராமத்தின் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் இன்றியமையாதது கல்வியே. அக்கல்வியை எமது வருங்கால சந்ததியினரும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற உணர்வின் உந்துதலால் நமது கிராமத்திலும் ஒரு பாடசாலையை அமைக்க வேண்டும் என்ற துடிப்புடன் ஆலையடிச்சோலை மயானத்தை இடைமறித்திருந்த பிறன்டியன் புட்டிக்கருகாமையில் உள்ள இடத்தில் பாடசாலை அமைக்க காட்டை வெட்டி துப்பரவு செய்தனர். அங்கே அமைந்திருந்த உயரமான அணைக்கட்டு போன்ற புட்டியில் தான் பொலிசார் துப்பாக்கி பயிற்சியை மேற்கொண்டு வந்தனர். அவர்களுக்கு முன்னர் ஆங்கிலேய படையதிகாரியான "பிறன்டிக் நோக்" என்பவரால் உருவாக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டு வந்த இடமே "பிறண்டியன் புட்டி" என அழைக்கப்பட்டது.

1957ஆம் ஆண்டு அவ்வூர் இளைஞர்கள் பெரியோரின் உதவியுடன் துப்பரவு செய்து அவ்விடத்தில் ஓலைக்கொட்டில் ஒன்றை அமைத்து பாடசாலையாக்கினர். அதில் கல்வி போதிப்பதற்காக அப்போது படித்துவிட்டு தொழிலை எதிர்பார்த்திருந்த இப்பிரதேசத்தைச் சேர்ந்த திரு.சின்னையா கிருஷ்ணப்பிள்ளை, ஆறுமுகம் கற்பகம் ஆகியோர் கல்வியை போதிக்க பாடசாலை இயங்கலாயிற்று. இப்பாடசாலையை அனுமதிக்காத அதிகாரிகள் இதனை அகற்ற முனைந்த போது அவர்களை இடைவழியில் தடுத்து நிறுத்தி மக்கள் போராட்டங்களை நடாத்தினர். இவர்களின் அயராத முயற்சியின் பலனாக இப்பாடசாலை கல்வியமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டு புதூர் தமிழ்க் கலவன் பாடசாலை என்னும் பெயருடன் 1959ஆம் ஆண்டு முதல் இயங்க, இதில் கல்வி போதித்து வந்த தொண்டர் ஆசிரியர்களும் ஆசிரிய சேவைக்குள் உள்வாங்கப்பட்டனர். இந்நிலையில் கல்விக்கு அடித்தளமிட்டு விட்ட மக்களின் சிந்தனை ஆலயத்தின் பக்கம் திரும்பியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்ப காலப்பகுதியில் 'பொக்கர்' என்பவரால் கல்லொன்றை வைத்து கடவுள் என வணங்கப்பட்டு வந்த வழிபாடு 1945ஆம் ஆண்டு அவர் காலமாகியதும் விநாயகர் சிலை அமைத்து 5 வருட காலம் வழிபாட்டினை தொடர்ந்து வந்த அவர் மனைவி மாரியம்மா 1959ஆம் ஆண்டு அவ்விடத்தில் கோவில் அமைப்பதற்காக முக்கோண வடிவிலான தனது கால் ஏக்கர் காணியுடன் தான் வழிப்பட்டு வந்த அரசமரத்தடிக் கோவிலை மக்களிடம் ஒப்படைத்தார் அப்போது பரிபாலனம் செய்த சபையினரால் 19.10.1950ஆம் ஆண்டு HA/5/41 பதிவிலக்கத்தில் இவ்வாலயம் பதிவு செய்யப்பட்டது. அதன் பின்னர் 1962ஆம் ஆண்டு அரசமரத்துக்குப் பின்னுள்ள பகுதியில் இருபிரிவுகள் கொண்ட கட்டிடமொன்றை அமைத்து அதில் மரத்தடிப்பிள்ளையாரை ஸ்தாபித்தனர்.

அப்போது பூசை விடயங்களில் ஓரளவு அனுபவம் பெற்றிருந்த வீமப்பா என்பவராலும் தாடியப்பா என்றழைக்கப்பட்டவராலும் வெள்ளிக்கிழமைகளில் சாதாரணமான பூசை நடைபெற்று வந்தன. அதன் பின்னர் உண்டியல் திருப்பணிச்சபை மூலம் ஒரு திருவிழா நடைபெற்று வர தொடர்ந்து வந்த இப்பூசை நடைமுறை மாற்றம் பெற்று 1973ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட புதிய நிருவாகத்தின் முயற்சியால் கருவறையும் நிருத்த மண்டபமும் கட்டப்பட்ட மட ஆலயத்தில் வெண்கலத்திலான விநாயகர் விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டு அதன் அருகில் ஆதி விக்கிரகமும் வைக்கப்பட்டு 1975இல் பாலாபிஷேகம் நடைபெற்றது. இதன் பின்னர் திருப்பெருந்துறை முருகன் ஆலயத்தில் பூசை செய்து வந்த குமாரசாமி குருக்களினால் வெள்ளிக்கிழமை பூசை நடாத்தப்பட்டு வந்ததுடன் முதன்முறையாக மூன்று நாள் ஆனி உத்தர திருவிழாவையும் தீர்த்தோற்சவத்தையும் மக்கள் பெருமையுடன் நடாத்தினர்.

மக்களின் முயற்சிகள் திருவினையாக 1979ஆம் ஆண்டு 3வது மண்டபமும் எழுச்சி பெற அப்போதைய பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ செ.இராசதுரை அவர்களால் 1980ஆம் ஆண்டு கிராமத்துக்கு வழங்கப்பட்ட மின்சாரம் ஆலயத்துக்கு ஒளியூட்டி மகிழ்ச்சியூட்டியது 1983இல் மக்களின் முயற்சியினால் 4வது மண்டபமும் நிறுவப்படவே வாராந்தப் பூசையுடன் சில விஷேட பூசைகளும் உள்வாங்கப்பட்டு 3 நாள் திருவிழா 5 நாள் திருவிழாவாக அதிகரிக்கப்பட்டு நடைபெற்று வரலாயின. தீர்த்தோற்சவ காலத்தில் திமிலைத்தீவுப்பகுதி ஆற்றில் தீர்த்தமாடி வந்த நிலைமாறி அப்போது இந்து கலாசார அமைச்சராக இருந்த கௌரவ செ. இராசதுரை அவர்களால் 1981ஆம் ஆண்டு கற்குளியாக இருந்த கேணி தீர்த்தக்கேணியாக கட்டப்பட்டு அதில் தீர்த்தமாடும் நிலை ஏற்பட்டதுடன் கோவிலின் முன்வீதி மதிலும் கட்டப்பட்டது.

காலத்துக்குக் காலம் தேசமோ, நாடோ, நகரமோ, கிராமமோ இயற்கையின் சீற்றத்துக்குட்படாமல் இல்லை. அவ்வகையில் வாவியால் சூழப்பட்ட இக்கிராமமும் 1957ஆம் ஆண்டு வந்த பெரும் வெள்ளத்தினால் மிகவும் பாதிக்கப்படவே, அடுத்து 23.11.1978ஆம் ஆண்டு வந்து கோரத்தாண்டவம் ஆடிய சூறாவளியினால் கிழக்கு மாகாணமே பெரும் அழிவை சந்தித்தது. அதன் தாக்கம் இக்கிராமத்தையும் விட்டு வைக்கவில்லை அரசாங்கத்தினால் மக்களுக்கு கட்டிக்கொடுக்கப்பட்ட வீடுகள், பாடசாலை, சனசமூக நிலைய கட்டிடம் மட்டுமல்ல பயன்தரும் தென்னை, மா, பலா மரங்களையும் அழித்து சூறையாடிச்சென்ற சூறாவளியினால் ஆலய அரச மரத்துக்கோ, ஆலயத்துக்கோ எவ்வித சேதமும் ஏற்படாதது ஆச்சரியமே!

23.11.1978ஆம் ஆண்டு வீசிய இச்சூறாவளியில் சிக்கிய இக்கிராமம் பற்றி நினைவு கூறுதல் நல்லதென நினைக்கின்றேன். அன்று புயல் வீசப்போவதாக மக்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்ததும் அதை எவருமே கவனத்தில் பெரிதாக எடுக்கவில்லை. ஏனெனில் அப்படி ஒரு அனுபவம் அவர்களுக்கு முன்னர் ஏற்படவில்லை அதனால் காற்று வீசலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலவேளை மரங்களும் முறிந்து விழலாம் என்ற எண்ணம் மட்டுமே அவர்கள் மனதில் இருந்தது. இந்நிலையிலே அவர்கள் நாளைய தேவைகளை நிறைவேற்றும் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

மாலை நேரம் நெருங்கிட மெல்லத் தவழ்ந்து வந்த காற்றின் வேகம் சிறிது சிறிதாக அதிகரித்து இரவு 8.00 மணியளவில் புயலாக மாறவே சில மரங்கள் முறிந்து விழுந்ததுடன் வீடுகள் சிலவற்றின் கூரைகளும் சேதமாகியது. அதன்பின்னர் காற்று ஓய்ந்திட அமைதி நிலவியது. மக்கள் கைவிளக்குகளுடன் உறவினர் நிலையறிய அவர்கள் வீடுகள் சென்று பார்வையிட்ட போது பெரிய பாதிப்புகள் ஏதும் நடக்காதிருந்தமை அவர்களுக்கு நிம்மதியை தந்தது. அந்நிம்மதி நீடிக்காது மீண்டும் காற்று உருவாகவே மக்கள் ஓட்டமாகச் சென்று தங்கள் வீட்டை அடைந்தனர். அன்றிரவு நடந்த புயலின் கோரத்தாண்டவம் வரலாற்றில் ஒரு சோகக் காவியமாக பதியப்பட்டது.

இரவு வேளை அருகில் என்ன நடக்கிறது என்பதே தெரியாத நிலை, காற்றுக்குள்ளும், மழைக்குள்ளும் அகப்பட்டு அன்று உயிர்காக்க அவர்கள் நடாத்திய போராட்டம் அனுபவித்த வேதனை அவரவர் வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவமாக அமைந்தது. விடியும் நேரம் எதிர்பார்த்து கண் விழித்துக் காத்திருந்த மக்கள் விடியலைக் கண்டனர். ஆனால் அவர்கள் வாழ்வோ விடியாத இருளாயிருந்தது. நிமிர்ந்து நின்ற பொதுக்கட்டிடங்களும் இல்லங்களும் நிலைகுலைந்து தரையில் கிடந்தன. இடிபாடுகளுக்குள் மக்கள் உடமைகளைத் தேடினர். பெரிய மரங்களும் குடைசாய்ந்து கிடக்க காய்த்துக் குலுங்கிய தென்னை மரங்கள் அடிசாய்ந்து ஒன்றின்மேல் ஒன்றாக வழிமறித்துக் கிடந்தன. அவைகளைத் தாண்டி ஓடிய மக்கள் கண்டகாட்சி அவர்களை ஓலமிட்டு அழவைத்தது உயிர்ச்சேதம் மூன்று கண்டனர் வீட்டுடன் உடமைகள் அழிய விளைபயிரும் நாசமாக, பலன் தந்த தென்னை, மா, பலா மரங்களும் அழிந்து கிடந்த காட்சி கண்டு அழுதனர் புலம்பினர் பெண்கள் தலையிலடித்து ஒப்பாரி வைத்தனர். பசி வாட்டியது. இருந்தவர் இருந்தவற்றை இல்லாதவர்களுக்கு கொடுத்து உதவினர். நகருக்குச் செல்லும் பாதை துண்டிக்கப்பட்டு அது வாவியாக மாறியிருந்தது படகில் ஏறி நகருக்கு பொருட்களை வாங்கச் சென்றால் நகரும் அழிந்த நிலையில்தானிருந்தது.

விழுந்து கிடந்த தென்னை மரங்களின் தேங்காயும், இளநீரும் உணவாக, இடிந்து விழுந்த வீடுகளின் மரங்களைக் கொண்டு குடிலமைத்து பச்சை தென்னை ஓலையினால் கூரை அமைத்துக் குடியிருக்க சில நாட்களின் பின் வெள்ளத்தால் பாதிப்படைந்திருந்த திருப்பெருந்துறை வீதியை வெளியாக்கி அதனூடாக கிராமத்துக்கு தேவையான பொருட்களை கொண்டு வரலாயினர். அத்துடன் பாதிக்கப்படாத வெளிமாவட்டத்தில் உள்ள மக்களும் சமைத்த உணவுப் பொதிகளை மக்களுக்கு கொடுத்து உதவிசெய்ய அரசாங்கமும் உலர் உணவுப் பொருட்களை வழங்கினர்.

மக்கள் வாழ்நாளில் காணாத சம்பவம் என்ன நிகழ்கிறது என்பதைக்கூட கண்ணால் காணமுடியாமல் செய்த இயற்கை ஏதோ ஒன்றை உணர்த்தி விட்டுச் சென்றது. மறுநாள் கிராமத்தை பார்வையிட்ட மக்களுக்கு தந்திக் கம்பத்தில் படிந்திருந்த ஆற்றின் பாசி வெள்ளம் சுமார் 15ஆடி உயரத்திற்கு வந்துள்ளதென்பதை உணர்த்திய போது அதிர்ச்சியாகவே இருந்தது. அப்படியான ஒரு வெள்ளத்தில் நாம் எப்படி காப்பாற்றப்பட்டோம் என்பது இன்றுவரை புரியாமலே இருக்கிறது. புரியாத இக்கேள்விக்கு விடை என்ன? எல்லோரும் கையை மேலேதான் காட்டுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துன்பத்திலும் துவளாத மக்கள்

**வி**ழுந்தால் எழுந்து நில், எழுந்ததும் நிமிர்ந்து நில் துன்பங்கள் என்ன? துயரமே வந்தாலும் துணிந்து நில். வாழ்ந்திட வேண்டும் என மனதில் வைராக்கியம் கொண்டதனால் மீண்டும் வாழ்விடங்களை சொந்த தேடலின் மூலம் அமைத்தனர். தரைமட்டமாகி விட்ட சனசமூக நிலையத்தை மீண்டும் அவ்விடத்தில் அமைக்க முடியாதபடி காணிப்பிரச்சினை ஏற்படவே அப்போது பிரதான வீதிச்சந்தியில் அமைந்திருந்த "யோசேப்" என்பவரின் காணியில் ஒரு பகுதி பெறப்பட்டு அதில் சனசமூக நிலையம் அமைக்கப்பட்டதுடன் முன்பள்ளி பாடசாலை ஒன்றையும் நிறுவினர். இக்காணியிலேயே 21.08.1973இல் திரு. இராஜன் செல்வநாயகம் பா.உ அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட உபதபாலகமும் இயங்கி வந்தது.

"புதூர்" என்னும் பெயர் பல மாவட்டங்களில் பல கிராமங்களுக்கு இருப்பதனால் இக்கிராமத்தை "புதுநகர்" என அழைக்க வேண்டுமென்று ஆனந்தா சனசமூக நிலையத்தினால் நடாத்தப்பட்ட வருடாந்த விளையாட்டு விழாவின் போது முன் மொழிந்தவரான பாராளுமன்ற உறுப்பினரான கௌரவ செ.இராசதுரை அவர்களே இக்கட்டிடத்தை திறந்து வைத்து அந்நாளில் வாய் பேசமுடியாத சரியாக நடக்க முடியாத எல்லோராலும் நேசிக்கப்பட்ட "டப்பி" என அழைக்கப்பட்ட வடிவேல் அவர்களுக்கு முச்சக்கரவண்டியையும் வழங்கினார். இவருடைய முயற்சியினால் ஆலையடிச்சோலை மயானத்துக்கு அருகாமையில் இளைஞர்களால் அமைக்கப்பட்டு உதைப்பந்தாட்டம், கிரிக்கற், வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வந்த புதுநகர் விளையாட்டுத்திடல், மைதானமாக பதிவு செய்யப்பட்டதுடன், அதில் அமைக்கப்பட்ட பாரதிகலை அரங்கத்தில் பாரதி நூற்றாண்டு விழா நகரில் இருந்து ஊர்வலமாக வந்து கொண்டாடப்பட்டது. இம் மைதானம் பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டிகள் நடாத்தவும் பயன்படுத்தப்பட்டன.

புயலும் வந்தது, புனருத்தாரணமும் வந்தது. ஆரம்ப காலத்தில் பொதுமக்களின் நிதி உதவியுடன் கொட்டிலாக அமைக்கப்பட்ட பாடசாலை 1959 ஆம் ஆண்டு அரசினால் அங்கிகரிக்கப்பட்டு புதூர் தமிழ்க் கலவன் பாடசாலையாக இயங்கி வந்தது. இதில் 1968இல் இருந்து 1977 வரை அதிபராக கடமையாற்றிய இக்கிராமத்தைச் சேர்ந்த திரு.பொ.கந்தையா அவர்கள் மாணவர்கள் கல்வியில் மிகவும் ஊக்கம் செலுத்தினார். மாணவர்கள் வரவு குறைந்த போது அவர்கள் வீடு சென்று அழைத்து வந்து பாடம் நடத்திய இவர் பிறண்டியன் புட்டி திடலை அகற்றி தோட்டப்பயிர்களை செய்வித்து வந்தார். இவர் காலத்தில் மேலும் ஒரு கட்டிடம் உருவாகி இரு கட்டிடங்களில் பாடசாலை இயங்கி வர 1978இல் ஏற்பட்ட சூறாவளியினால் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ இராஜன் செல்வநாயகம் அவர்களால் கட்டப்பட்ட கட்டிடத்துடன் மற்றைய கட்டிடமும் சேதமுற்றன. அப்போது தாண்டவன்வெளியைச் சேர்ந்த திரு.சி.கந்தசாமி அவர்கள் அதிபராக கடமையாற்றினார். அவர்களின் முயற்சியினால் சேதமுற்ற கட்டிடங்கள் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினால் கட்டிமுடிக்கப்பட்டது.

1983 யூலை என்றால் தமிழ் இனத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட காடையர்கள் ஆடிய வெறியாட்டமே நினைவுக்கு வரும். "கறுப்பு யூலை" என அழைக்கப்படும் கொடூரத்தில் தலை நகரிலும், பெரும்பான்மை மக்கள் வாழ்ந்த பல பகுதிகளிலும் உள்ள தமிழர்களில் பலர் கொல்லப்பட்டு அவர்கள் வீடுகள், தொழில் நிலையங்கள், உடமைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரிக்கப்பட்டு நகரே புகை மண்டலமாக மாற, சிறையில் அடைப்பட்டிருந்த தமிழ் இளைஞர்களும் சித்திரவதை செய்யப்பட்டு கொலையுற, உயிர் காக்க தப்பியோடிய பலர் அகதிகளாகி அந்தரிக்க, செல்வந்தர்களையும் ஒரே நாளில் ஏழையாக்கி உணவுக்காக கையேந்த வைத்த அந்த ஆடிக்கலவரம் ஆடிய ஆட்டம் தமிழ் மக்கள் மனதிலே கண்ணீரால் எழுதப்பட்ட சோகக் காவியமாக இன்று விளங்கினாலும் அன்று அரசால் பிறப்பிக்கப்பட்ட அவசர காலச்சட்டமும், நாட்டில் ஏற்பட்டிருந்த பதட்ட நிலையும் மக்களை அச்சத்துக்குள்ளாக்க ஆலய திருவிழா நெருங்கி வரும் வேளையில் "ஆலய நிகழ்வுகள் எவையும் மாலை 6.00 மணிக்கு மேல் நடாத்தக் கூடாது" என்ற உத்தரவு விமானப்படை கட்டளை அதிகாரியிடம் இருந்து ஆலய பரிபாலன சபையினருக்கு விடுக்கப்பட்டது.

இச்செய்தி பக்தர்களின் சந்தோசக் கனவுகளைத் தகர்த்திட உள்ளம் நொறுங்கிட என்ன செய்வதென்று தெரியாது திகைத்து நின்றனர். உடம்புள்ளே உத்தமன் கோயில் கொண்டான் என்றும், உள்ளம் பெரும் கோயில் ஊன் உடம்பே ஆலயம், என்ற திருமூலர் வாக்கும் காயமே கோயிலாக கடிமனம் அடிமையாக என திருநாவுக்கரசர் பாடலும், நெஞ்சமே கோயில் நினைவே சுகந்தம் என்னும் தாயுமானவர் ஆனந்தக்களிப்பும், இறைவனே நீ என்னுடலில் இடம் கொண்டாய் என திருவாசகம் உண்மையை விளம்பிட, தூய்மையான உள்ளமே கடவுள் வாழும் இல்லம் என்று உத்தமர்கள் உணர்த்திய உண்மைக்கிணங்க பக்தர் உள்ளத்தின் உள்ளே ஒளியாய் இருந்து உணர்வுடன் கலந்து என்றும் வழி நடத்திக் கொண்டிருக்கும் கடவுளுக்கு, பக்தர் மனம் புரியாதா? அண்டசராசரங்களையும் படைத்து யாவற்றையும் ஒரு இலக்கண வரம்புக்குள் இயக்கி புரிந்தும், புரியாத புதிராய் விளங்கும் கடவுள், தன்னை நினையாதவர்களுக்கும் வாழ்வழிக்கும் கருணையுள்ளம் கொண்டவர் பக்தர் துயர் கண்டு இரங்காதிருப்பாரா? இரங்குவார். அவர் இரங்கினார். அதன் விளைவு மறுநாள் காலை படையதிகாரி கோயிலுக்கு வந்து இரவு 10.00மணி வரை திருவிழா நடத்த அனுமதி வழங்கியதுடன் ஆலயத்துக்கு தேவையான பூசைப் பொருட்களையும் கொடுத்து விட்டுச் சென்றார்.

நம்பிக்கை துளிர்விட்டால் உள்ளத்தில் பக்தி தானே வளரும். என்னதான் பக்தி வளர்ந்தாலும் ஆலயத்தின் வழிபாடு நடவடிக்கைகள் தொடர்ந்தாலும் ஆலய நிருவாகம் எதிர்நோக்கும் பிரதான பிரச்சினையாக ஆலயத்தில் எவ்வித நிதியும், வருவாயும் இல்லாமல் அன்றாடங்காச்சி போல் யாராவது பணம் கொடுத்தால் மட்டுமே வெள்ளிக்கிழமைகளில் பூசை நடக்கும் நிலையும் காலத்தால் வரையப்பட்ட கோலமாகியது. சோதனைகள் வராது சாதனைகள் வருவதில்லை தாழ்ந்திடும் போது மனம் தளராது துணிந்து செயல்பட வேண்டும் என்னும் கருத்தினைக் கொண்டு 1986ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட ஆலய பரிபாலன சபையினர் இந்நிலையினை மாற்றியமைத்து மக்களையும் பங்காளிகளாக்கி பக்தி வளர்ந்திட பாடுபட வேண்டும் என்னும் நோக்கில் கிராமத்தில் உள்ள மக்களை அங்கத்தவர்களாக பதிவு செய்ததுடன், ஆலயத்துக்கென யாப்புவிதி ஒன்றினையும் தயாரித்தனர். அதன்படி அங்கத்தவர்களிடம் வருட சந்தாப்பணமாக ரூபா 50.00 அறவிடும் நடவடிக்கையினை மேற் கொண்டதுடன், இவ்விதம் சேகரிக்கப்பட்ட நிதியில் இருந்து அங்கத்தவர்களுக்கான வாழ்வாதார கடனுதவித்திட்டத்தினை ஆரம்பித்து சுழற்சிமுறையிலான கடனாக வழங்கியதுடன், அதன் மூலம் பெறப்படும் இலாபத்தில் வாராந்தப் பூசையை தவறாது தடையின்றிச் செய்து வந்தனர்.

இவர்கள் காலத்தில் முன்மண்டபத்தில் அமைக்கப்பட்டிருந்த சிறு ஆலயத்தில் கண்ணாடிப்படம் வைத்தே பூசை செய்யப்பட்டு வந்தன. இவற்றினை மாற்றியமைத்த தலைவர் தனது சொந்த செலவில் அவ்விரு ஆலயங்களிலும் வெண்கலத்திலான வேல், சிவலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றினை பிரதிஷ்டை செய்ததுடன் அலங்கார தீப வகைகளையும் வழங்கினார். இவர்கள் காலத்தில் பக்தர் ஒருவரால் ஆலயத்துக்கு காண்டாமணி ஒன்றும்வழங்கப்பட்டது. சமய விழுமியங்களை கண்டிப்புடன் கடைபிடித்து ஆலயத்தை நடாத்தி வந்த இப்பரிபாலன சபையினருக்கும், சமய விழுமியங்களை மீறி செயல்பட முயற்சித்த ஒரு குழுவினருக்கும் ஏற்பட்ட பிரச்சினை 1989ஆம் ஆண்டு ஆனி உத்தர திருவிழாவின் போது உச்சக்கட்டத்தை அடைந்தது. ஆயுத கலாச்சாரம் நிலவிய அக்கால கட்டத்தில் சமய விழுமியங்களை விட்டுக் கொடுக்காது வாதாடிய பரிபாலன சபையினர் கிராமத்தில் பதட்ட நிலை ஏற்படாது தடுக்கும் பொருட்டு பதவி விலகினர். தர்மசங்கடமான நிலைக்குள்ளான மக்கள் பதவிவிலகலை தடுக்கமுடியாத நிலையில் அதனை மன வேதனையுடன் ஏற்றுக்கொண்டனர். தலைவர் பதவி விலகினாலும் பின்னர் திருப்பெருந்துறையில் அவருக்கு சொந்தமான 4 ஏக்கர் வயல் காணியை ஆலயத்திற்கு அன்பளிப்புச் செய்தார்.

1982ஆம் அண்டு ஆரம்பிக்கப்பட்ட ஆலய அமுதுக்குழு உற்சவத்தின் முடிவில் பக்தர்களுக்கு அமுது வழங்கி ஆற்றிவரும் சேவை அளப்பரியதாகும். அதே போல் இவ்வாண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்து இளைஞர், மகளிர் மன்றத்தினரும் ஆலய விசேட பூசைகளிலும், திருவிழாவின் போதும் தேவாரம், பஜனைப் பாடல்களை பாடிப்பரவசமூட்டுவர்.

எல்லாம் ஒழுங்காக நடக்கிறது என்று மனம் மகிழ்ந்தாலும் நாம் அறியாது நம் விதி மட்டுமல்ல நம் இனத்தின் விதியும் வேறு விதமாக எழுதப்பட்டுக் கொண்டிருப்பதை நாம் எவரும் அறிந்திருக்கவில்லை."

## தொடர்ந்திடும் இடர்கள் மலர்ந்திடுமா வாழ்வு?

1948ஆம் ஆண்டு மாசி மாதம் 4ம் திகதி இலங்கை ஒரு சுதந்திர நாடு என பிரித்தானிய அரசினால் பிரகடனப்படுத்தப்பட்டாலும் அது சகல இன மக்களுக்கும் கிடைத்த ஒன்றாக இருக்கவில்லை. பௌத்த பெரும்பான்மை இன மக்கள் அதனை அனுபவிக்க சிறுபான்மையினரான தமிழ் பேசும் மக்கள் பல வகைகளிலும் பாதிக்கப்பட்டு அவர்களுக்குரிய உரிமைகளும், தேவைகளும் மறுக்கப்பட்டன. சாத்வீகமான முறையில் அவற்றினை தமிழினம் கேட்டும் அதை கொடுக்காது அசட்டை செய்த அரசாங்கம் அவர்களை அடக்கி சிறையில் அடைக்கவும் செய்தது. இதன் விளைவாக இளைஞர்களால் ஆரம்பிக்கப்பட்ட உரிமைப்போராட்டம் ஆயுதப்போராட்டமாக உருப்பெற்றது. பல தமிழ் குழுக்களைத் தோற்றுவித்து யுத்தத்துக்கு வழிகோல அழிவுகள் தொடர்ந்தன.

இந்நிலையில் இப்பிரச்சினை தீர இலங்கை, இந்திய அரசுகள் 1987ஆம் ஆண்டு சமாதான ஒப்பந்தம் ஒன்றினைச்செய்து, அதனை நடைமுறைப்படுத்த இந்திய அரசு தனது இராணுவத்தை தமிழர் பகுதிக்கு அனுப்பியது. இச் சமாதான பேச்சு முயற்சி வெற்றி தராது போகவே சமாதானப்படையாக வந்த இந்திய இராணுவத்துக்கும் விடுதலைப்புலிகள் என அழைக்கப்பட்ட தமிழ் ஆயுதக்குழுவுக்கும் நடந்த யுத்தத்தில் அழிவுகள் தொடர இந்திய இராணுவம் தோல்வியுடன் நாடு திரும்பியது. அதன் பின்னர் யுத்த நடவடிக்கைகளை இலங்கை முப்படையினரும் முன்னெடுக்க தமிழர் வாழ் பகுதிகளில் மக்கள் அழிய வாழ்விடம் அழிய உடமைகளை இழந்த அவர்கள் இடம் பெயர்ந்து அகதிகளாக வெளியேறினர் சிலர் வேறு நாடுகளிலும் தஞ்சம் கோரினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை எல்லாம் நடந்து கொண்டிருக்க 1958ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட, உள்ளூர் விமான சேவையினை நடாத்திவந்த விமான நிலையம் 1980ஆம் ஆண்டில் விமானப்படைத்தளமாக இயங்கியதுடன் அதனை பாதுகாப்புப் பிரதேசமாக பிரகடனப் படுத்தி அதன் எல்லையை விஸ்தரிப்பதற்காக 1985ஆம் ஆண்டு அமுலாக்கப்பட்ட திட்டத்தின் கீழ் சுற்றிவர 500மீற்றர் காணி சுவிகரிக்கப்பட்டது. அதனுள் பாடசாலை, கோயில், சனசமூக நிலையம், விளையாட்டுமைதானம், உபதபாலகம், மயானம் என புதுஊரே அடங்க மக்கள் வெளியேற வேண்டிய கால எல்லை அறிவிக்கப்பட்டது. இடம்பெயர்ந்து வந்தோம் இடர்பட்டோம் இடர்களே தொடரானால் என்ன செய்வோம்?

விமானப்படையதிகாரியிடம் இருந்து வந்த உத்தரவால் நெஞ்சில் இடிவிழ நிற்கதியாய் நிற்கும் மக்கள் வாழ்வு மலர்ந்திடுமா? கருகிடுமா? விதியின் கேள்விக்கு விடைதேட மக்கள் விளைந்த போது உணர்வுள்ள உள்ளங்கள் விழித்தெழ உரிமைக் குரலும் எழுந்தது. 308 குடும்பங்களை உள்ளடக்கிய 107ஹெக்டேயர் காணி சுவிகரிக்கப் பட்டுள்ளது என்ற அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்டது அப்போதிருந்த அவசர காலச்சட்டம், பயங்கரவாத தடைச்சட்டம் யுத்த பதட்டநிலை இவற்றினைப்பயன்படுத்திய அரசு முதற்கட்டமாக 100 மீற்றருக்குட்பட்ட குடியிருப்புக்களை மதிப்பீடு செய்து இங்கு வசித்த மக்களுக்கு சேத்துக்குடாவில் உள்ள வயல் நிலங்களிலும், வலைக்கட்டிறவு பகுதியில் வசித்த மக்களுக்கு திருப்பெருந்துறையிலும் காணி பகிர்ந்தளித்து அவர்களை வெளியேற்றிவிட்டு குடியிருப்புக்களை இடித்து தரைமட்டமாக்கினர்.

2ம் கட்டமாக மேலும் 150மீற்றருக்குட்ப்பட்ட வீடுகளுக்கு மதிப்பீடு செய்து அவர்களுக்கு திமிலைதீவுப் பகுதியில் காணி வழங்கியதுடன் அவர்கள் வீடுகளும் தரைமட்டமாக்கப்பட்டன. சுவிகரிக்கப்பட்ட இந்த 250மீற்றர் காணிக்குள் புதுநகர், வலையிறவு இரு பாடசாலைகளும், இரு இந்து ஆலயமும், ஆறு கிராமங்களுக்கும் பொதுவான இந்து, கிறிஸ்தவ மயானங்களும், விளையாட்டு மைதானம், பொதுக் கட்டிடங்கள் என யாவும் இழக்கப்படுவதை உணர்ந்த மக்கள் இவற்றினைத் தவிர்த்து விஸ்தரிப்பை நிறைவு செய்யுமாறு ஆறு கிராமங்களையும் உள்ளடக்கி இயங்கும் ஐக்கிய சமூக நல அமைப்புக்களின் ஒன்றியம் குரல் கொடுத்தது. இக்குரல் எவ்விடத்திலும் எடுபடாமல், பாராளுமன்ற உறுப்பினர்களும் மௌனியாக 2000ஆம் ஆண்டு 250 மீற்றருடன் எல்லாமாக 500மீற்றர் எல்லை கொண்ட காணி சுவிகரிக்கப்பட்டது. பின்னர் வெளியேற்றப்பட்ட மக்களுக்கு மாற்றுக்காணி எவையும் வழங்கப்படாமையால் அவர்கள் உறவினர் வீடுகளிலும், வாடகை வீட்டிலும் வசித்து விட்டு, வேறுவழி இல்லை என வேறு இடம் தேடி குடிபெயர்ந்தனர்.

இந்நிலையில் பாடசாலையும், ஆலயமும், மயானமும் விமானநிலைய எல்லைக்குள் அடங்குவதனால் பாடசாலை, ஆலயம் இவைகள் இயங்கக்கூடாதென்றும், பிரேதங்களை அடக்கம் செய்ய வேறு இடம் தேடும்படியும் விமானநிலைய கட்டளை அதிகாரியினால் விடுக்கப்பட்ட உத்தரவு வந்து இடி மேல் இடியாய் விழ மக்கள் உணர்வுகள் வெளிப்பட்டு போராட்டமாக மாற ஊர்வலங்களும், கோசங்களும் உணர்வுகளைத் தூண்ட ஊடகங்களும் அவற்றிற்கு முன்னுரிமை கொடுத்து செய்திகளை வெளியிட்டன.

"பேச வேண்டியதை பேச வேண்டிய இடத்தில், பேச வேண்டிய நேரத்தில் பேசாவிட்டால் பெற வேண்டியதும் இல்லாது போகும்" என்று மக்கள் போராட்டத்தில் விடுக்கப்பட்ட குரலின் விளைவாக, பிரதேச செயலாளர் திரு.க.கதிர்காமநாதன் அவர்கள் தலைமையில் விமானப்படை கட்டளை அதிகாரி ஆர்.எஸ்.விஜயசுந்தர அவர்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுமக்கள் பிரதிநிதிகளும் கலந்து கொள்ள நடாத்தப்பட்ட கலந்துரையாடலின் முடிவில் தற்காலிகமாக சில உடன்பாடுகள் எட்டப்பட்டன. 24.03.2000ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட இத்தீர்மானத்தின்படி பாடசாலை வழமை போல் இயங்கவும் தேவைப்படின் மாலை 6.00மணி வரை பாவிப்பதற்கு அனுமதி வழங்கப்படும் என்றும், ஆலயத்தில் பகல் நேரத்தில் பூசை நடாத்த அனுமதிப்பதாகவும் மாலை 6.00மணிக்கப் பின்னர் ஆலய வளவுக்குள் எவரும் நடமாடக்கூடாதென்றும், விசேட பூசைகள் நிமித்தம் மேலதிக நேரம் தேவைப்படின் விமானப்படை அதிகாரியிடம் முன்அனுமதி பெற வேண்டுமென தீர்மானிக்கப்பட்டதுடன் ஆலயத்தில் தங்கியிருப்பதற்கு ஆலயகுருக்களும், அவர் உதவியாளர் மட்டுமே அனுமதிக்கப்படுவர் என்றும் அவர்கள் மாலை 6.00மணி முதல் மறுநாள் காலை 6.30மணி வரை வெளியில் நடமாடக்கூடாதென்ற உத்தரவுடன் அவர்கள் பற்றிய முழு விபரங்களும் விமானப்படை அதிகாரிக்கு சமர்ப்பிக்கும்படியும் கேட்கப்பட்டது.

ஆலயத்தில் ஒலிபெருக்கி பாவிப்பதாயின் குறைந்த சத்தத்துடன் அவற்றைப் பயன்படுத்த அனுமதிப்பதாகவும், மயானத்தில் இறந்தோர் உடலை விமானப்படையினரின் அனுமதி பெற்று அடக்கம் செய்யலாம் என்றும், பொதுமக்கள் விமானப்படை எல்லைக்கருகாமையில் நடமாடக்கூடாதென்ற உத்தரவும் இடப்பட்டது. மேலும் பாடசாலை, இந்துக்கோவில், மயானம் என்பன விமானநிலைய விஸ்தரிப்பு எல்லைக்குள் இருப்பதனால் இவற்றை வேறு இடத்துக்கு மாற்றுவதற்கு கல்வி திணைக்களம், ஆலய பரிபாலனசபை, மாநகரசபை ஆகியவை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற நிபந்தனையுடனான தீர்மானமும் எடுக்கப்பட்டு இத்தீர்மானக்கடிதம் அரசாங்க அதிபருக்கு உடன் அனுப்பி வைக்கப்பட்டது.

மக்கள் மனதில் பீதியுடன் நடமாட இப்பதட்டமான சூழ்நிலையில் பாடசாலையும், ஆலயமும் நடைபெற மழைக்காலங்களில் வெள்ளநீர் தேங்கிநிற்கும் வயல் காணிகளில் மக்கள் குடியேற திருப்பெருந்துறைக் கிராமத்துக்கும், இக்கிராமத்துக்கும் உள்ள போக்குவரத்துப்பாதை துண்டிக்கப்பட்டு சுமார் 7 கிலோமிற்றர் தூரம் சுற்றி வரும் நிலை ஏற்றட்டது. முன்னர் இக்கிராமங்கள் யாவும் திமிலதீவு 181 கிராமசேவை உத்தியோகஸ்தரின் கீழ் ஒரே பிரிவாக இயங்கி வந்தது. பின்னர் 01.09.1987இல் திருப்பெருந்தறை பிரிக்கப்பட்டு 181-A பிரிவாகவும் 01.10.1989இல் வீச்சுக்கல்முனை பிரிக்கப்பட்டு 181-B பிரிவாகவும் இயங்க 1993–1994 காலப்பகுதியில் புதூநகர் 181-C பிரிவாகவும் சேத்துக்குடா 181-Dபிரிவாகவும் பிரிக்கப்பட்டு கிராமசேவை உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட்டனர். போக்குவரத்துக்காக புதிய வீதிகளும் அமைக்கப்பட்டன.

## வெற்றிப்பாதையில்

முன்னர் ஸ்தாபிக்கப்பட்ட மட்/விமான நிலைய விஸ்தரிப்பினால் பாதிக்கப்பட்டோர் சங்கம் மேற்கொண்ட போராட்டங்களின் பயனாகவும் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ பொன் செல்வராசா அவர்களின் முயற்சியினாலும் காணிகளை இழந்தவர்களுக்கு இழப்புக்கான நக்ஷ்டஈடு 1997இல் வழங்கப்பட்ட போதிலும், ஐக்கிய சமூக நல அமைப்புக்களின் ஒன்றியம் தொடர்ந்து தங்கள் கோரிக்கைகளை முன்வைத்து குரல் கொடுத்த வண்ணமே இருந்தனர். ஆலயத்தில் பூசை நடாத்த அனுமதி வழங்கப்பட்டிருந்த நிலையில் கோயில் குருக்கள் ஆலயத்தில் தங்கவேண்டிய நிலை ஏற்பட்டதனால் அவருக்காக சிறு விடுதி ஒன்றினை பரிபாலன சபையினர் அமைத்தனர். இச் செயல் விமானப்படையதிகாரியின் கோபத்தை தூண்டவே பரிபாலன சபையினர் விமானப் படைத்தளத்துக்கு அழைக்கப்பட்டு கடுமையாக எச்சரிக்கப்பட்டதுடன், இப்பிரச்சினைக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் பொலிஸ் நிலையம் வரை கொண்டு செல்லப்பட்டு அங்கும் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். இவர்களால் கட்டப்பட்ட விடுதியும் விமானப்படையினரால் இடிக்கப்பட்டது.

தீர்க்கதரிசனமற்ற, மற்றும் சுயநல சிந்தனையுடன் எடுக்கப்படும் முடிவு, அடக்கு முறையால் வெடிக்கும் யுத்தங்கள் அழிவையே தரும் போராளிக் குழுவான விடுதலைப் புலிகளுக்கும், அரச படைகளுக்கும் நடைபெற்ற யுத்தத்தால், விமானங்கள் குண்டு வீசித்தாக்க, எறிகணை ஏவிய குண்டுகள் வந்து குடியிருப்புகளில் வெடித்துச் சிதற, ஊர் அழிந்து, உறவுகள் அழிந்து, உடல்கள் சேதமுற அவதியுற்று மக்கள் வருமானம் ஏதுவுமின்றி பசி, பட்டினியால் வாடி, நடமாட அஞ்சி வாழ, இரக்கமற்றோர் செய்த இதயமற்ற ஆயுதங்கள் அதை ஏந்தியவரையும் அழிக்க அரசபடையிடம் அகப்பட்ட இளம்வயதினர் பயங்கரவாதி எனக்கருதி சிறையில் அடைபட, பலர் காணாமல் போக, கடலிலும் வாவியிலும் சடலங்கள் மிதந்து வர, என்ன பாவம் செய்தோம் என உறவுகளை பறிகொடுத்தோர் புலம்ப, இருந்தவர்கள் இருப்பதை விற்று புகளிடம் தேடி வெளிநாடு ஓட, இல்லாதவர் அகதியாய் அல்லல் பட, கவலையும் கண்ணீருமாய் வாழ்ந்த மக்களுக்கு ஆறுதல் தந்திட கடவுள் தந்த சந்தர்ப்பமாய் அமைந்தது அந்நிகழ்வு.

காலங்கள் நமக்கு சந்தர்ப்பங்களை உருவாக்கித் தரத்தான் செய்கிறது அதை நாம் பயன்படுத்தும் விதத்தில் தான் அதன்பலனும் அமைகிறது. 2002ஆம் ஆண்டு நோர்வே நாட்டு அரசாங்க அனுசரனையுடன் போராளிக் குழுவான தமிழர் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும், அரசாங்கத்துக்கும் இடையில் நடைபெற்ற சுமுகமான பேச்சுவார்த்தையின் நிமித்தம் சமாதானமான சூழ்நிலை உருவாகியது. இந்நிலையில் விமானப்படையினர் அவசர அவசரமாக விஸ்தரிக்கப்பட்ட 500 மீற்றர் எல்லையை வரையறுத்து முள்வேலியடைத்தனர். இந்நிலையினை எதிர்த்து ஐக்கிய சமூக நல அமைப்புக்களின் ஒன்றியம் நடாத்திய மக்கள் எதிர்ப்பு போராட்டம் மீண்டும் எழுச்சிபெற்று 19.06.2002ந் திகதி பரபரப்பை ஏற்படுத்தியது.

இக்காலப்பகுதியில் விமானைப்படை அதிகாரியாக இருந்த திரு. சிறிநந்த அவர்களால் இவ் அமைப்பு அழைக்கப்பட்டு உங்கள் கோரிக்கை நியாயமானதாக இருந்தாலும் இதற்கான முடிவை பாதுகாப்பு அமைச்சே எடுக்க வேண்டும் அவர்கள் எடுக்கும் முடிவை என்னால் ஏற்றுக் கொள்ள முடியுமே தவிர வேறு எதுவும் செய்யமுடியாதென்ற தன் கருத்தை தெரிவித்தார்.

"செய்து முடித்திடும் வழியறிந்தால் முடியாது என்று எதுவுமில்லை. அவ்வழி நாடி விடாது முயற்சி செய்தால் வெற்றியும் ஒருநாள் நம்மை வந்தணைக்கும்." தங்கள் முயற்சியில் மனம் தளரா அமைப்புக்களின் ஒன்றியம் சம்மந்தப்பட்ட சகல அமைச்சுக்களுக்கும், பாராளுமன்ற உறுப்பினர்கள், உயர்அதிகாரிகளுக்கும் கடிதத் தொடர்பினை ஏற்படுத்தினர் இவர்கள் மேற்கொண்ட முயற்சியின் பலனாக கொழும்பு விமானப்படை தலைமையகத்தி லிருந்து 27.02.2003ஆம் திகதியிடப்பட்ட பதில் கடிதம் வந்தது பாடுபட்டு பலனை எதிர்பாத்து காத்திருந்த மக்களுக்கு அது மகிழ்வைத்தந்தது. அதில் இருந்த செய்தி இதுதான்.

விமான நிலைய விஸ்தரிப்புக்காக 500 மீற்றர் காணி சுவிகரிக்கப்பட்டு அதற்கான நஷ்டஈடு வழங்கப்பட்டு விட்ட நிலையில், மேற்கொண்டு விஸ்தரிப்பு குறைப்பு எதுவும் செய்ய முடியாது என்றும், இருந்தும் தங்கள் கோரிக்கையை சாதகமாக பரிசீலனை செய்து பாடசாலை, ஆலயம், மயானம் இவைகளை விடுவித்து மக்களின் பயன்பாட்டிற்கு கையளிப்பதாகவும், இவற்றினை வேறுபடுத்தி அவற்றுக்கான வீதியையும் தாங்களே அமைத்துத் தருவதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கிணங்க விமான நிலைய கட்டிடத்திற்கு அண்மித்திருந்த கிறிஸ்தவ மயானத்தை வேலியால் மறித்து தங்கள் எல்லைக்குள் எடுத்துக் கொண்டு இந்து மயானத்தை விடுவித்து அதற்கான வீதியையும் அமைத்துத்தந்து, அம்மயானத்தை இரு சமயத்தவர்களும் பயன்படுத்த ஏற்பாடு செய்தனர். இதேபோல் முன்னைய பாடசாலை கட்டிடத்தை தங்கள் பாவனைக்கு எடுத்துக் கொண்டு, சுவிகரிக்கப்பட்ட காணியில் ஒரு பகுதியை பாடசாலை அமைப்பதற்காக ஆலயத்துக்கு அருகாமையில் வழங்கினர்.

"சாமி விடை கொடுத்தாலும் பூசாரி விடை கொடுக்க மாட்டார்" என்று கிராமத்தில் சொல் வழக்கில் உள்ளதன்படி காணி வழங்கப்பட்டிருந்தும், அதில் பாடசாலை கட்டுவதற்கு நிதி ஒதுக்கப்பட்டு கட்டிடம் கட்ட ஆரம்பிக்கப்பட்ட நிலையில் மட்/விமானப்படை அதிகாரியினால் தடைவிதிக்கப்பட்டது. இதற்கு எதிராக சமூகநல அமைப்புக்களின் ஒன்றியம் குரல் கொடுக்க விமானப்படை உயர் அதிகாரிகள் குழுவொன்று கொழும்பில் இருந்து மட்டுநகர் வந்து பார்வையிட்டு அனுமதி வழங்கினர் அதன்படி இக்காணியில் பாடசாலைக்கான புதிய கட்டிடம் 2005ஆம் ஆண்டு ஒரு கோடியே எண்பது லட்சம் ரூபா செலவில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியின் கீழ் அரசாங்கத்தால் கட்டப்பட்டது இத்துடன் வலையிறவு பாடசாலையும் 70 இலட்சம் ரூபா செலவில் கட்டப்பட்டது.

## வளர்ச்சிப்பாதையில்

எதனை இழந்தாய் எதனைப் பெற்றாய்? எதற்காகப் போராடினாய் எதனை சாதித்தாய்? என்னும் கேள்வி தனிமனித வாழ்வுக்கு மட்டுமல்ல சமூகத்திற்கும் பொருந்தும். இதன் தேடலும் அதன் அடைவும் பற்றி சிந்தித்தால் இன்று கிழக்கிலங்கையில் முக்கியத்துவம் பெற்று மட்டக்களப்பு மக்களுக்கு வரப்பிரசாதமாக விளங்கும் மட்/போதனா வைத்தியசாலையும், தாதியர் பயிற்சிக் கல்லூரியும் அன்று வைத்தியசாலை விஸ்தரிப்புக்காக தங்கள் நிலங்களை மனமுவந்து விட்டுக்கொடுத்து புதுநகரில் குடியேறிய மக்கள் தங்கள் இழப்பில் பெற்ற பெரும்பேறாகவே அதனைக் கருதுகின்றனர்.

போராடினார்கள் சாதித்தார்கள் அதன் பலனாக ஆலயம் மீண்டது. மயானத்தின் ஒருபகுதி மீண்டது. பாடசாலையும் முன்பிருந்ததைவிட பிரதானவீதியில் அழகுடன் அமைந்தது. சனசமூக நிலையத்துக்கு ஒதுக்கப்பட்ட காணியில் தன்னார்வத்தொண்டு நிறுவனத்தால் கட்டப்பட்ட கட்டிடத்தில் நூல்நிலையமும், முன்பள்ளி பாடசாலையும் இயங்குகிறது. விளையாட்டு மைதானம் வழங்கமுடியாதென இழுத்தடிக்கப்பட்டாலும் அது பதிவு செய்யப்பட்ட மைதானமாக இருந்ததனால் அதற்கு இடம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படவே சுவிகரிக்கப்பட்ட காணியில் இருந்து பாடசாலைக்கு முன்னால் இடம் ஒதுக்கப்பட மக்களின் அவ் எண்ணமும் நிறைவேறியது.

அவசரகாலச் சட்டம், பயங்கர வாதச் தடைச்சட்டம் என இராணுவ ஆதிக்கம் நிறைந்த இக்காலப்பகுதியில் மக்கள் போராடினாலும், பாதிக்கப்பட்டிருந்தாலும் அதன் தாக்கம் அரச அதிகாரிகள் மனதை நெகிழச் செய்தாலும் அவர்கள் அரச இயந்திரத்துக்கு கட்டுப்பட்டு கடமையாற்ற வேண்டியவர்களாகவே இருந்தார்கள். இந்நிலையிலும், மக்கள் நலன் கருதி அவர்கள் எடுத்த முயற்சிகள் எவராலும் மறக்க முடியாததொன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10.05.1993ஆம் ஆண்டு வர்த்தகமானி அறிவித்தலின் படி சுவிகரிக்கப்பட்ட மட இல 883இல் காட்டப்பட்ட 106.666 ஹெக்டேயர் (263.45 ஏக்கர்) விஸ்தீரணம் கொண்ட 386 காணித்துண்டுகளுக்கு அதன் வளங்களுக்கமைய அன்றைய மதிப்பீட்டின்படி 3 கட்டங்களில் நஸ்டஈடு வழங்க துரித நடவடிக்கை எடுத்ததுடன் சேற்றுக்குடா, திமிலைதீவு, திருப்பெருந்துறை ஆகிய கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகளில் உள்ள காணிகளை இனம் கண்டு அவற்றில் இருந்து காணிகளை இழந்தோருக்கு பகிர்ந்தளித்தனர்.

நீண்ட காலமாக தீர்க்கப்படாது இழுபறி நிலையில் இருந்த குடிநீர் பிரச்சனையையும் மக்கள் தங்கள் போராட்டத்தின் மற்றொரு அம்சமாக இணைத்துக் கொள்ள ஊடகங்களும் அதற்கு முக்கியத்துவம் கொடுத்து செய்திகளை வெளியிட்டன. அதில் 09.11.2002 ல் வீரகேசரி வார வெளியீட்டில் வெளிவந்த இரண்டாம் தர நகரங்களுக்கான குடிநீர் விநியோகத் திட்ட அறிக்கை யாவரினதும் கவனத்தை ஈர்த்தது. சந்தர்ப்பங்களை சரியாகப் பயன்படுத்தினால் சாதகமான பலன் கிடைக்கும் . அதன்பலனாக இன்று உன்னிச்சை குளத்தில் இருந்து பெறப்படும். நீர் வவுணதீவு சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிக்கப்பட்டு மட்டக்களப்பு மாவட்டத்துக்கு மட்டுமல்லாது அதற்கு அப்பாலுள்ள மக்களுக்கும் குடிநீர் கிடைக்க வழிவகுத்துள்ள தெனில் அதற்குக் காரணமாக அமைந்ததும், துரிதப்படுத்தியதும் இப்போராட்டம் என்றால் அது மிகையாகாது.

போராடினோம் சாதித்தோம் சமாதானம் நிலவியது இருந்தும் நிம்மதி நிலைக்கவில்லை எதற்காக சீற்றம் கொண்டதோ இயற்கை? 26.12.2004 அன்றைய தினம் உலக வரலாற்றில் மறக்க முடியாத கறுப்பு ஞாயிறுவாக அமைந்தது சுமத்திரா தீவில் 9.0 ரிச்சட் அளவில் ஏற்பட்ட நிலநடுக்கம் இந்து சமுத்திரத்தில் சுனாமியாக உருவெடுத்து ஆசிய நாடுகளில் வரலாறு காணாத அழிவுகளை ஏற்படுத்தியதுடன் இலங்கையின் கரையோரப்பகுதி நிலங்களை கொள்ளை கொண்டு வரைபடத்தின் அமைப்பிலும் மாற்றம் செய்தது. இச்சுனாமியின் கோரப்பசிக்கு

| | |
|---|---|
| இந்தோனேசியா | 173981 |
| இலங்கை | 30.967 |
| இந்தியா | 16383 |
| தாய்லாந்து | 5322 |
| கிழக்கு ஆபிரிக்கா | 137 |
| மாலைத்தீவு | 82 |
| மலேசியா | 74 |
| மியன்மார் | 59 |
| பங்களாதேஷ் | 02 |
| ஆபிரிக்கநாடுகள் | 298 |

என மொத்தம் 227305 பேர்களை பலி எடுத்து ஏராளமானவர்களை அனாதைகளாக்கி தவிக்கவிட்டுச் சென்றது. யுத்தத்தால் அழிவுகளை சந்தித்த தமிழ் மக்களுக்கு மேலும் அழிவுகளை ஏற்படுத்தியது. இவ்வழிவின் போது பொங்கி பெருக்கெடுத்து, வாவிகளை நிறைத்து, பாலங்களையும் உடைத்து சுமார் 18அடி உயரம் வரை பொங்கி வந்த கடல் என்ன நினைத்ததோ தெரியவில்லை அகப்பட்டதை சுருட்டிக்கொண்டு வந்தவழியே பின்வாங்கிச் சென்றது. இதனால் இக்கிராமத்துக்கு எவ்வித சேதமும் ஏற்படாது தப்பிப்பிழைத்தது. இக்கடல் பெருக்கு திரும்பாது முன்னோக்கி வந்திருந்தால் இக்கிராமம் என்ன இந்நாடே கடலுக்குள் அடக்கமாயிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில் அழிவுகள் கண்டும் தடைகள் பல வந்தும், போராட்டங்கள் நடாத்தப்பட்டும் ஆலயத்தில் நடக்கவேண்டிய பூசைகளோ, திருவிழாக்களோ தடையின்றி நடக்க, அபிவிருத்தி வேலைகளும் தொடர்ந்தன என்றால் அது என்ன? தோல்வி ஏற்பட்டதென்ற துணிவா? இல்லை கடவுள் துணையுண்டு அவர் கைவிடமாட்டார் என்ற நம்பிக்கையா? ஆம்! அந்த நம்பிக்கையின் வெளிப்பாடாகவே தொடரும் அவர்கள் சேவையின் வரிசையில் 1992ஆம் ஆண்டு - பக்தர் ஒருவரால் ஆலய பாவனைக்காக ஒலிபெருக்கி அன்பளிப்பாக வழங்கப்பட்டதுடன், பக்தர்கள் பாவனைக்காக மலசலகூட வசதிகளும் அமைக்கப்பட்டன.

1993ஆம் ஆண்டு - மடப்பள்ளி நிறுவப்பட்டது.

22.03.1994 ஆம் ஆண்டு - காந்தன் குருக்களின் ஆலோசனைப்படி இந்து ஆகம முறைப்படி ஆலயம் அமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு, அடிக்கல் சுவாமி ஓங்காரானந்தா அவர்களால் நடப்பட்டது.

1996 ஆம் ஆண்டு - தொடர்ந்து நடந்து வந்த ஆறு திருவிழாக்கள் ஏழாக உயர்த்தப்பட்டு நடைபெறலாயிற்று.

1997 ஆம் ஆண்டு - ஆலயத்துக்கு நக்ஷ்டஈடாக ரூபா 5 இலட்சம் வழங்கப்பட்டது. இக்காலப்பகுதியில் சிவசிறி. முருகதாச குருக்கள் பூசகராக கடமையாற்ற விக்கிரகங்கள் யாவும் கருங்கல்லினால் செதுக்கப்பட்டு ஸ்தாபிக்கப்பட்டதுடன் சிவசிறி மாணிக்கவாசகக் குருக்களினால் முதலாவது கும்பாபிஷேகமும் நடைபெற்றது. 2002 ஆம் ஆண்டு முருகதாச குருக்கள் காலமானதைத் தொடர்ந்து சிவசிறி சபாரெட்ணம் குருக்கள் நியமிக்கப்பட்டார்.

1999 ஆம் ஆண்டு -பாடசாலை சந்தியில் சந்திப்பிள்ளையார் உண்டியல் அமைக்கப்பட்டது.

2000 ஆம் ஆண்டு - ஆலயத்தில் கொடியேற்றத்துடன் மகோற்சவம் நடைபெற்றது.

2003 ஆம் ஆண்டு விமான நிலைய விஸ்தரிப்பில் இருந்து ஆலயம் விடுவிக்கப்பட்ட அறிவித்தல் கிடைத்த பின்னர்

2003 ஆம் ஆண்டு - யாகசாலை அமைக்கப்பட்டதுடன் அதனைத்தொடர்ந்து முன்னர் இடிக்கப்பட்ட பூசகர் விடுதியும் கட்டப்பட்டது.

2004 ஆம் ஆண்டு - வசந்தமண்டபத்துடன் உள் வீதிச்சுற்றுமதிலும் அமைக்கப்பட்டதுடன் தரைக்கு மாபிள்களும் பதிக்கப்பட்டது.

2006 ஆம் ஆண்டு - மணித்தூண் அமைக்கப்பட்டது. அத்துடன் அன்பளிப்பு செய்யப்பட்ட திருப்பெருந்துறை காணியில் ஒரு பகுதி விற்ற பணம் ரூ 1,75000 கிடைக்கப் பெற்று ஆலய அபிவிருத்திக்கு பயன்படுத்தப்பட்டது.

இந்நிதி விடயத்தில் தீர்க்க தரிசன சிந்தனையுடன் சமயத்துக்கும், சமூகத்துக்கும் பயன்படும் விதத்தில் முதலீடு செய்து ஆலயத்துக்கு நிரந்தர வருமானம் தரும் வழியினை பரிபாலன சபை மேற்கொள்ளவில்லை என்ற ஆதங்கம் மக்கள் சிலரிடம் இருந்தாலும், ஆலயத்தைக் கட்டி அழகு பார்க்க வேண்டும் என்ற அவா மேலோங்கி இருந்ததனால் ஆலயத்தின் அபிவிருத்தி வேலைகள் தொடர்ந்தன. அதன் விளைவாக

2008 ஆம் ஆண்டு - ஆலய சுற்று மதிலைச் சுற்றி மின்விளக்குகள் பொருத்தப்பட்டன.

2010 ஆம் ஆண்டு - பக்தர் ஒருவரால் விஸ்ணு பரிவாரக் கோயில் அமைக்கப்பட்டதுடன் சீமேந்து தரைகள் யாவும் மாபிள் பதிக்கப்பட்டு இரண்டாவது கும்பாபிஷேகம் 17.11.2010 ஆம் திகதி சிவசிறி நாராயண சண்முகநாத குருக்களினால் நடாத்தப்பட்டதுடன், வருடம் தோறும் வரும் அதே திதியில் சங்காபிஷேகம் செய்யும் நடைமுறையும் மேற்கொள்ளப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2012 ஆம் ஆண்டு – முதலாவது தொகுதி சுற்று மண்டபம் கொங்றீட் கூரையினால் சுமார் 17 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டது.

2012 ஆம் ஆண்டு – உற்சவ கால திருவிழாவின் போது வெளிவீதி சுற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்த வெளிவீதிப் பாதையை விமானப்படையினர் ஆலயத்துக்கு நிரந்தரமாக விட்டுத் தந்தனர்.

2014 ஆம் ஆண்டு – புதிய சித்திரத்தேர் சுமார் 23 இலட்சம் ரூபா செலவில் உருவாக்கப்பட்டு திருவிழாவின் போது வீதி உலா வந்தது.

இன்று பிரபல்யமான இவ்வாலயத்தில் கடைப்பிடிக்கப்படும் நாளாந்த மூன்று கால பூசையுடன் வார, மாத, வருட, திதி, விரத, விசேட பூசைகள் அனைத்தும் இங்கே நடைபெறுவதுடன் வருடாந்த திருவிழா தீர்த்தோற்சவத்துடன் முதல், கடைசி இரு நாட்களும் அமுது வழங்கும் நிகழ்வுடன், கிரகதோச நிவர்த்தி, யாக பூசைகளும் இருமனம் கலந்த திருமணச் சடங்குகளும் இங்கே நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும். இவற்றுள் ஆனி உத்தர மகோற்சவ திருவிழாவின் முதல் நாள் நடைபெறும் கொடியேற்ற விழாவின் போது மட்/ஆனைப்பந்தி ஸ்ரீ. சித்தி விக்கினேஸ்வரர் ஆலயத்தில் இருந்து "கொடி" மேள தாள, நாதஸ்வர வாத்திய இசை முழங்க ஊர்வலமாக கொண்டு வரப்பட்டு காலை 7.00மணியில் இருந்து 12.00 மணிக்குள் இடைப்பட்ட நேரத்தில் கொடியேற்றும் வைபவம் நடைபெற வேண்டும் என்பது இவ்வாலயத்தின் நியதியில் ஒன்றாக கடைப்பிடிக்கப்படுவதுடன், அன்றைய தினம் பக்தர் ஒருவரால் அமுது வழங்கல் நிகழ்வும் நடைபெறுகிறது. தொடர்ந்து நடைபெறும் 10 நாள் திருவிழாக்களில் சிறப்புமிக்கதாக, மாம்பழத் திருவிழா, திருவேட்டைத் திருவிழா, தேர்த்திருவிழா என்பன நடைபெற்று மறுநாள் தீர்த்தோற்சவத்துடன் பண்டைய மரபின் படி தாகசாந்தி நிலையம் அமைத்து குளிர்பானம் வழங்குவதுடன் தொடர்ந்து அமுது வழங்கல் நிகழ்வும் புதுநகர் ஸ்ரீ சித்தி விநாயகர் அன்னதான சபையினரால் நடைபெற்று வருவது சிறப்பம்சமாகும்.

இதனைத் தொடர்ந்து இந்து இளைஞர் மன்றத்தின் தலைவராகிய திரு.சி.மில்டன் அவர்களின் சிந்தனையில் வெளிவந்த சஞ்சிகையே "அற ஒளியாகும்." இது அறநெறிப் பாடசாலை மாணவர்களின் திறமையினை உள்ளடக்கி ஆலயங்களின் வரலாற்றை சுருக்கமாக எடுத்தியம்பி சைவசமயத் தத்துவங்களை தாங்கி வெளிவந்த இச்சஞ்சிகை சமய அறிஞர்களால் பாராட்டினைப் பெற்றது.

புத்தொளி,முதிர்ஒளி,புதுநகரின் புதுஒளி, அறஒளி எனும் நான்கு ஒளிகளும் நான்கு திசைகளிலும் இருந்து வருடம் தோறும் வெளிவந்து புதுநகருக்கு ஒளி கொடுக்க சில வருடங்களுக்கு முன்னர் திட்டமிடப்பட்டு நிறைவேறாது உறங்குநிலையில் இருந்த விதையாகிய "புதுநகரும் ஆலயவரலாறும்" என்னும் விதையும் முளைவிட ஆரம்பித்து தற்போது உங்கள் கரங்களில் தவழ்கிறது.

இவ்வகையில் ... புதுநகர் ஸ்ரீ சித்தி வினாயகர் ஆலயத்தின் வளர்ச்சி முன்னிலை பெற்று விளங்க அண்மையில் அமைந்துள்ள திரௌபதியம்மன் ஆலயத்தில் அம்மன் சடங்கு தீப்பாய்தல் நிகழ்ச்சி என பூசை வழிபாடுகள் நடாத்தப்பட்டு வருகிறது. திமிலைதீவில் அமைந்துள்ள பழமை வாய்ந்த விஸ்ணு ஆலயத்தின் மகா விஸ்ணுவின் அவதாரமான கிருஸ்ண பகவானை மையப்படுத்திய திருவிழாவையும் பூசை வழிபாடுகளையும் நடாத்தி வர இதன் அருகாமையில் இக்கோவில் நிருவாகத்தினரால் காளியம்மன் ஆலயமும் அமைக்கப்பட்டு, வருடம் தோறும் தீமிதிப்பு விழாவுடன் கூடிய சடங்கு முறைகளும் நடைபெற்று வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்திமிலைதீவுப் பகுதியிலே வயல் நிலங்களின் மத்தியில் 2010ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட ஸ்ரீ பாலநாகம்மா ஆலயத்தில் மேலும் ஒரு கிராமிய வழிபாட்டு முறையினை மையப்படுத்தியதாக பாலாபிஷேகத்துடனான சடங்கு வழிபாட்டு முறை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அத்துடன் விமான நிலைய விஸ்தரிப்பால் வலையறவு மக்கள் பலர் வேறிடங்களில் இடம் பெயர ஒரு பகுதி மக்கள் திமிலைதீவு கிராம சேவகர் பிரிவுக்குள் உள்வாங்கப்படவே அவர்கள் முன்னர் வழிபட்டு வந்த மடத்துப் பிள்ளையார் ஆலயத்தை திமிலைதீவுப் பகுதியில் 2007ஆம் ஆண்டு ஸ்தாபித்தனர். இவ் ஆலயத்தில் சித்திரா பௌர்ணமி திருவிழாவுடன் ஏனைய விரத பூசை வழிபாடுகளும் நடைபெற்று வருகின்றன.1985ஆம் ஆண்டுக்கு முன்னர் ஸ்தாபிக்கப்பட்ட ஆலயமே மாணிக்கப் பிள்ளையார் ஆலயமாகும். வலையறவுப் பகுதி மக்களின் ஒரு பகுதியினர் அங்குள்ள வயல் நிலங்களில் குடியேற்றப்பட அவர்களே அவ் ஆலயத்தை பரிபாலித்து பூசைகளை நடாத்தி வருகின்றனர்.

சேற்றுக்குடாவில் அமைந்துள்ள ஸ்ரீவிக்னேஸ்வரர் ஆலயமும் 1963இல் இருந்து படிப்படியாக வளர்ச்சியுற்று 2000ஆம் ஆண்டு கும்பாபிசேகத்தினை தொடர்ந்து வருடம் தோறும் ஆவணி மாதத்தின் வளர்பிறையில் திருவிழா ஆரம்பமாகி 9 நாள் திருவிழாவும் பூரணை தினத்தன்று தீர்த்தோற்சவமும் இடம்பெறுவதுடன் நித்திய பூசையும் விரத பூசைகளும் நடைபெற்று வருகின்றன. புதுநகர் சுற்று வட்டாரத்தில் 8 இந்து சமய ஆலயங்கள் மக்களின் வழிபாட்டு தேவையினை பூர்த்தி செய்கின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## அரசியலும் அபிவிருத்தியும்

மட்டக்களப்பு மாநகரசபை அதிகார எல்லைக்குள் இயங்கும் இவ் ஆறு கிராமங்களும் முன்னர் 4 வட்டாரங்களாக பிரிக்கப்பட்டு கிராம சபையாக இயங்கி வந்தது. இங்கு கிராம சபைத்தேர்தல் என்றால் மக்களுக்கு அது திருவிழாவினைப் போலவே இருந்தது. அப்படியான மனநிலையில் தான் அவர்கள் வாழ்ந்து வந்தனர். அப்போது கிராம சபைத் தலைவராக இருந்த வலையிறவைச் சேர்ந்த அக்கிராசனர் துப்பாக்கிச் சூட்டுக்கு ஆளாகி இறக்கவே அதன் பின்னர் இருவர் அக்கிராசனர்களாக பதவி வகித்தனர். இக்காலத்திலேயே புதுநகர் விளையாட்டுதிடல் அங்கிகரிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

தொடர்ந்து நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களினால் 1982 ஆம் ஆண்டு மாவட்டசபை உருவாக்கப்படவே கிராமசபையின் செயற்பாடு அற்று அதற்குப்பதிலாக ஆறு கிராமங்களிலும் சேவையாற்றும் சங்கங்களின் ஒன்றியமாக அதே ஆண்டில் கிராமோதய சபை உருவாகியது. இது குறுகிய காலமே செயற்படக்கூடியதாக இருந்தாலும் உருவாக்கப்பட்ட இச்சபையின் காலத்தில் விளையாட்டு மைதானத்தில் பாரதி கலையரங்கு அமைக்கப்பட்டு மக்கள் ஊர்வலமாக வந்து பாரதி நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடினர் அத்துடன் புதுநகர் சந்தியில் இயங்கி வந்த உபதபாலகம் திமிலதீவு என பதியப்பட்டதை உத்தியோக பூர்வமான முறையில் புதுநகர் என மாற்றினர். இவர்கள் முயற்சியினால் கிராமத்தில் மின்சாரம் உட்பட பல சேவைகள் மேற்கொள்ளப்பட்டாலும் இச்சபையும், காலத்தின் அரசியல் மாற்றத்தால் அற்றுப்போக 1987ஆம் ஆண்டு இலங்கை இந்திய நாடுகளுக்கிடையில் நடைபெற்ற சமாதான ஒப்பந்தத்தின் விளைவாக மாவட்ட சபையின் ஆட்சி முடிவுற்று மாகாணசபையின் ஆட்சிமுறை உருவாகியது. அத்துடன் இக்காலப்பகுதியிலேயே இக்கிராமங்களும் மாநகர சபையின் நிருவாகத்துக்குள் உள்வாங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கிராமத்தை பொறுத்தவரையில் வவுணதீவுக்கும் வலையிறவுக்கும் இடையிலான ஆற்றில் பாலம் அமைத்தலும் குடிநீர் பிரச்சினை தீர உன்னிச்சைக்குளத்தில் இருந்து நீர்விநியோகம் செய்யும் திட்டமும் நீண்டகாலமாக நிறைவேறாமல் இழுத்தடிக்கப்பட்டு வந்தாலும், பாலம் அமைக்கும் திட்டம் மட்டும் எப்படியோ 1975 காலப்பகுதியில் ஆரம்பமாகி 1985ல் கட்டி முடிக்கப்பட்டது. இது மிக நீண்ட காலமாகும். இதற்கு இங்கு பதவி வகித்த இரு பாராளுமன்ற உறுப்பினர்களிடையே உள்ள போட்டி தன்மையே காரணமாகும்.

"ஒவ்வொருவருக்கும்" ஒவ்வொரு கொள்கையிருந்தாலும் அவர்கள் மாறுபட்ட கருத்துக்களை உடையவர்களாக இருந்தாலும், சமூகம் என வரும்போது தீர்க்கதரிசனத்துடன் சிந்தித்து மக்கள் நலனே பெரிதெனக்கருதி எடுக்கும் முடிவுகள் சுயநலமற்று நியாயமானதாக அமைந்தால் நாடு செழிக்கும், மாறாக பகைவுணர்வும், குரோதமும், சுயநலசெயற்பாடுகளும் மக்கள் ஒற்றுமையை குலைத்து பிரிவினையை வளர்க்கும். பிரிவினை வந்தால் அழிவுகள் நடக்கும் தொடரும் அழிவுகளால் வரும் பாவமும் பழியும் ஆள்பவர்களையும் வந்து சேரும் இதுவே தர்மமாகும். தர்மம் இதை மறந்து பதவியே மோகமானால் குரங்கிற்கு கிடைக்க வேண்டிய அப்பம் முடிவில் நரிக்கு போய் சேரும் கதையாகிவிடும்"

நாட்டில் ஏற்பட்ட இலகுவில் தீர்வு காணக்கூடிய பிரச்சினைக்கு தீர்வு காண மனமில்லாத சில உள்ளங்களில் உறைந்திருந்த சுயநலம் கலந்த குரோதத்தின் விளைவாக நடந்த யுத்தத்திலும் சுனாமியினாலும் ஏற்பட்ட அழிவுகள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்த வெளிநாடுகளில் உள்ள தன்னார்வத்தொண்டு நிறுவனங்கள் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட அவை ஆற்றிய சேவைகள் மக்கள் வாழ்க்கையை ஓரளவு உயர்த்தவே செய்தது. பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடித்தேவையாக முகாம்கள் அமைத்து வசதிகள் செய்து கொடுத்ததுடன் வீடற்றவர்களுக்கு வீடுகளும் பொதுச்சேவை கட்டிடங்களும், பாலங்களும் இவர்களால் கட்டிக்கொடுக்கப்பட்டன.

கிராம மக்களுக்கு நீண்ட காலமாக இருந்த மிகப்பெரிய பிரச்சினையாக குடிநீர் வழங்கும் திட்டம் நிறைவேறும் காலமும் வந்தது. உன்னிச்சை குளத்திலிருந்து நீர் சுத்திகரிக்கப்பட்டு குழாய் மூலம் மட்டக்களப்பு மாவட்டத்துக்கே நீர் வழங்கப்பட்டது 2011 ஆம் ஆண்டு ஆசிய அபிவிருத்தி வங்கியினூடாக 288கோடி ரூபா செலவில் இக்கிராமத்தின் குடிநீர் தேவையும் பூர்த்தி செய்யப்பட்டது.

மேலும் கிராமத்தின் வளர்ச்சியில் ஒரு அங்கமாக 2000ஆம் ஆண்டு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கத்தின் கீழ் எரிபொருள் நிரப்பு நிலையம் அமைக்கப் பட்டதுடன், 13.07.2009இல் மக்கள் வங்கிக் கிளையும் திறக்கப்பட்டு இயங்கி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராம அமைப்புக்களின் சேவை

ஆலயத்தினூடாக பூசைகள், திருவிழா என மக்கள் மகிழ்வுற நிகழ்வுடன் பரிபாலன சபையினர் தொண்டாற்ற ஆலய அமுதுக்குழுவினர் வருடந்தோறும் நடைபெறும் தீர்த்தோற்சவ முடிவில் அமுது வழங்கும் நற்காரியத்தினைப்புரிய இக்கிராமத்தில் தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் சங்கங்கள், அமைப்புக்கள் பற்றிய கண்ணோட்டத்தினை செலுத்தும்போது அன்று இயங்கி தங்கள் குறிக்கோள்தனில் வெற்றிகண்ட ஐக்கிய சமூகநல அமைப்புக்களின் ஒன்றியத்தின் சேவை மறக்கமுடியா தொன்றாகும். விமான நிலைய விஸ்தரிப்புக்காக காணிகள் சுவிகரிக்கப்பட்ட போது இக்கிராமத்தில் உருவாகிய மட்/ விமானநிலைய விஸ்தரிப்பால் பாதிக்கப்பட்டோர் சங்கம் ஏனைய கிராமத்தில் பாதிக்கப்பட்ட மக்களையும் இணைத்துக் கொண்டு ஐக்கிய சமூகநல அமைப்புக்களின் ஒன்றியத்தினை உருவாக்கினர். இவர்கள் மக்களை ஒன்று திரட்டி ஊர்வலம், போராட்டங்களை நடாத்தி வெற்றிகண்டனர். இது மட்டுமாநகர் காணாத மாபெரும் எழுச்சி போராட்டமாக அமைந்தது என்பதை அன்றைய பத்திரிகைகள் மட்டுமல்ல இவ்வரலாற்று நூலும் அதை பெருமையுடன் கூறுகின்றது. மேலும் இவ் ஒன்றியத்தின் பிரதான அங்கமான மட்/ விமானநிலைய விஸ்தரிப்பால் பாதிக்கப்பட்டோர் சங்கம் மட்டக்களப்பு ஆயர் வண.கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்களைச்சந்தித்து தங்கள் பிரச்சினைகளை எடுத்துரைத்ததன் பலனாக "எகட்" நிறுவனத்தினூடாக மக்கள் குடியேற்றப்பட்ட பள்ளக்காணிகளுக்கு மண்போட்டு நிரப்பப்பட்டதுடன் நீர் வழிந்தோட வடிகால் அமைத்து 100 வீடுகளையும் பரவலாக கட்டிக்கொடுத்தார். அத்துடன் முன்னர் பரவிய கோமாரி நோயினால் கால்நடைகளை இழந்த பாதிக்கப்பட்டோருக்காக 3இலட்சம் ரூபாவினை ஒதுக்கி அதனை மட்/கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினூடாக வாழ்வாதார உதவி நிதியாக வழங்கினார். அத்துடன் "இச்சங்கத்தின் எரிபொருள் நிலையத்துக்காக ரூபா 1 இலட்சம் நிதி வழங்கி அது செயற்பட உதவி புரிந்தார்."

மேலும் கிராமத்தில் சேவையாற்றும் கிராம முன்னேற்றச் சங்கம், மாதர்கிராம முன்னேற்றச்சங்கம், சிரேஸ்ட பிரஜைகள் அமைப்பு, புதிய பிறண்ட்ஸ் விளையாட்டுக்கழகம் ஆகியவற்றின் சேவையும் அளப்பரியதே. கிராம முன்னேற்றச் சங்கங்கள் இரண்டும் கிராமத்தின் தேவையினை இனம்கண்டு அவற்றின் முன்னேற்றத்துக்கான ஆக்கபூர்வமான அபிவிருத்தி வேலைகளை செய்து வருகின்றனர்.

அதில் மாதர்முன்னேற்றசங்கம் மாதர்நலம் பேணும் திட்டங்களை நடைமுறைப் படுத்தியும், அவர்கள் வாழ்வாதாரத்துக்கான கடனுதவி திட்டத்தின் கீழ் கடன் வழங்கி கிராமத்துக்கு ஆக்கபூர்வமான சேவையினை ஆற்றி வருகின்றனர்.

முதியோர் நலம் பேணும் சிரேஸ்ட பிரஜைகள் அமைப்பானது. "முதியோர் இல்லங்களுக்கு, உணவை, உடையை, பணத்தை கொடுங்கள் ஆனால் பெற்றோரை கொடுக்காதீர்கள்" என்ற குறிக்கோளை முன் நிறுத்தி வளர்ந்து வரும் சமூகத்தில் இளம்தலைமுறையினரிடம் இருந்து முதியோர் ஒதுக்கப்படக்கூடாது என்பதாலும் அவர்களுக்கும் வாழ்க்கையில் ஒரு நம்பிக்கை, அந்தஸ்து கிடைக்க வேண்டும் என்ற நிலையில் அவர்களின் தேவைகளை இனம் கண்டு அரசாங்க உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதுடன் அவர்களுக்கும் வாழ்வாதார கடனுதவி திட்டத்தின் மூலம் கடன் வழங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைப் பயன்படுத்தி பலன் பெறும் வழியினைக் காட்டுகின்றனர். மேலும் அங்கத்தவர் ஒருவர் காலமாகும் போது அந்திமகால உதவி நன்கொடை நிதியாக ஒரு தொகையும் (தற்போது 10,000) அவரது சந்தா சேமிப்பு தொகையையும் சேர்த்து வழங்கி வருகின்றனர். மேலும் இவர்கள் குடியைக் கெடுக்கும் மதுவையும், புகைத்தலையும், அதிகரித்து வரும் வாகன விபத்துக்களையும் தடுக்கும் பொருட்டு விழிப்புணர்வூட்டும் இவர்களால் வெளியிடப்படும் "முதிர் ஒளிசஞ்சிகை" சிந்தனையைத் தூண்டும் கருத்துக்களைத் தாங்கி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

முன்னர் விளையாட்டு நிகழ்ச்சிகளை நடாத்தி வந்த சனசமூக நிலையம் மட்/மாநகர சபையினால் பொறுப்பேற்கப்பட்டு முழுமையான நூல் நிலையமாக விளங்க அது ஆற்றி வந்த நிகழ்ச்சி நிரல்களை இளைஞர்கள் தொடர்ந்து நடாத்த 2005ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதே "நியூ பிரண்ட்ஸ் விளையாட்டுக் கழகமாகும்." பெரியோர்களினதும் இளைஞர்களினதும் பெரும் மதிப்பினைப் பெற்ற இவ் விளையாட்டுக் கழகம் கிறிக்கற் சுற்றுப் போட்டி, உதைப்பந்தாட்டம் ஆகியவற்றை நடாத்தி வருவதுடன், ஏனைய கிராம மக்களின் ஒத்துழைப்புடன் வருடாந்த விளையாட்டு விழாவினை நடாத்தி வருகின்றனர். இக்கிராமத்தில் கல்வியில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களை இனங்கண்டு பரிசுகள் வழங்கி கௌரவிப்பதுடன் துறை சார்ந்த பெரியோர்களை கௌரவித்து வருவதும் இவர்களின் சிறந்த தன்மைகளில் ஒன்றாகும். மேலும் இவர்கள் மாணவர், இளைஞர் மத்தியில் ஒழுக்க விழுமியங்களில் கவனம் செலுத்தி வருவதுடன் மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வையும் ஊட்டி வருகின்றனர்.

## அறிவியல் வெளிப்பாடு

நற்சிந்தனையின் வெளிப்பாடுகள் சமூக மயப்படுத்தப்படும் போது தான் அது அர்த்தமுள்ளதாகின்றது. என்னதான் அறிவு, திறமை இருந்தாலும் அது குட்டையில் தேங்கிய நீர் போல் மனதுக்குள் மட்டும் அடங்கியிருந்தால் எவருக்கும் எவ்வித பலனுமில்லை என்னும் சிந்தனையின் விளைவாக இக்கிராமத்தில் முதன்முதலாக புதுநகர் விக்கினேஸ்வரா வித்தியாலயத்தின் அதிபர் திரு.த.அருமைத்துரை அவர்களின் முயற்சியினால் 2013ஆம் ஆண்டு "புத்தொளி" என்னும் சஞ்சிகை மலர் மாணவர்களின் திறமையினை வெளிப்படுத்தியும் பாடசாலை வரலாறு உட்பட மாணவர்களை நெறிப்படுத்தும் ஆக்கபூர்வமான கட்டுரைகளையும் வெளியிட்டு 2013ஆம் ஆண்டு கிராமத்துக்கே விழிப்புணர்வூட்டியது. இதன் ஒளி பரவிட முதியோர் அமைப்பு (தற்போது சிரேஸ்ட பிரஜைகள் அமைப்பு) உடலில் முதிர்ச்சி பெற்றென்ன உள்ளத்தில் உயர்ச்சி பெற்றோமா? என்னும் கேள்வியுடன் முதிர் ஒளி சஞ்சிகையினை வெளியிட்டது. திரு.மு.வாமநாதன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு 2014இல் வெளியிடப்பட்ட இச்சஞ்சிகை சமய, சமூக, அறிவியல் சீர்திருத்த சிந்தனைகளை உள்ளடக்கியதாக விளங்கியதுடன் அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமாகிய திருமதி.பி.எஸ். எம். சாள்ஸ் அவர்களால் வெளியிடப்பட்டது.

இதே ஆண்டில் புதுநகர் நூல் நிலைய பொறுப்பாளர் திரு.பூ.சிறிஸ்கந்தராஜா அவர்களின் உள்ளத்தில் ஏற்படுத்திய ஒளியின் தாக்கம் மாணவர்களின் கல்வியை முன்னிலைப்படுத்தி அவர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் திரு.மு.வாமநாதன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு புதுநகர் நூலக வெளியீடாக "புதுநகரின் புது ஒளி" மலர்ந்தது. இந்நூல் மாநகர ஆணையாளர் திரு.மா.உதயகுமார் அவர்களால் வெளியிடப்பட்டு பாராட்டப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனதில் இருந்து மறையும் கிராமிய விளையாட்டுக்கள்

இன்று பலவிதமான விளையாட்டுக்கள் உருவாகி உலகை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தாலும் விஞ்ஞான தொழில் நுட்ப அறிவு கலந்த சில விளையாட்டுக்களில் இளம் தலைமுறையினரின் கவனம் ஈர்க்கப்பட்டிருந்தாலும் அன்று கிராமங்களிடையே காணப்பட்ட விளையாட்டுக்கள் காலத்தால் மங்கி! மக்கள் மனதில் இருந்து மறைந்து கொண்டிருக்கும் நிலையில் எமது கிராமத்தில் விளையாடப்பட்ட அன்றைய விளையாட்டுக்கள் பற்றியும் அதனைக் கண்டுகளித்த மக்கள் மனதில் ஏற்பட்ட சந்தோஷ உணர்வுகள் பற்றியும் நினைக்கையில் பழைய நினைவுகள் பசுமையாகத்தான் இருக்கிறது.

கிள்ளிக்கிள்ளிப் பிராண்டி, கீச்சுமாச்சுத்தம்பளம், பாட்டன்குத்து பறையன் குத்து, ஆலாப்பறத்தல், ஆடும் புலியும், நாயும் இறைச்சித்துண்டும் போன்ற விளையாட்டுக்கள் சிறுவர் சிறுமியரால் விளையாடப்பட்டன. வீட்டு முற்றத்திலும், திண்ணையிலும் விளையாடப்படும் இவ்விளையாட்டுக்களை வீட்டுப் பெரியவர்கள் பார்த்து மகிழ்ந்தனர். அன்பு, ஒற்றுமையை வளர்த்து சந்தோசத்தை தந்த இவ்விளையாட்டு இன்று மறைந்து போக சிறார்கள் தனித்திருந்து கைத்தொலைபேசி போன்ற சாதனங்களை வைத்து விளையாட குடும்பத்தில் இனம் புரியாத ஒரு இடைவெளி இருக்கத்தான் செய்கிறது.

சில்லுக்கோடு, கயிறடித்தல், டக்டிக்டொஸ், வட்டம் எறிந்து பிடித்தல் என்னும் விளையாட்டுக்கள் இளம் பெண்கள் விளையாடும் விளையாட்டாக அன்று விளையாடப்பட்டாலும் அதில் கயிறடித்தல் இன்று உடற்பயிற்சிகளில் ஒன்றாக விளங்குகின்றது.

நாயும் புலியும் இது முதியவர்கள் மரநிழலில் கூடியிருந்து கட்டம்போட்ட கோடுகள் வரைந்து அதில் நாய் புலிகளுக்கான அடையாளப்படுத்தும் காய்களை வைத்து விளையாடும் பொழுபோக்கு விளையாட்டாகவே அது இருந்தது.

"தாயக்கட்டை" வீட்டில் ஒருவர் காலமாகி விட்டால் அவ்வீட்டில் உள்ள உறவினர்கள் இரண்டு குழுக்கள் அமைத்து விளையாடும் ஒரு விளையாட்டாகும். தாயக்கோடு கீறி நான்கு விதமான அடையாளக்காய்களை வைத்து, தாயக்கட்டையை உருட்டி அதில் வரும் எண்ணிக்கையில் காய்களை நகர்த்தி புள்ளிகள் போட்டு எதிர்தரப்பாளரின் காய்களை வெட்டி ஆண், பெண் என இருபாலாராலும் விளையாடப்படும் ஒரு விளையாட்டாகும். இதில் தோற்றவர்கள் பந்தயப்பொருளாக தீர்மானிக்கப்பட்ட உணவுப் பண்டங்களை விளையாடிய அனைவருக்கும் வழங்குவர்.

கிராமிய விளையாட்டுக்களில் இளைஞர்களைக் கவர்ந்த விளையாட்டாக கட்டப்பந்து, கிட்டிப்பொல்லு, மட்டைப்பந்து ஆகியவற்றைக் குறிப்பிடலாம். "கட்டைப்பந்து" இவ்விளையாட்டில் இரு குழுக்கள் பங்குபற்றுவர். ஒரு திறந்த வெளியின் மத்தியில் ஒரு செங்கல் மீது மரக்கட்டைத்துண்டுகள் அல்லது ஓட்டுச் சில்லுகள் இவைகளை அடுக்கி வைத்து நேர் எதிர் திசைகளில் குறிப்பிட்ட சம அளவு தூரத்தில் இருந்து பந்தினால் எறிந்து கட்டையை வீழ்த்த வேண்டும். கட்டை வீழ்த்தப்பட்டால் மறுமுனையில் உள்ள குழுவினர் அக்கட்டையை அடுக்கி சீராக்க வேண்டும். ஆனால் கட்டையை வீழ்த்தியவர்களோ அவர்களை அடுக்க விடாமல் அவர்களுக்கு பந்தால் எறிந்து கொண்டே இருப்பர். அப்படி எறியும் போது அப்பந்தை அவர்கள் பிடித்து விட்டால் கட்டையை அடுக்கும் பொறுப்பு மறு தரப்புக்கு மாறிவிட அவர்களை தடுக்கும் பொறுப்பு பந்தைப் பிடித்தவர்களுக்கு வந்து சேரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டைப்பந்து "புள்ளி றவுண்ட்" எனவும் அழைக்கப்படும் இவ்விளையாட்டு இன்றைய கிறிக்கற் விளையாட்டுக்கு முன்னோடியாக விளங்கினாலும் இது இன்று எல்லே விளையாட்டாக பாடசாலையிலும், குழுமட்டத்திலும் விளையாடப்படுகின்றன. இன்று அருகிவிட்ட கிட்டிப்பொல்லு விளையாட்டிலும் இருகுழுக்களே விளையாடுவர். குறிப்பிட்ட ஓரிடத்தில் 6 அங்குல நீள சிறு குழியமைத்து அதில் 6 அங்குல நீளம் கொண்ட சிறு பொல்லை வைத்து 1.5 அடி நீளமான உந்துதடியினால் அசை எதிர்திசை நோக்கி உந்துவர். அதை எதிர்திசையினர் பிடித்து விட்டால் உந்தியவர் ஆட்டமிழந்தவராவர். இல்லையேல் அப்பொல்லு விழுந்த இடத்தை எல்லையாகக் கொண்டு குழியில் இருந்து 1.5 அடி அளந்து கீறப்பட்ட கோட்டில் மீது வைக்கப்பட்டிருக்கும் உந்துதடியை நோக்கி அப்பொல்லை வீச அது உந்துதடியில் பட்டால் அப்போது உந்தியவர் ஆட்டமிழந்தவராகவே கணிக்கப்படுவார். இல்லையேல் விழுந்த பொல்லின் நுனிப் பகுதியில் உந்துகோலால தட்டி மேலெழுப்பி அதை அடிக்க வேண்டும் அது விழுந்த இடத்தில் இருந்து உந்துகோலால் குழிவரை அளந்து வரும் எண்ணிக்கையே அப்போது அவர் பெற்ற புள்ளியாகும். இவர் ஆட்டமிழக்கும் வரை புள்ளிகள் கூடிக்கொண்டே போகும். இப்படி இக்குழுவில் உள்ள அனைவரும் விளையாடிப் பெற்ற புள்ளிகளே இக்குழுவின் மொத்தப்புள்ளிகளாகும். இதேபோல் மற்றக்குழுவும் விளையாடி புள்ளிகளைப் பெறும். இதில் கூடுதல் புள்ளிகளைப் பெறும் குழுவே வெற்றி பெற்றதாக கருதி தோற்ற குழுவுக்கு "பாட்டம்" அடிக்கும் பாட்டம் அடிப்பதற்கு தெருவையே தேர்ந்தெடுப்பார்கள். வெற்றி பெற்ற குழுவில் உள்ள ஒவ்வொருவரும் மூன்றுமுறை கிட்டிப்பொல்லை உந்துதடியால் தூரவிழும்படி பலமாக அடிப்பர். இதையும் எதிர்க்குழுவினர் கீழே விழாது பிடித்து எதிர்த்திசையில் எறிந்து தூரத்தைக் குறைக்க முயற்சி செய்வர் இதன்படி பாட்டம் அடித்து கணிக்கப்பட்ட இடத்தில் இருந்த தோற்ற குழு மூச்சுவிடாமல்

**ஆலையிலே சோலையிலே ஆலம்பாடிச் சந்தையிலே**
**கிட்டிப்பொல்லும் பம்பரமும்**
**கிறுக்கி அடிக்கப் பாலாறு பாலாறு . . . . . . . . .**

எனப் பாடிக்கொண்டே குழியை நோக்கி ஓடிவருவார். பாடியவர் மூச்சு விட்டால் விட்ட இடத்தில் இருந்த மற்றவர் பாடிமுடிக்க வேண்டும். இப்படி அக்குழுவினர் பாடிமுடிக்கா விட்டால் அக்குழு தோற்றதாகி விடும்.

இப்படியான ஏராளமான விளையாட்டுக்கள் பொதுவாக எல்லா கிராமங்களிலும் விளையாடப்பட்டு வந்ததினால் அது அவர்களுக்கு நல்ல உடற்பயிற்சியை வழங்கியதுடன், நல்ல தேகாரோக்கியத்துடன் வாழவும் அது வழியமைத்தது. இவ்வகை விளையாட்டுக்களை எழுத்தில் வடித்து விளங்க வைப்பது சிரமமேயாகும். அவை விளக்க முறைப்படங்களுடன் விரிவாக எழுதி தனிப்புத்தகமாக வெளி வந்தாலே வருங்கால மக்கள் அதை அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்ச்சிப்பாதையில் கல்வி



வெள்ளை வேனை கண்டால் வெகுண்டோடி மக்கள் பதட்டமடையும் நிலை யுத்தகாலப் பகுதியில் நிலவியது. ஏனெனில் இளைஞர், யுவதிகள் வேனில் வந்த இனம் தெரியாதோரால் கடத்தப்பட்டு காணாமல் போக பெற்றவர்கள் பிள்ளைகளைப் பறிகொடுத்து புலம்பும் துர்ப்பாக்கிய நிலை நிலவிய காலமிதுவாகும்.

இதேபோல் இப்பகுதியில் மக்கள் குடியேற்றப்பட்ட 1947-1960 காலப்பகுதியில் வெள்ளை வேன் வருவதைக் கண்டால் அன்றைய இளைஞர், யுவதிகளும் ஓடி ஒளித்தனர். ஏனெனில் அவ்வேனில் வந்தவர்கள் வீடுவீடாக தேடி, ஓடி ஒளித்தவர்களைக் கண்டுபிடித்து வைத்தியசாலைக்கு கொண்டு சென்று கையெழுத்து வைக்கப்பழக்கி சிற்றூழியர் வேலையும் கொடுத்து சம்பளமும் வழங்கினர். இது அன்றைய நிலை அன்று பத்திரிகை வாசிக்கத் தெரிந்தாலே அது ஒரு தகமையாகத்தான் கணிக்கப்பட்டது. ஆனால் அன்றைய நிலை இன்று இல்லை கல்வியில் உயர்நிலை நோக்கி சமூகம் முன்னேறிக் கொண்டிருக்கிறது.

கல்வி என்றால் அது பாடசாலையில் தான் ஆரம்பிக்கப்படும் என்ற நிலை மாறி இன்று பாடசாலைக் கல்விக்கு ஈடுகொடுக்கும் வகையில் மாணவர்களை தயார்படுத்தி அனுப்ப வேண்டிய கடப்பாட்டின் நிமித்தம், முன்பள்ளிப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இவ்வகையில் இக்கிராமத்தில் சனசமூக நிலைய கட்டிடத்தில் இயங்கும் மாநகரசபை முன்பள்ளி பாடசாலையும் தற்போது சிறுவர் பராமரிப்பு நிலையமாக விளங்கும் முன்பள்ளிப் பாடசாலையுடன், தனியாருக்குச் சொந்தமான முன்பள்ளிப்பாடசாலை என இவை மூன்றும் மாணவர்களை தயார்படுத்தி பாடசாலைக்கு அனுப்பும் கடமையை செய்கின்றன. இதேவேளை இந்துசமய அறநெறிக்கல்வி இந்து இளைஞர் மன்றத்தினரால் நடாத்தப்படும் அறநெறி பாடசாலை மூலம் போதிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

எமது பாடசாலை மாநகரசபை எல்லைக்குள் இருந்தாலும் இக்கிராமத்துடன் இணைந்திருக்கும் வீச்சுக்கல்முனை, வலையிறவு ஆகிய கிராமங்களில் இயங்கும் இரு கனிஷ்ட பாடசாலைகளும், சுமார் 3 கிலோமீற்றர் தூர எல்லைக்குள் நகரத்தில் அமைத்துள்ள மூன்று தேசிய பாடசாலைகளும், ஏனைய க.பொ.த உயர்தர கற்கை நெறியினைக் கற்கும் மேலும் 5 பாடசாலைகளும் அமைந்திருப்பதால் எமது இப்பாடசாலையில் மாணவர் தொகையினை அதிகரித்து மகாவித்தியாலய தரத்துக்கு உயர்த்த முடியாத நிலையே காணப்படுகிறது.

இந்நிலையில் இக்கிராம மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண இங்கு இயங்கும் கிராம முன்னேற்றச் சங்கம், மாதர் கிராம முன்னேற்றச் சங்கம், சிரேஸ்ட பிரஜைகள் அமைப்பு, பழைய மாணவர் சங்கம், நியூ பிறண்ட்ஸ் விளையாட்டுக் கழகம், ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபை ஆகியவற்றுடன் அயல் கிராமங்களில் உள்ள அமைப்புக்களும், விளையாட்டு கழகங்களும் இப்பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்கு தங்களின் பங்களிப்பினையும் வழங்கி வருகின்றன.

இக்கிராமத்தில் பலராலும் மேற்கொண்ட முயற்சி, பெற்றோர்கள், பிள்ளைகள் கல்வியில் காட்டிய ஊக்கம் இவற்றின் பயனாக அன்றைய கல்வி மந்த நிலை மாறி பட்டதாரிகள் எண்ணிக்கை பெருகி அதில் வைத்தியர்கள், சட்டத்தரணிகள், பொறியியளாளர்கள் என துறை சார் நிபுணர்களையும், உயர் அதிகாரிகள் எனப் பலரையும் உருவாக்கி நகரும் கல்வியின் முன்னேற்றம் இன்னும் மேன்மையடைய வேண்டும். அறிவுள்ள சமூதாயம் உருவாக வேண்டும், மாணவர்கள் கல்வியை தொடர முடியாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையின் இடைவிலகலின் காரணம் அறிந்து அவர்கள் கல்வியை தொடர வழியமைக்க வேண்டும். அரச தொழில் அற்றாலும், தொழில் கல்வி கற்று அவர்கள் வாழ்க்கையில் முன்னேற வழி காட்ட வேண்டும் என்ற எண்ணம் எல்லா சமூகநல அமைப்புக்களின் உள்ளத்தில் உருவாகினாலும் அதற்கான காலம் கனிந்து வராமையினால் அவை உறக்கத்திலேயே இருந்தது. இவ் உறக்கம் கலைந்திட கடவுள் சித்தம் கொண்டாரோ என நினைத்திட இக்கிராமத்தின் வளர்ச்சியில் பாடுபட்ட பலருள் சிலராகிய மு.வாமநாதன், க.தவராசா, த.யோகேஸ்வரன், துரை.மனோகரன், க.வசந்தகுமார் ஆகியோர் சிந்தனையில் இத்திட்டம் உதித்த போது பாடசாலை அதிபர் திரு.த.அருமைத்துரை அவர்கள் அதனை வரவேற்று ஊக்கமளித்ததுடன் மாணவர்களுக்கு பாடம் போதிப்பதற்கு தற்காலிக தளமாக பாடசாலையை பயன்படுத்த வழியமைத்துத் தருவதற்கு இணங்க மகிழ்வுற்ற இவர்கள்

**அறிவுள்ள சமூதாயம் படைப்போம் — அவை உருவாக உரமாக இருப்போம்**
**வறுமையின் இருள் அகல — ஒளியினைக் கொடுப்போம்**
**கல்வியின் தடைகளை தகர்ப்போம் — தரணியில் உயர்செல்வம் கல்வி என்றுரைப்போம்**

என்னும் இலட்சிய நோக்கினை நோக்கிப் பயணம் செய்ய புதுநகர், திமிலைதீவு, சேற்றுக்குடா, வீச்சுக்கல்முனை, வலையிறவு ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய செயற்றிறன் மிக்க புத்திஜீவிகள், சமூக சேவையாளர்களைக் கொண்ட செம்மொழி கல்வி மேம்பாட்டு ஒன்றியத்தினை 03.05.2015ம் திகதி சித்திரா பௌர்ணமியன்று ஆரம்பித்து வைத்தனர்.

**எந்த ஒரு இனமானாலும் அவர்கள் முன்னேற அறிவினை வளர்த்து அடையாளப் படுத்த சுய மொழிச்சிந்தனையே அவசியமாகும். சீனா, யப்பான் போன்ற வளம்பெற்ற நாடுகள் சுயமொழியில் தேர்ச்சி பெற்று, புரிந்துணர்வு அறிவைப் பெற்று பிற மொழியில் அதைப் பயன்படுத்தியதனாலே தான் அவர்கள் சகல துறைகளிலும் முன்னேறியவர்களாக விளங்குகின்றனர். நமது இனம் சுயமொழியினை சரியான முறையில் எழுதவோ புரிந்து கொள்ளவோ முடியாதவர்களாக பின்நிலை வகிப்பதால் உலக நீரோட்டத்துக்கு ஈடுகொடுக்க முடியாதவர்களாகி நம் முன்னோர்களையே மேற்கோள் காட்டிக்கொண்டு பெருமை பேசிக் கொள்கிறோமே தவிர வருங்கால சந்ததியினருக்கு நாமும் முன்னோடிகளாக விளங்க வேண்டியவர்கள் என்பதை மறந்து விடுகிறோம்.**

இவ்வகையில் சமூகத்தின் கல்வி வளர்ச்சிக்கு சுயமொழி அறிவு விருத்தி அவசியமாகும் என்பதை முன்னிலைப்படுத்தி எமது மொழியாகிய தமிழ், சங்ககாலம் சங்கம் வளர்த்து தர்மசாஸ்திரம்,அர்த்த சாஸ்திரம், கலாசாஸ்திரம், மோட்ச சாஸ்திரம் என பல நூல்களை வகுத்து மேலை நாட்டறிஞர்களும் அறிந்து ஆராய்ந்திட வழியமைத்த எங்கள் தமிழ் தொன்மையானது, தெளிவானது, மிக அழகானது, புனிதமானது. தரணி பெற்ற மொழிதனிலே செம்மொழி என பெருமை பெற்று புகழ்பூத்த அதனையே எமது சங்கத்துக்கு மகுடமாகச் சூட்டி செம்மொழி கல்வி மேம்பாட்டு ஒன்றியம் என்னும் நாமத்தின் கீழ் சேவையாற்ற விளைந்தது. இவற்றின் சேவை, பெற்றோர் மனதில் மகிழ்வையும் மாணவர் மனதில் நம்பிக்கை ஒளியினையும் பாராட்டினையும் பெற்றது.

இவர்களால் நடப்பட்ட இவ்விதை முளைத்து வளர்ந்து, காய்த்துக்கனிந்து, பலன் தந்து சமூகம் பயன் பெற தொடர்ந்து வரும் தலைமுறையும், தடம் பதித்திட வேண்டும் என்பதே நல் உள்ளங்களின் வேண்டுதலும் அவாவும்.

உழைப்பினில் உயர்வு பெற்று
உயர்பணியில் பெருமை பெற்று
வளமான வாழ்வமைப்போம்
வரலாறு நாம் படைப்போம்

ஆம்! வரலாறு நாம் படைக்க வேண்டும் இதுவரை நடந்ததை ஏட்டினில் வடித்தோம். இத்துடன் வரலாறு முற்றுப் பெறவில்லை. வருங்கால சமூதாயம் சாதனை புரிய வேண்டும். சரித்திரம் படைக்க வேண்டும் அப்போது அவற்றின் பெருமையினை எடுத்தியம்பி எழுத்தில் எழுதிட இவ்வரலாறு தொடரும் . மு.வா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமான நிலைய விஸ்தரிப்பு


# விமானப்படைத்தள விஸ்தரிப்புக்குள் சிக்கிக்கொண்ட

# புதுநகர் ஸ்ரீ சித்திவிநாயகர்

## மக்கள் நடத்தியுள்ள

## எழுச்சிப் போராட்டம்

ஸ்பெஷல் ரிப்போர்ட்



**கட்டிய குறையில் இடிக்கப்பட்ட பூசகர் தங்குமடம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுநகர், திமிலைதீவு, சேற்றுக்குடா, வலையிறவு, வீச்சுக்கல்முனை, சிறார்களின் கல்விக்கென ஒதுக்கப்பட்ட 2 1/2 கோடி ரூபாவின் எதிர்காலம் என்ன?

விமான நிலையங்கள் விமானப்படை முகாம்களாக மாறிவிட்டன

விமான நிலையம் நிறுவப்பட்டபோதும் சரி, விஸ்தரிக்கப்பட்ட போதும் சரி, பாராளுமன்ற உறுப்பினர்கள் தீர்க்கதரிசனத்துடன் சிந்தித்து மக்களை வழிநடத்தவில்லை

17 வருடங்களாக போர்ச் சூழலிலும் விமானப்படை பாதுகாப்பு வலயத்தினுள் இயங்கிய இரு பாடசாலைகளும் சமாதான சூழலில் அபிவிருத்தி காணமுடியாத நிலை

மறியல் போர்

போர் வெடிக்குமானால் யாழ். பலாலியைப்போல சூழவுள்ள கிராமங்களைச் சேர்ந்த எஞ்சிய மக்களும் வெளியேறவேண்டி ஏற்படுமோ ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டு. விமான நிலைய விஸ்தரிப்பு, குடிநீர் பிரச்சினை

# நாளை எழுச்சிப் போராட்டம்

செங்கலடி, ஜூன் 18

மட்டக்களப்பு விமான் நிலைய விஸ்தரிப்பு, குடிநீர்ப் பிரச்சினை ஆகியவற்றை முன்வைத்து நாளை 19ஆம் திகதி மக்கள் எழுச்சிப் போராட்டம் ஒன்று நடத்தப்படவிருக்கிறது. ஐக்கிய சமூக நலன்புரி அமைப்புகளின் ஒன்றியம் இப் போராட்டத்துக்கு ஏற்பாடு செய்து வருகின்றது. போராட்டம் நடத்தும் இடம் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை.

புத்தூர், திமிலைதீவு, சேற்றுக்குடா, வலையிறவு, வீச்சுக்கல்முனை, திருப்பரம்துறை ஆகிய கிராமங்கள் இந்த ஒன்றியத்தில் அடங்குகின்றன. ஒன்றியத்தின் செயலாளர் துரை மனோகரன் போராட்டம் தொடர்பாக அறிக்கைவிடுத்திருக்கிறார். (ர-134-124)

சேவ்வாய் தினக்குரல் 18 ஜூன் 2002

# மட்டக்களப்பு மாநகரசபை எல்லைக்குட்பட்ட 6 கிராமங்கள் நாளை மறியல் போராட்டம்

மட்டக்களப்பு விமானநிலைய விஸ்தரிப்புக்கென சுவீகரிக்கப்பட்ட 'சீ' வலயப் பகுதியைப் பொதுமக்கள் பாவனைக்கு விடவேண்டும். மற்றும் குடிநீர் உட்பட அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து மாநகர சபை எல்லைக்குட்பட்ட ஆறு கிராம மக்கள் நாளை புதன் கிழமை மறியல் போராட்டம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

புதுநகர், திமிலைத்தீவு, சேத்துக்குடா, வலையிறவு, வீச்சுக்கல்முனை, திருப்பெருந்துறை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பொது அமைப்புக்களின் கூட்டமைப்பான ஐக்கிய சமூகநல அமைப்புக்களின் ஒன்றியம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

மேற்படி கிராமங்களில் இருந்து ஊர்வலங்கள் ஆரம்பமாகும் என்றும், மண்முனை வடக்குப் பிரதேசசெயலகம், மாநகரசபை, நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஆகியவற்றிற்கு முன்னால் மறியல் போராட்டம் நடத்தப்படும் என்றும் ஐக்கிய சமூகநல அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இந்த ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இக்கிராமங்களில் பல காலமாக குடிநீர்ப் பிரச்சினை நிலவிவருகின்றபோதிலும், இதனைத் தீர்ப்பதற்கு அதிகாரிகளோ, அரசியல்வாதிகளோ ஆக்கபூர்வமான எந்தவொரு நடவடிக்கைகளும் எடுக்கவில்லை. இக்கிராம மக்கள் குழாய்நீரைப் பெறுவதற்காக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தபோதிலும், அவை புறக்கணிக்கப்பட்டு அதன் பின்னர் உருவாக்கப்பட்ட கிராமங்களுக்குக் குழாய்நீர் விநியோகம் வழங்கப்பட்டிருக்கிறது. இது அதிகாரிகளின் திட்டமிட்ட புறக்கணிப்பாகும்.

மட்டக்களப்பு மாநகரசபையுடன் 14 ஆண்டுகளுக்கு முதல் இக்கிராமங்கள் இணைக்கப்பட்டு வரி வசூலிக்கப்படுகின்றபோதிலும், இக்கிராமங்களுக்குத் தேவையான அடிப்படை அபிவிருத்தித் திட்டங்கள்கூட மேற்கொள்ளப்படவில்லை. விமானநிலைய விஸ்தரிப்பு என்ற போர்வையில் 1985 ஆம் ஆண்டு இக்கிராமங்களின் ஒரு பகுதியிலிருந்து மக்கள் வெளியேற்றப்பட்டார்கள். அப்போது அப்பகுதியில் இருந்த ஆலயம், பாடசாலை, சேமக்காலை என்பனவற்றைத் தொடர்ந்து பாவிப்பதற்கு அனுமதிக்கப்படுமென அரசாங்க அதிபர், விமானப்படை அதிகாரி ஆகியோர் உறுதிமொழி வழங்கினார்கள். அந்த உறுதிமொழிக்கு மாறாக புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் அவசர அவசரமாக 500 மீற்றரை உள்ளடக்கி சுற்றுவேலி அமைக்கப்பட்டு வருகிறது. இந்தச் சுற்றுவேலி அகற்றப்படவேண்டும். அத்துடன், சீ வலயமான 250 மீற்றரை மக்கள் பாவனைக்கு விடுவதாக வர்த்தமானிமூலம் அறிவித்தல் செய்யவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20/6/2001 தினக்குரல்

# மட்டுநகரில் அரசாங்க அலுவலகங்கள் முன்பாக மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம்

- வாழைச்சேனை நிருபர் -

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட ஆறு கிராமங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான பொதுமக்கள் நேற்று புதன்கிழமை விமான நிலைய விஸ்தரிப்பு உட்பட பல்வேறு பிரச்சினைகளை முன்வைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டம் நேற்றுக்காலை 7 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 12.30 மணிவரை இடம்பெற்றது. புதுநகர், திமிலைதீவு, சேத்துக்குடா, வலையிறவு, வீச்சுக்கல்முனை, திருப்பெருந்துறை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

இவர்கள் கச்சேரி, மட்டக்களப்பு 23-3 ஆவது பிரிகேட், பிரதேச செயலகம், மாவட்ட நீதிமன்றம், நீர்வழங்கல் வடிகாலமைப்பு அலுவலகம், கல்வித் திணைக்களம், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் ஆகியவற்றுக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் மட்டக்களப்பு விமானநிலைய விஸ்தரிப்புக்கென சுவீகரிக்கப்பட்ட பகுதிகளை மக்கள் பாவனைக்கென மீண்டும் கையளிக்க வேண்டும். இச் சுவீகரிப்புக்குட்பட்டுள்ள பாடசாலைகள், ஆலயம், பொதுமயானம் என்பவற்றைப் படையினர் கைவிட வேண்டும். குடிநீர் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர்.

விமானப் படையினரே கண்ணகி அம்மன் ஆலயத்தில் இருந்து வெளியேறு, வலையிறவு திருப்பெருந்துறை வீதி, சேத்துக்குடா, விடத்தல் தீவு என்பவற்றை உடன்திற, விமானப் படையினரே கோயில் கட்டிடத்தை இடிக்காதே, விமானப்படையே இந்து மதத்தை நசுக்காதே, விமானப்படையே சுற்றுவேலியை அகற்று, விமானப்படை விஸ்தரிப்பு என்ற போர்வையில் தமிழ் மண் அபகரிப்பா, படையினரே எங்கள் மண்ணில் இருந்து வெளியேறு என்ற கோஷங்கள் அடங்கிய பதாகைகளையும் தாங்கியிருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டம் காரணமாக பல அலு

(6 ஆம் பக்கம் பார்க்க)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினக்கதிர்

THINAKKATHIR DAILY

ஒளி - 03 - கதிர் - 66 20.06.2002 வியாழக்கிழமை பக்கங்கள் - 08 விலை 6/-


புளூலகூனின்
மகத்திய வருட மலிவு விற்பனை
அனைத்து ஆடைகளும்
15%-50% வரையிலான
விலைத் தள்ளுபடி
Blue Lagoon
112, Trinco Rd, Batticaloa
Tel : 065 - 22..


# மட்டு. மக்களின் எழுச்சிப் போராட்டம் காரணமாக அலுவலகங்கள் செயலிழப்பு!

## பிரிகேட் தலைமையக வாயிலிலும் மக்கள் மறியல் போர்.

(விசேட நிருபர்)

மட்டக்களப்பு நகரில் நேற்று மக்கள் நடத்திய மறியல் போராட்டம் காரணமாக மட்டக்களப்பு நகரிலுள்ள அரச அலுவலகங்கள் யாவும் முற்றாகச் செயலிழந்தன.மக்கள் நடாத்திய மறியல் போராட்டம் காரணமாக மட்டக்களப்பு 23-3 ஆவது பிரிகேட் தலைமையக நுழைவாயிலும் சிலமணி நேரம் அடைக்கப்பட்டு இராணுவத்தினரது போக்குவரத்துக்களும் தடைப்பட்டிருந்தது.

நேற்றுக்காலை ஏழு மணியளவில் மட்டக்களப்பு திமிலைதீவு மற்றும் திருப்பெருந்துறைப் பகுதிகளிலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்ட பொதுமக்கள், மட்டக்களப்பு அரசாங்க அதிபர் காரியாலயம்,பிரதேச செயலகம்,மாநகரசபை,கல்விப் பணிமனை, தேசிய நீர்வழங்கல் சபை, 23-3 பிரிகேட் தலைமையகத்துக்குச் செல்லும் பிரதான பாதை ஆகியவற்றின் முன்னால் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

புதுநகர், திமிலைதீவு, சேற்றுக்குடா, வலையிறவு, வீச்சுக்கல்முனை, திருப்பெருந்துறை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களே இவ் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இப்பகுதிகளைச் சேர்ந்த பொது அமைப்புக்களின் ஒன்றியமான, ஐக்கிய சனசமூக அமைப்புக்களின் ஒன்றியம் இதனை ஏற்பாடு செய்திருந்தது.

இம்மக்கள் எழுச்சிப் போராட்டம் காரணமாக மேற்படி அலுவலகங்களின் பணிகள் யாவும் நேற்று முற்றாக ஸ்தம்பித்தன.

மட்டக்களப்பு விமானப்படைத்தள பாதுகாப்பு எல்லை விஸ்தரிப்பை 250 மீற்றராகக் குறைக்கக் கோரியும்,500 மீற்றர் எல்லையில் போடப்பட்டுவரும் சுற்றுவேலியை அகற்றக்கோரியும்,மற்றும் தமது பகுதிகளின் அபிவிருத்தி, நீர்வழங்கல் போன்ற பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தும் மக்கள் இந்தப் போராட்டத்தினை நடாத்தியிருந்தனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைவேளையிலேயே போராட்டம் ஆரம்பித்து மேற்படி அலுவலக வாயில்கள் யாவற்றிலும் மக்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டதன் காரணமாக அலுவலக கடமைகளுக்கு வருகைதந்திருந்த ஊழியர்கள் தமது அலுவலகங்களுக்குள் செல்லமுடியாது திரும்பிச்சென்றனர்.

23-3 பிரிகேட் தலைமையகத்துக்குச் செல்லும் பாதையூடாகவே, மட்டக்களப்பு கச்சேரி, நீதிமன்றம் ஆகியவற்றுக்கான பாதைகளும் செல்வதன் காரணமாக, மக்கள் பிரிகேட் தலைமையக வாயிலுக்கு முன்னாலேயே மறியலில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக இராணுவத்தினரது வழமையான போக்குவரத்துக்களும் தடைப்பட்டதுடன், நீதிமன்றமும் செயற்படவில்லை.

இம்மக்கள் போராட்டத்தையடுத்து, மட்டக்களப்பு கச்சேரியில் கூட்டம் ஒன்று நடாத்தப்பட்டது.

இதில்,ஐக்கிய சமூகநல அமைப்புக்களின் ஒன்றியப் பிரதிநிகளும்,அரச அதிபர்,விமானப்படை இரண்டாவது கட்டளையதிகாரி,மாநகர ஆணையாளர்,பிரதேச செயலாளர் உட்படப் பலர் கலந்துகொண்ட..ர்.

இதில் மக்களுடைய அன்றாடப் பிரச்சினைகள் படிப்படியாக தீர்த்துவைக்கப்படும் என அரச அதிகாரிகளினால் உறுதிவழங்கப்பட்டது.

இதேசமயம், விமானப் படைத்தள விஸ்தரிப்புத் தொடர்பாக மேலிட உத்தரவையே தான் பின்பற்றுவதாக விமானப்படை அதிகாரி தெரிவித்ததையடுத்து,இப்பிரச்சினை தொடர்பா,இக்கிராமங்களின் மக்கள் பிரதிநிதிகள் பாதுகாப்பு அமைச்சர் உள்ளிட்ட உயரதிகாரிகளைச் சந்தித்து இது தொடர்பாக முறையிடுவது,எனவும்,இதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

# மட்டு. விமான நிலைய விஸ்தரிப்பு முயற்சியால் இப்பகுதி பாடசாலைகளின் அபிவிருத்தி பாதிப்பு

## நடவடிக்கை எடுக்குமாறு சமூக நல ஒன்றியம் மகஜர்

27.05.2003

மட்டக்களப்பு,

மட்டக்களப்பு விமானப்படை விஸ்தரிப்பு வலயத்திற்குள் அடங்கும் புதுநகர் விக்னேஸ்வர வித்தியாலயம், நாவற்குடா/திமிலைதீவு/வலையிறவு அரசினர் பாடசாலை என்பவற்றிற்கு அவசர புனர்வாழ்வு, புனரமைப்பு திட்டத்தின் கீழ் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டு அடிக்கல் நாட்டு விழா இடம்பெற சில நிமிடங்களில் நிர்மாண பணிகளை ஆரம்பிக்க வேண்டுமென்றும் ஒருவாரத்தினுள் உரிய பதிலை தருவதாக விமானப்படை கட்டளை அதிகாரி தெரிவித்து இதுவரை எந்தப் பதிலும் வழங்கப்படாத நிலையில் நிர்மாணப் பணிகளை ஆரம்பிக்க முடியாதிருப்பதாக ஐக்கிய சமூக நல அமைப்புக்களின் ஒன்றியம் அரச அதிபர் இ.மோனகுருசாமிக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் தெரிவித்துள்ளது.

இலங்கை விமானப்படை தலைமை கமாண்டர் இப்பாடசாலைகளின் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கிய நிலையிலேயே வலயக் கல்வி பணிமனை நிதி ஒதுக்கீடு செய்தது. எனினும் மட்டக்களப்பு கட்டளை அதிகாரி தடைவிதித்துள்ளார்.விமான நிலைய விஸ்தரிப்பு என்ற போர்வையில் மட்டக்களப்பு மாநகர சபை பிரதேத்திலுள்ள புதுநகர் சேற்றுக்குடா, திமிலை தீவு, வலையிறவு, வீச்சுக் கல்முனை, திருப்பெருந்துறை ஆகிய கிராமங்கள் சுயத்துவத்தை இழந்தது மட்டுமல்ல குடிநீர் தொடக்கம் ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் புறக்கணிக்கப்பட்டுவருகிறது.

நீண்ட காலத்துக்குப் பின்னர் கிடைத்த நிதியைக் கூட பயன்படுத்தமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே மேற்படி பாடசாலைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை பயன்படுத்த நடவடிக்கை எடுப்பதுடன் மக்கள் செறிந்து வாழும் இடத்திலுள்ள விமான நிலையத்தை பொருத்தமான வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் ஐக்கிய சமூக நல அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரகேசரி - 2/6/03

# மட்டக்களப்பு புறநகர கிராம மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும்

## அரச அதிபரிடம் சமூக நல அமைப்புகளின் ஒன்றியம் கோரிக்கை

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாநகர புறநகர கிராமங்களான புதுநகர், திமிலைதீவு, சேற்றுக்குடா, வலையிறவு, வீச்சுக்கல்முனை, திருப்பெருந்துறை ஆகிய கிராமங்களில் வாழும் மக்கள் எதிர்நோக்கும் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வுகாணுமாறு ஐக்கிய சமூக நல அமைப்புகளின் ஒன்றியம் மாவட்ட அரச அதிபர் ஆர்.மோனகுருசாமியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மட்டக்களப்பு விமானப்படை முகாம் 1985ஆம் ஆண்டு 500 மீற்றராக விஸ்தரிக்கப்பட்டதையடுத்து வலையிறவு, திருப்பெருந்துறை வீதி, சேற்றுக்குடா, திருப்பெருந்துறை வீதி என்பன போக்குவரத்திற்காக முற்றாக மூடப்பட்டதையடுத்து திருப்பெருந்துறை கிராமம் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் பல கிலோ மீற்றர் தூரத்தை சுற்றியே மட்டக்களப்பு நகரத்தை திருப்பெருந்துறை கிராம மக்கள் வந்தடைய வேண்டியுள்ளது. எனவே உத்தேச நல்லையா வீதி, திருப்பெருந்துறை வீதியை மட்டக்களப்பு வாவியை ஊடறுத்து அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். மட்டக்களப்பு மாநகரசபை பிரதேச குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு காண உன்னிச்சை திட்டத்தை அமுல்படுத்த வேண்டும். அதுவரை ஊறணியில் மேலதிக கிணறுகளை அமைத்து குடிநீர் வழங்குவதுடன் பௌசர்கள் மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

புதுநகர், திமிலதீவு, சேற்றுக்குடா, வலையிறவு, வீச்சுக்கல்முனை, திருப்பெருந்துறை ஆகிய கிராமங்கள் மாநகரசபையுடன் இணைக்கப்பட்டு 15 வருடங்கள் கடந்த போதிலும் போதிய அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

குறிப்பாக வடிகாலமைப்பு வீதி செப்பனிடல், பெயர்ப்பலகை அமைத்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை

எனவே மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் இவ்விடயங்களை சமர்ப்பித்து ஆவன செய்யுமாறு ஐக்கிய சமூகநல அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

# மட்டு. மாவட்டத்தில் 4963 குடும்பங்கள் வரட்சியால் பாதிப்பு; குடிநீருக்கும் கஷ்டம்

மட்டக்களப்பு,

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து கடும் வரட்சி காரணமாக 4963 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இவர்களுக்கு குடிநீர் மற்றும் இருவாரங்களுக்குரிய உலர் உணவு நிவாரணப் பொருட்களை வழங்குவதற்காக 54 லட்சத்து 43 ஆயிரம் ரூபாவை வழங்குமாறு மாவட்ட அரச அதிபர் சி. சண்முகம் சுகாதார சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் எம்.வி.சி.டி.சில்வாவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பட்டிப்பளை பிரதேசத்தில் பண்டாரியாவெளி, அம்பிளாந்துறை வடக்கு, கடுக்காமுனை, மாவடி முன்மாரி பனிச்சையடி ஆகிய கிராமங்களில் 837 குடும்பங்களும், களுவாஞ்சிக்குடி பிரதேசத்தில் துறைநீலாவணை கிராமத்தில் 1300 குடும்பங்களும், வவுணதீவு பிரதேசத்தில் பாவற்கொடி சேனை காஞ்சிரங்குடா, நெடியமடு, பருத்திச்சேனை காந்தி நகர், பன்சேனை ஆகிய கிராமங்களில் 1230 குடும்பங்களும், மண்முனை வடக்கு பிரிவில் புதூர், திமிலைதீவு, சேற்றுக்குடா, வீச்சுக் கல்முனை, திருப்பெருந்துறை ஆகிய கிராமங்களில் 1596 குடும்பங்களும் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30/4/2003

# படையினரின் இடைநிறுத்த உத்தரவால் பாடசாலை வகுப்பறை கட்டிடத்திற்கான நிதி திரும்பி செல்லும் அபாயம்

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு, வலையிறவு பரமேஸ்வரா வித்தியாலயத்தில் வகுப்பறை கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டு வைபவம் விமானப்படையினரின் தலையீட்டையடுத்து இடைநிறுத்தப்பட்டது. 180 வருடங்கள் பழைமை வாய்ந்த இப்பாடசாலை விமானப்படையின் உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் அமைந்திருப்பதால் குறிப்பிட்ட கட்டிடம் விமானம் தரையிறக்கத்திற்கு தடையாக இருக்குமா என்பதை ஆராய்ந்த பின்பே அனுமதி வழங்கப்படுமென விமானப்படை கட்டளை அதிகாரி தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு விமான நிலைய சுவீகரிப்பு வலயத்தினுள் இப்பாடசாலை அமைந்திருப்பினும் விமானப்படை முகாமின் பாதுகாப்பு விமான போக்குவரத்து என்பவற்றை பாதிக்காதவாறு அபிவிருத்தி செய்யலாமென விமானப்படை தலைமையகம் அனுமதி வழங்கியிருந்தது.

இதன் பிரகாரம் ஏற்கனவே உள்ள வகுப்பறை கட்டிடம் இடிந்து விழும் நிலையில் இருப்பதால் 80X20 அடி விஸ்தீரணமுள்ள வகுப்பறை கட்டிடமே நிர்மாணிக்கப்படவிருந்தது.

கிழக்கு புனர்வாழ்வு அமைச்சு படைமுகாம் அமைந்திருந்தபாடசாலைகளை புனரமைக்கும் திட்டத்தின் கீழ் நோராட் நிதிஉதவியுடன் 12 இலட்சம் ரூபாவை ஒதுக்கி இரண்டரை மாதத்திற்குள் நிர்மாணப்பணிகளை பூர்த்தி செய்யுமாறு உத்தரவிட்டிருக்கிறது.

குறிப்பிட்ட காலத்தினுள் பூர்த்தி செய்யாவிடில் நிதி திரும்பும் அபாயம் உள்ளது.

இதேவேளை உலக வங்கி விமானப்படை உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள புதூர் மகாவித்தியாலயத்திற்கு மூன்று மாடிக்கட்டிடம் அமைப்பதற்கு நிதி வழங்கியுள்ளது.

இக்கட்டிடத்தின் வரை படத்தைப் பார்வையிட்ட பின்பே அனுமதி வழங்குவதாக விமானப்படையினர் தெரிவித்தனர்.

13/3/90

## மட். விமான விஸ்தரிப்பு: பாதிக்கப்பட்டோர் நஷ்டஈட்டு விபரக்கோவை எரிந்து நாசம்?

மண்டூர்.

மட்டக்களப்பு விமான நிலைய விஸ்தரிப்பால்பாதிக்கப்பட்டோருக்கு நட்டஈடு வழங்குவது சம்பந்தமான கோவைகள் பதுளை விலை மதிப்புத் திணைக்களத்தில் இடம்பெற்ற வன்செயலின் போது எரிந்து சாம்பலாகிவிட்டதாக தெரியவருகிறது.

மட்டக்களப்பு விமான நிலைய விஸ்தரிப்புக்காக 1986ஆம் ஆண்டு 356 குடும்பங்களின் 500 மீற்றர் காணி சுவீகரிக்கப்பட்டது.

இது சம்பந்தமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்டஈடு வழங்குவதற்காக சகல விபரங்களும் திரட்டப்பட்டு பதுளையில் அமைந்துள்ள கிழக்குப்பிராந்திய விலை மதிப்பு அலுவலகத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டது.

எனினும் இதுவரை 196 பேரின் பெறுமதி மதிப்பீடுகள் மட்டுமே மட்டக்களப்பு கச்சேரிக்குவந்துசேர்ந்துள்ளன.

ஏனைய 160பேரின்மதிப்பீடுகள் பற்றி, மேற்படி விமான நிலைய விஸ்தரிப்பால் பாதிக்கப்பட்டோர் சங்கம் பதுளை விலை மதிப்புத் திணைக்களத்துடன் தொடர்புகொண்டது. இதையடுத்து கிடைத்த பதிலில் மேற்படி கோவைகள் வன்

(5ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமான நிலைய விஸ்தரிப்பு
## குடிநீர் பிரச்சினை

# செயலகம் முன் மறியல் போர்

(இரா.துரைரத்தினம்)

**மட்டக்களப்பு விமானநிலைய விஸ்தரிப்புக்கென சுவீகரிக்கப்பட்ட சில பகுதியை மக்கள் பாவனைக்கு விடவேண்டும் தமது கிராமங்களில் நிலவும் குடிநீர்ப்பிரச்சினை தீர்த்து வைக்கப்படவேண்டும், என்ற கோரிக்கைகள் உட்பட இக் கிராமங்களில் நிலவும் அடிப்படைவசதிகளைக்கூட செய்வதில் மாநகரசபை மற்றும் பிரதேச செயலகம், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் அக்கறை காட்டுவதில்லை என்பதை சுட்டிக்காட்டி மட்டக்களப்பு மாநகரசபை எல்லைக்குட்பட்ட ஆறு கிராமங்களைச்சேர்ந்த மக்கள் நாளை புதன் கிழமை மறியல் போராட்டத்தை நடத்தப்போவதாக அறிவித்துள்ளனர்.**

புதுநகர், திமிலைதீவு, சேத்துக்குடா, வலையிறவு, வீச்சுக் கல்முனை, திருப்பெருந்துறை ஆகிய கிராமங்களைச்சேர்ந்த பொது அமைப்புக்களின் கூட்டமைப்பான ஐக்கிய சமுகநல அமைப்புக்களின் ஒன்றியம் இதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளது.

மேற்படி கிராமங்களிலிருந்து காலை 7மணிக்கு ஊர்வலங்கள் ஆரம்பமாகும் என்றும் மண்முனை வடக்கு பிரதேச செயலகம், மாநகரசபை, கிராம முன்னேற்றச்சபை ஆகியவற்றிற்கு முன்னால் மறியல் போராட்டம் நடத்தப்படும் என்றும் ஐக்கிய சமுகநல அமைப்புக்களின் ஒன்றியம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக இந்த ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் மட்டக்களப்பு விமான நிலைய விஸ்தரிப்பு என்ற போர்வையில் 1985ம் ஆண்டு இக்கிராமங்களின் ஒருபகுதியிலிருந்து மக்கள் வெளியேற்றப்பட்டார்கள். அப்போது அப்பகுதியிலிருந்த ஆலயம் , பாடசாலை, சேமக்காலை என்பனவற்றை தொடர்ந்து பாவிப்பதற்கு அனுமதிக்கப்படும் என அரசாங்க அதிபர், விமானப்படை அதிகாரி, ஆகியோர் உறுதிமொழி வழங்கினார்கள். அந்த உறுதிமொழிக்கு மாறாக புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் அவசர அவசரமாக 500மீற்றரை உள்ளடக்கி சுற்றிவேலி அமைக்கப்பட்டு வருகிறது.

பாடசாலையும் 1985ம் ஆண்டிலிருந்து எந்த அபிவிருத்தியும் செய்யப்படவில்லை. இப்போது ஆலயம் பாடசாலை, சேமக்காலை என்பனவற்றை உள்ளடக்கி பாதுகாப்பு அரண்களும் கம்பிவேலிகளும் அமைக்கப்படுகிறது. இந்த சுற்றுவேலி அகற்றப்பட வேண்டும். அத்துடன் சிலபகுதியான 250 மீற்றர் மக்கள் பாவனைக்கு விடுவதாக வர்த்தமானி மூலம் அறிவித்தல் செய்யவேண்டும்.

இக்கிராமங்களில் பலகாலமாக குடிநீர்ப்பிரச்சினை நிலவுகின்ற போதிலும் இதனை தீர்ப்பதற்கு அதிகாரிகளோ அரசியல்வாதிகளோ ஆக்கபூர்வமான எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. கிராம மக்கள் குளாய் நீரைப்பெறுவதற்காக விண்ணப்பங்களை சமர்ப்பித்த போதிலும் அவை புறக்கணிக்கப்பட்டு அதன் பின்னர் உருவாக்கப்பட்ட கிராமங்களுக்கு குளாய்நீர் விநியோகம் வழங்கப்பட்டிருக்கிறது. இது அதிகாரிகளின் திட்டமிட்ட புறக்கணிப்பாகும்.

மட்டக்களப்பு மாநகரசபையுடன் 14 ஆண்டுகளுக்கு முதல் இக்கிராமங்கள் இணைக்கப்பட்டு வரி வசூலிக்கப்படுகின்ற போதிலும் இக்கிராமங்களுக்கு தேவையான அடிப்படை அபிவிருத்தி திட்டங்கள் கூட மேற்கொள்ளப்படவில்லை. படுவான்கரையையும் மட்டக்களப்பு நகரையும் இணைக்கும் பாதைகள் இக்கிராமங்களின் ஊடாகவே செல்கிறது. வீச்சுக்கல்முனை திமிலைதீவு வீதி, விபுலானந்தவீதி உட்பட முக்கிய வீதிகள் புனரமைக்கப்படவே இல்லை.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்ட நிதியிலிருந்து இக்கிராமங்களுக்கு நிதி ஒதுக்கப்படுவதில்லை. எதிர்காலத்தில் இவ்வாறான புறக்கணிப்புக்கள் இடம்பெறக்கூடாது இந்த கோரிக்கைகளை முன்வைத்து மறியல்போராட்டத்தை நடத்தப்போவதாக ஐக்கிய சமுகநல அமைப்புக்களின் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**21.06.2002**


**தினக்கதிர்**

த.பெ. இல: 06
155, திருமலை வீதி,
மட்டக்களப்பு.
தொ. பே. இல : 065 - 22554
E-mail :- tkathir10@hotmail.com


# உரிமையை மீட்க மறியல் போர்

மட்டக்களப்பு, திருமலை யாழ் வலிகாமம் ஆகிய இடங்களில் ஒரே நாளில் மக்கள் தங்களது உரிமைகளை மீட்பதற்காக மக்கள் போராட்டங்களை நடத்தியுள்ளனர்.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின் இயல்பு வாழ்க்கைக்கு திரும்ப மக்கள் சதாதுடித்துக் கொண்டிருந்தாலும் படைத்தரப்பினரின் சில கட்டுப்பாடுகள், நடவடிக்கைகள் இதற்கு தடையாகவிருக்கின்றன.

மட்டக்களப்பு விமான நிலைய விஸ்தரிப்பு என்ற போர்வையில் மேற்கொள்ளப்படும் காணிச்சுவீகரிப்பு நிறுத்தப்பட வேண்டும். எனும் முக்கிய கோரிக்கையை முன்வைத்து ஆறு கிராம மக்கள் பேரணியாக திரண்டு வந்து மட்டு நகரில் நடத்திய மறியல் போராட்டம் காரணமாக புதன்கிழமை சிவில் நிர்வாகச் செயற்பாடுகள் செயலிழந்தன.

விமான நிலைய விஸ்தரிப்பு எனும் பெயரில் சுவீகரிக்கப்பட்ட 500 மீற்றர் காணி விஸ்தரிப்பை 250மீற்றராக மட்டுப்படுத்த வேண்டும் என்பது இவர்களது முக்கியமான கோரிக்கையாகும். அத்துடன் சுவீகரிக்கப்பட்ட காணிக்குள் உள்ளடங்கும் கோயில், பாடசாலைகளை விட்டுப் படையினர் வெளியேற வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

இதே சமயம் திருமலை மாவட்டத்திலுள்ள திரியாய் கிராமத்தில் மீளக் குடியேற மக்கள் சென்ற சமயம் கடற்படையினர் கிராமத்துக்குள் நுழையவே அனுமதி மறுத்தமைக்கு ஆட்சேபம் தெரிவித்தும் அக்கிராம மக்களை மீளக் குடியமர்த்துமாறு கோரியும் நேற்று முன்தினம் கண்காணிப்புக் குழுவிடம் மனுவொன்றை கையளித்துள்ளனர்.

அதேவேளை யாழ் வலிகாமம் வடக்கு மக்கள் தங்களை மீளக்குடியமர்த்துமாறுகோரி புதன்கிழமை வலிகாமம் வடக்கு பிரதேச செயலகம் முன்பாக மறியற்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஒட்டு மொத்தமாக வடக்கு கிழக்கிலுள்ள தமிழ் மக்கள் இழந்த உரிமைகளை மீட்பதற்காக இன்று போராட்ட களத்தில் குதித்துள்ளனர்.

அரசு முறையாக புரிந்துணர்வு உடன்படிக்கையை அமுல்படுத்தியிருந்தால் இவ்வாறு மக்கள் வீதியில் இறங்கிப் போராட வேண்டிய நிலை ஏற்படாது.

எனவே ஆகஸ்ட் மாதத்திற்கு முன்னர் உடன்படிக்கை முழுமையாக அமுல்படுத்தப்போவதாக கூறியிருக்கும் பிரதமர் வடக்கு கிழக்கில் புதன்கிழமை மக்கள் நடத்திய போராட்டங்களுக்கான பிரச்சினைகளுக்கும் தீர்வு காண வேண்டும்.

**விமான நிலையம் நிறுவப்பட்டபோதும் சரி,விஸ்தரிக்கப்பட்ட போதும் சரி, பாராளுமன்ற உறுப்பினர்கள் தீர்க்கதரிசனத்துடன் சிந்தித்து மக்களை வழிநடத்தவில்லை**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினகரன்
The Thinakaran
Tamil Daily Newspaper

பங்குனி மாதம் 07ம் திகதி செவ்வாய்க்கிழமை

டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு

தபால் பெட்டி இலக்கம் 834 தொலைபேசி இலக்கம் 421181

# மட்டு. விமான நிலைய விஸ்தரிப்பால் மக்கள் அந்தரிப்பு

மட்டக்களப்பு விமான நிலைய விஸ்தரிப்புக்கென சுமார் பத்து வருடங்களுக்கு முன்னர் சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு உரிய நஷ்டஈடு இதுவரை வழங்கப்படவில்லை. அண்மையில் பாராளுமன்றத்தில் நடைபெற்ற பாதுகாப்பு அமைச்சு ஆலோசனைக் கூட்டத்தில், நஷ்டஈட்டைத் துரிதமாக வழங்க, உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேர்ணல் அனுருத்த ரத்வத்தை பணித்துள்ளாரென்ற நல்ல செய்தி கிட்டியுள்ளது.

கிட்டத்தட்ட ஒரு மைல் சுற்றளவிற்குள்ளிருந்த 386 காணித்துண்டுகள் விமானப் படையின் விமான நிலைய விஸ்தரிப்புக்கென சுவீகரிக்கப்பட்டன. 356 குடும்பங்களுக்குச் சொந்தமான காணி 1985ம் ஆண்டு சுவீகரிக்கப்பட்டது.

காணி சுவீகரிப்புக்குத் தேவையான, உரிய நடவடிக்கைகள் எதுவும் பின்பற்றப்படாமல கட்டுமீறிய விதத்தில் இந்தக் காணிகள் அபகரிக்கப்பட்டன. வர்த்தமானியில் அறிவித்தல் விடுத்து, மதிப்பீடு செய்து, சம்பந்தப்பட்ட மக்களின் ஒப்புதல்களைப் பெற்றே இந்தக் காணிகள் சுவீகரிக்கப்பட்டிருக்க வேண்டும். இதுதான நடைமுறை. காட்டுத் தர்பார் நடத்திய அரசியல்வாதிகளையும் அதிகாரிகளையும் தட்டிக் கேட்க வக்கற்ற மக்கள் வாழ்ந்த காலத்தில், இந்த அநியாயம் நிகழ்ந்திருக்கிறது. பெரும்பாலும் ஏழைமக்களின் காணிகளே சுவீகரிக்கப்பட்டிருக்கின்றன. அதுவும் பதினான்கு நாட்கள் காலக்கெடுவுக்குள் புதூர், வலையிறவு ஆகிய பகுதி மக்கள் தாம் வாழ்ந்த பகுதிகளிலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள்.

இவர்களில் பலர் சேத்துக்குடா திமிலைத்தீவு போன்ற இடங்களில் சுவீகரிக்கப்பட்ட வயல் நிலங்களில் குடியேற்றப்பட்டிருக்கிறார்கள். தண்ணீர் போன்ற அடிப்படை வசதிகள் இன்றி இம்மக்கள் வாழ்வதாகவும் கூறப்படுகிறது.

விமான நிலைய விஸ்தரிப்புக்காக உரிய நடைமுறையின்றி சாதாரண மக்களின் காணிகள் பறிக்கப்படும் போது அது அரசுக்கும் மக்களுக்குமிடையிலான முரண்பாடாக மட்டுமல்ல, சிங்கள நிர்வாகத்திற்கும் தமிழ் மக்களுக்குமிடையிலான ஒரு முரண்பாடாகவும் உருவகப்படுத்தப்படுகிறது.

இனவெறியின் வித்துக்கள் இந்தத் தாக்கங்களில் தான் முளைவிடுகின்றன. பத்து வருடங்களுக்கு மேலாக இந்த மக்கள் ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள். அதுவும் விமானப் படையின் தேவைக்காக அப்பாவி மக்கள் குடியிருந்த காணிகளிலிருந்து விரட்டப்பட்டதால் ஏற்படும் உணர்வலைகளை இங்கு சுட்டிக் காட்ட வேண்டிய தேவையில்லை.

புதிய நிர்வாகம் பதவியேற்ற பின்னர், இந்த மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நம்பிக்கைகள் தென்படுகின்றன. இந்தக் காணிகளை மதிப்பீடு செய்வதற்கு பதுளையிலிருந்துதான் விலைமதிப்பீட்டு அதிகாரிகள் வரவேண்டியிருந்தது. பாதுகாப்பைக் காரணம் காட்டி இந்த அதிகாரிகள் மட்டக்களப்புக்கு வர மறுத்து வந்தனர். இந்தப் பிரச்சினையை நன்குணர்ந்த பிரதியமைச்சர் ஹிஸ்புல்லா, இரு மாதங்களுக்கு முன்னர் மட்டு. செயலகத்தில் விலைமதிப்புத் திணைக்களத்தின் கிளையொன்றினை ஏற்படுத்தியுள்ளார். இதுவரை 86 காணிகளுக்கான மதிப்பீட்டு அறிக்கைகள் வழங்கப்பட்டு விட்டதாகத் தெரியவருகிறது. கடந்த வாரம்தான் இந்த மதிப்பீட்டு அறிக்கைகள் வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அடி மட்டத்தைச் சேர்ந்த இந்த மக்களின் பிரச்சினைகளை அதிகாரிகளுக்கு எடுத்துரைக்க யாருமே இல்லாததால் தான் இந்தப் பிரச்சினை நீண்ட காலமாக இழுபட்டு வந்திருக்கிறது. வக்கற்ற இந்த மக்களிடம் வாக்கு கேட்க, செல்பவர்கள், அவர்களின் பிரச்சினையைத் தீர்க்க முடியாதென்று சாக்குப் போக்குகள் சொல்லித் தப்பியிருக்கிறார்கள். 'பச்சை'ப் பொய் கூறி அவர்கள் வாக்குப் பிச்சை கேட்டார்கள்.

நஷ்டஈட்டுத் தொகையை காணி அமைச்சுக்கு விரைவில் வழங்குவதற்கு பாதுகாப்பு அமைச்சு சம்மதம் தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது. இனியாவது உரிய அதிகாரிகள் துரிதமாக இயங்கி இம்மக்களுக்கு தீர்வுகள் தேடித்தருவார்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு விமான நிலைய விஸ்தரிப்பு எல்லையை கட்டுப்படுத்துங்கள்

## பிரதமரிடம் யோசப் எம்.பி. கோரிக்கை

(நமது நிருபர்)

மட்டக்களப்பு விமான நிலைய விஸ்தரிப்புக் கென, 500 மீட்டர் விஸ்தீரணமுள்ள பகுதிகளை சுவீகரிக்க முயற்சிக்கும் நடவடிக்கையை கைவிடும் படி மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. யோசப் பரராஜ சிங்கம் பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவை கேட் டுள்ளார்.

எனவே திட்டமிட்டபடி 250 மீட்டர் விஸ்தீரணத் துடனேயே விமான நிலைய விஸ்தரிப்பை கட்டுப்ப டுத்தும்படியும் அவர் கோரியுள்ளார்.

இது சம்பந்தமாக யோசப் பரராஜசிங்கம் எம்.பி. பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்திருப் பதாவது:-

1985 ஆம் ஆண்டு மட்டக்களப்பு விமான நிலைய விஸ்தரிப்புக்கு என்று 250 மீட்டர் பரப்பு டைய காணி அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்டது. இந்த சுவீகரிப்பு திட்டத்தின் மூலம் 386 காணித்துண் டுகள் சுவீகரிக்கப்பட்டன. இவற்றில் 56 காணித்துண் டுகளும் கட்டிடங்களும் அரசாங்கத்திற்கு சொந்த மான வையாகும். மிகுதி 330 வீடுகள் அடங்கிய காணிகள் பொதுமக்களுடையதாகும். இச்சுவீகரிப் பின் மூலம் வலையிறவு கிராமத்தின் ஏறத்தாழ 60 சதவிகிதம் முற்றாக சுவீகரிக்கப்பட்டுள்ளது. இச்சுவீ கரிப்பு நடைபெற்று இன்று ஒன்பது ஆண்டுகளாகி யும் இதற்கான நஷ்ட ஈட்டு தொகையை இதுவரை அரசாங்கம் கொடுக்க முன்வரவில்லை. இது சம்பந்த மாக பலமுறை நான் பாராளுமன்றத்திலும், பாது காப்பு அமைச்சின் பாராளுமன்ற ஆலோசனை சபைக் கூட்டத்திலும் பிரஸ்தாபித்ததை தொடர்ந்து தற்பொழுது நஷ்ட ஈடு வழங்குவதற்கான நடவடிக் கைகளை காணி அமைச்சு மேற்கொண்டு வருகின் றது.

இதற்கிடையில் 1992 ஆம் ஆண்டு வர்த்தமானி அறிவித்தல் மூலம் விமான நிலைய விஸ்தரிப்பு 250 மீட்டரில் இருந்து 500 மீட்டராக விஸ்தரிப்பு செய் யப்பட்டுள்ளதாக" அறிவிக்கப்பட்டது. இத்திட் டத்தை அமுல் நடத்தும் பட்சத்தில் மேலும் பல வீடுகள் உட்பட, பல இந்து ஆலயங்கள், புதுநகர் மகாவித்தியாலயம், புளியந்தீவு சேமக்காலை போன்றவை முற்றாக அழிக்கப்படுவதுடன் பழம்பெ ருமை வாய்ந்த வலையிறவு கிராமம் முற்றாக மறைந்து புதுநகர் கிராமத்தின் ஒரு பகுதியும் முற்றாக அழிக்கப்படக்கூடிய நிலை ஏற்படலாம்.

எனவே ஏற்கனவே அறிவித்த பிரகாரம் விமான நிலைய விஸ்தரிப்புக்கு 250 மீட்டர் விஸ்தீரண முள்ள காணியையே சுவீகரிக்கும்படியும் பின்பு அறி வித்த 500 மீட்டர் விஸ்தீரணத்திட்டத்தை கைவிடும் படியும் உங்களை கோருகிறேன்.

**சேத்துக்குடா, வீச்சுக்கல்முனை, புதூர், திமிலைதீவு, வலையிறவு, திருப்பெருந்துறை வாழ் மக்களின் வாழ்விடம் பறிபோகும் ஆபத்தும் அடிப்படை வசதிகளில் அத்தியாவசியத் தேவையான குடிநீர்ப் பிரச்சினையும் தீர்க்கப்படுமா என ஆதங்கப்படும் கிராம மக்கள்.**

### தண்ணீர்ப் பிரச்சினை

1. எமது பிரதேச தண்ணீர்ப் பிரச்சி னைக்கு இயன்றவரை உடனடித் தீர்வு காணல்.
2. எமது பிரதேசம் அடங்கலாக மட்டுநகருக்கான நிரந்தர நீர் வழங்கும் திட்டத்தை உடன் ஆரம் பித்தலும், உத்தியோக பூர்வமாக தெரியப்படுத்தலும்.
3. தேசிய நீர் வழங்கல் வடிகால மைப்புச்சபைக்கு 1998ம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்க ளுக்கான குழாய்நீர் திட்டத்தை உடன் அமுல் செய்தல்.
4. வீதிகளினூடே நீர் குழாய்களை அமைத்து போதுமான நீரை உடன் வழங்க ஆவன செய்தல்.
5. தற்பொழுது வவுசர்கள் மூலம் விநியோகிக்கப்படும் நீர் விநியோ கத்தின் அளவை அதிகரிக்கச் செய்தல்.
6. அனைத்து ஆலயங்களுக்கும், பாடசாலைகளுக்குமான குழாய் நீர்த்திட்டத்தை இலவசமாக நிறுவ தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு

## மக்களின் எழுச்சி

மட்டக்களப்பு நகரில் கடந்த புதனன்று இடம்பெற்ற மக்கள் எழுச்சி போராட்டம் நீறுபூத்த நெருப்பாகவே உள்ளது. விமான நிலைய விஸ்தரிப்பு பிரச்சினை இன்னமும் மக்கள் மத்தியில் உள்ளதை துலாம்பரமாக காட்டியுள்ளது. மாநகர புறநகர் கிராமங்களான புதுநகர், திமிலைத்தீவு, சேற்றுக்குடா, வலையிறவு, வீச்சுக்கல்முனை, திருப்பெருந்துறை ஆகிய பாரம்பரிய தமிழ் கிராமங்களை சேர்ந்த பொது நிறுவனங்களின் கூட்டமைப்பான ஐக்கிய சமூக நல அமைப்புக்களின் ஒன்றியம் மக்களை ஒன்று திரட்டி எழுச்சிப் போராட்டத்தை நடத்தியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பொதுவாக மக்கள் எதிர்ப்பை பிரதிபலிப்பதற்கு இலகுவான போராட்ட வடிவமாக ஹர்த்தால் பயன்படுத்தப்பட்டு வரும் நிலையில் ஐக்கிய சமூக நல அமைப்புக்களின் ஒன்றியம் மாவட்ட இயல்பு நிலையை பாதிக்காது. அதேவேளை எதிர்ப்பை காட்டமாக பிரதிபலித்துள்ளது.

உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் உள்ள ஒல்லாந்தர் கோட்டையில் இயங்கும் மாவட்ட செயலக நடவடிக்கைகளை செயலிழக்க செய்வதற்காக சுலோக அட்டைகளுடன் அதிகாலையில் சென்று கோட்டையின் பிரதான வாயிலை அடைந்தார்கள். அதேபோல 23.3ஆவது படைப்பிரிவு பிரதான நுழைவாயில், பொதுநூலக வீதி என்பவற்றிற்கு குறுக்காக அமர்ந்து மாவட்ட பாதுகாப்பு தலைமையகத்துக்குள் நுழைய முற்பட்ட கனரக வாகனங்கள், பவல்களை தடுத்து நிறுத்தியபோது படைத்தரப்பினரே திகிலடைந்தார்கள்.

மாநகர சபை, மண்முனை வடக்கு பிரதேச செயலகம், வலயக்கல்வி பணிமனை, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை ஆகிய தேர்ந்தெடுக்கப்பட்ட அலுவலகங்களுக்கு முன்பாக அமர்ந்து அமைதியான மறியல் போராட்டத்தை பொது மக்களும் மாணவர்களும் மேற்கொண்டார்கள்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் ஏற்பட்டுள்ள இயல்பான சூழலில் மட்டக்களப்பு விமான நிலைய விஸ்தரிப்பு சுற்றுவேலியை 500 மீற்றரில் அமைக்க விமானப் படையினர் முயன்றதே மக்கள் சீற்றத்திற்கு உடனடி காரணமாக அமைந்தது.

ஐக்கிய சமூக நல அமைப்புக்களின் ஒன்றியம் மாவட்ட அரச அதிபருக்கு தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை கையளித்துள்ளது. அதில் பின்வரும் கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டுள்ளன.

✱ மட்டக்களப்பு விமான நிலைய விஸ்தரிப்பை 250 மீற்றர் சுற்றளவாக மட்டுப்படுத்தி அதனை வர்த்தமானி மூலம் பிரகடனப் படுத்துவதுடன் 500 மீற்றர் சுற்றளவில் அமைக்கப்பட்ட வேலியை அகற்ற வேண்டும்.

✱ ஆலயம், பாடசாலைகள், மயானம் போன்றவற்றை சம்பந்தப்பட்டவர்களிடம் கையளிப்பதுடன் அபிவிருத்தி பணிகளை ஆரம்பிக்க சட்ட பூர்வமாக அனுமதிக்க வேண்டும்.

✱ திருப்பெருந்துறை- வலையிறவு, திருப்பெருந்துறை, சேற்றுக்குடா வீதிகளை திறந்து போக்குவரத்திற்காக அனுமதிக்க வேண்டும்.

✱ 1970ஆம் ஆண்டு விமான நிலைய ஓடு பாதைக்காக சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கான இழப்பீட்டை இன்றைய சந்தை நிலவரப்படி வழங்க வேண்டும்.

✱ மாநகர சபைக்குள் உள்ளடக்கப்பட்ட மேற்படி கிராமங்களுக்கு அடிப்படை வசதிகள் வழங்கப்பட வேண்டும்.

ஆகிய கோரிக்கைகளை முன் வைத்தே மக்கள் எழுச்சி போராட்டம் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாநகர சபை பிரதேசத்தில் நகரின் மையமான புளியந்தீவுக்கு மேற்காக 3 கிலோ மீற்றர் தூரத்தில் வலையிறவு விமான நிலையம் அமைந்துள்ளது. பொதுவாக நீண்டகால அபிவிருத்தி மற்றும் உயர்ந்த கட்டிடங்கள் அமைப்பதில் உள்ள பிரச்சினை காரணமாக விமான நிலையங்கள் நகர பகுதியை விட ஒதுக்குப்புறமான தூர இடங்களிலேயே அமைவது வழக்கம். ஆனால் மட்டக்களப்பு விமான நிலையம் பொருத்தமற்ற இடத்தில் அமைக்கப்பட்டது. இதன் காரணமாக விமான நிலைய விஸ்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிப்பு என்ற போர்வையில் அவசர கால சட்டத்தின் கீழ் 308 பேருக்கு சொந்தமான 107 ஹெக்டேயர் நிலப்பரப்பு சுவீகரிக்கப்பட்டதையடுத்து சூழவுள்ள கிராமங்கள் சோபை இழந்தன.

றன. புறநகர கிராமங்களை கபளீகரம் செய்து விஸ்தரிப்பு என்ற போர்வையில் பாதுகாப்பு நிலைகளே பலப்படுத்தப்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பு விமான நிலையத்தை சூழவுள்ள பாரம்பரிய தமிழ் கிராம மக்களை தேர்

**புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் ஏற்பட்டுள்ள இயல்பான சூழலில் மட்டக்களப்பு விமான நிலைய விஸ்தரிப்பு சுற்றுவேலியை 500 மீற்றரில் அமைக்க விமானப் படையினர் முயன்றதே மக்கள் சீற்றத்திற்கு உடனடி காரணமாக அமைந்தது**

விமான நிலையத்தை சூழவுள்ள 500 மீற்றர் சுற்றளவுள்ள காணியே சுவீகரிக்கப்பட்டது. புதுநகர், திமிலைத்தீவு, சேற்றுக்குடா, வலையிறவு, வீச்சுக்கல்முனை, திருப்பெருந்துறை கிராமங்களின் கணிசமான நிலப்பரப்புகள் விஸ்தரிப்பு வலயத்தினுள் அடங்கியதுடன் புதுநகர் விக்னேஸ்வரா வித்தியாலயம், வலையிறவு மெ.மி.பாடசாலை, விநாயகர் ஆலயம் என்பன மட்டுமல்ல திருப்பெருந்துறை கிராமத்தை மட்டக்களப்பு நகருடன் இணைக்கும் வலையிறவு வீதி, சேற்றுக்குடா வீதி என்பனவும் துண்டாடப்பட்டது. இதனால் மட்டக்களப்பு நகருக்கு நெருக்கமான கிராமமாக இருந்த திருப்பெருந்துறை மக்கள் 7 கிலோமீற்றர் சுற்றி ஊறணி, திருமலை வீதியூடாக நகருக்கு வரவேண்டியுள்ளது.

மட்டக்களப்பு விமான நிலைய விஸ்தரிப்புக்காக காணிகள் சுவீகரிக்கப்பட்டதே தவிர கடந்த 17 வருடங்களாக விமான நிலையம் எந்தவித அபிவிருத்தியும் செய்யப்படவில்லை. நான்கு வருடங்களாக சிவில் அல்லது விமானப்படைக்கு சொந்தமான விமானமே தரை இறங்கவில்லை. அத்திபூத்தாற் போல அவசர தேவைகளுக்காக உலங்கு வானூர்தி மட்டும் வந்து இறங்கிச் செல்கிறது.

ஜி.நடேசன்

ஆனால் விமான நிலையத்தில் பாரிய விமானப்படை முகாம் அமைக்கப்பட்டுள்ளது. விஸ்தரிப்பு என்ற போர்வையில் முகாமின் பாதுகாப்பு வேலிகள் விஸ்தரிக்கப்பட்டு முகாமை பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளே மேற்கொள்ளப்பட்டு வருகின்

தல் காலங்களில் நாடிவரும் அரசியல்வாதிகள் பின்னர் எட்டிப்பார்ப்பதே இல்லை. விமான நிலையம் நிறுவப்பட்டபோதும் சரி விஸ்தரிக்கப்பட்டபோதும் சரி பாராளுமன்ற உறுப்பினர்கள் தீர்க்க தரிசனத்துடன் சிந்தித்து மக்களை வழி நடத்தவில்லை.

விஸ்தரிப்பின்போது ஆளும் கட்சியாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சியை சார்ந்த இரு அமைச்சர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்தார்கள். ஆனால் அவர்கள் கூட மௌனமாகவே இருந்தார்கள். இதனால் இன்று மக்களே சுலோக அட்டைகளைத் தாங்கி போர்க்கொடி உயர்த்த முன் வந்துள்ளார்கள்.

ஆனால் விமானப்படை விஸ்தரிப்பினால் பாதிக்கப்பட்ட கிராம மக்களின் போராட்டம் காலங்கடந்த முயற்சியாக மாறிவிடுமோ என்ற நிலையும் உள்ளது. சுவீகரிக்கப்பட்ட காலத்தில் அவசர காலச் சட்டம் போர்ச்சூழல் இருந்ததால் மக்கள் உணர்வுகளை வெளிப்படுத்த முடியாத நிலை இருந்தது. இன்று நிலைமை மாறியுள்ளது.

ஆனால் மக்கள் அடங்கியிருந்த காலத்திலேயே விஸ்தரிப்பு வலயம் தொடர்பாக வர்த்தமானி பிரகடனம் செய்யப்பட்டு விட்டது. பொருளாதார பிரச்சினை மற்றும் மாற்று இருப்பிடத்தை தெரிவு செய்ய வேண்டிய நிலையில் கணிசமான குடும்பங்கள் இழப்பீட்டையும் பெற்றுள்ளன. இதனால் இப்போது உயர் மட்டத்திலேயே இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும். இதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள்தான் முயற்சிக்க வேண்டுமென அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள்.

மட்டக்களப்பு விமானப்படை கட்டளை அதிகாரி சிறிநந்த கருத்து தெரிவிக்கையில் :-

பாதுகாப்பு அமைச்சு 250 மீற்றராக குறைக்குமாறு கட்டளையிட்டால் நான் உடனடியாக பாதுகாப்பு வேலியை அகற்றி 250 மீற்றர் சுற்றளவில் அமைப்பேன். இது தொடர்பாக நான் தீர்மானிக்க முடியாது. எனினும் பாடசாலை, வணக்கஸ்தலங்கள், மயானம் என்பவற்றை பயன்படுத்த அனுமதி வழங்குவேன் என்றார்.

ஆனால் ஐக்கிய சமூக நல அமைப்புக்களின் ஒன்றியம் இத்தகைய அனுமதி பின்னர் வரும் அதிகாரியால் மாற்றப்படலாம். எனவே சட்டபூர்வமாக வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்த வேண்டும் என்று உறுதியாக உள்ளது.

விமான நிலைய விஸ்தரிப்பு வலயத்திற்குள் அமைந்துள்ள கிராமங்கள் படிப்படியாக தமது இருப்பை இழந்து வருகின்றன. வசதியுள்ளவர்கள் வேறிடங்களுக்கு இருப்பை மாற்றி வருகிறார்கள். படித்து அரச உத்தியோகம் பெறும் இளைஞர்கள் கூட வேறிடங்க

## 500 மீற்றர் சுற்றளவில் அமைக்கப்பட்டுள்ள வேலியை அகற்றி 250 மீற்றரில் அமைக்கவும், அதனை வர்த்தமானியில் பிரகடனப்படுத்தவும் கோரிக்கை

ளுக்கு சென்று கடமை புரிந்து வருகிறார்கள். இதனால் அழிந்துபோகும் கிராமங்களை காப்பாற்ற வேண்டுமானால் விமான நிலைய விஸ்தரிப்பை மட்டுப்படுத்துவதுடன் அடிப்படை வசதிகளும் வழங்கப்பட வேண்டும்.

மற்றவர்களின் கவனத்தை ஈர்ப்பதற்காக செய்யப்பட்ட மக்கள் எழுச்சி போராட்டம் தொடர்பாக அனைவரும் கருத்தூன்றி சிந்தித்து செயற்பட வேண்டும் இல்லையேல் மீண்டும் வெடிக்கும் போராட்டம் முழு மாவட்டத்தையுமே பாதிக்கச் செய்யுமென ஐக்கிய சமூக நல அமைப்புக்களின் ஒன்றியம் அறிவித்துள்ளது.

## மட்டக்களப்பு புறநகர்ப் பகுதியில் பவுஸர் மூலமான நீர்விநியோகத்தை மேலும் அதிகரிக்கக் கோரிக்கை

மட்டக்களப்பு.

மட்டக்களப்பு மாநகர சபை எல்லைக்குட்பட்ட புறநகர் கிராமங்களான புதுநகர், திமிலைதீவு, சேற்றுக்குடா, வலையிறவு, வீச்சுக்கல்முனை, திருப்பெருந்துறை ஆகிய கிராமங்களுக்கான பவுஸர் மூலான நீர்விநியோகத்தை மாநகரசபை நிறுத்தியிருப்பதால் பொதுமக்கள் பலத்த சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக ஐக்கிய சமூகநல அமைப்புக்களின் ஒன்றியம் உள்நாட்டலுவல்கள் உள்ளூராட்சி அமைச்சர் அலிக் அலுவிகாரவுக்கு அனுப்பிவைத்த மனுவில் தெரிவித்துள்ளது.

மேற்படி கிராம மக்கள் 19/06/02 அன்று நடத்திய மறியல் போராட்டத்தின் போது ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் மேற்கொள்ளப்படவுள்ள உன்னிச்சை நீர்விநியோகத் திட்டத்தில் மேற்படி கிராமங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பதாகவும் அத்திட்டம் பூர்த்தியடையும் வரை மாநகர சபையால் வழங்கப்படும் புவுஸர் மூலமான நீர் விநியோகத்தை மேலும் அதிகரிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளிக்கப்பட்டது.

ஆனால் மாநகர சபை பவுஸர் மூலமான நீர்விநியோகத்தை முற்றாக நிறுத்தியுள்ளது. இதன் காரணமாக கடுமையான வரட்சி நிலவுகின்ற தற்போதைய சூழ்நிலையில் மக்கள் குடிநீருக்காக அவதியுற்று வருகிறார்கள்.

எனவே குடிநீருக்காக ஏங்கும் மக்களின் அசௌகரியங்களைக் கருத்தில் கொண்டு பவுஸர் மூலம் குடிநீர் வழங்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஐக்கிய சமூக நல அமைப்புக்களின் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21.06.2002 **தினக்கதிர்**

# பொருத்தமற்ற இடத்தில் விமானநிலையம் நெடுங்காலமாக நிலவும் குடிநீர்ப்பிரச்சினை

**சேத்துக்குடா, வீச்சுக்கல்முனை, புதூர், திமிலைதீவு, வலையிறவு, திருப்பெருந்துறை வாழ் மக்களின் வாழ்விடம் பறிபோகும் ஆபத்தும் அடிப்படை வசதிகளில் அத்தியாவசியத் தேவையான குடிநீர்ப் பிரச்சினையும் தீர்க்கப்படுமா என ஆதங்கப்படும் கிராம மக்கள்.**

மட்டக்களப்பில் விமான நிலையத்துக்குப் பொருத்தமற்ற இடத்தில் விமான நிலையத்தை நிறுவிக் கொண்டு விமான நிலைய விஸ்தரிப்பை இலங்கை அரசு செய்து கொண்டிருப்பது எமது தமிழ்ப்பிரதேச மக்களையும், மண்ணையும் ஆக்கிரமிக்கும் ஒரு சதித்திட்டமென்றே கருத வேண்டியுள்ளது. அத்துடன் கிராமங்களில் பன்னெடுங்காலமாக நிலவி வரும் தண்ணீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வின்றி மக்கள் விரக்தியின் விளிம்புக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

மேற்கண்டவாறு ஐக்கிய சமூக நல அமைப்புக்களின ஒன்றியம் நேற்று முன்தினம் அரச அதிபரிடம் கையளித்துள்ள மகஜரில் தெரிவித்துள்ளது. இவ்வொன்றியத்தில் சேத்துக்குடா வீச்சுக்கல் முனை, புதூர், திமிலைதீவு, வலையிறவு, திருப்பெருந்துறை ஆகிய ஆறு கிராமங்கள் அங்கம் வகிக்கின்றன. விமான நிலைய விஸ்தரிப்பால் அபகரிக்கப்படும் நிலம் கிராமங்களில் நிலவும் குடிநீர்ப்பிரச்சினை போன்றவற்றை முன்வைத்து அவற்றை தீர்க்கக் கோரி பிரதேச செயலகம், நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகியவற்றின் முன்னால் நேற்று முன்தினம் மக்கள் எழுச்சிப் போராட்டம் ஒன்று நடைபெற்றது. அதன் பின் அரச அதிபரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

அம்மகஜரில் குறிப்பிடப் பட்டுள்ள மக்களுடைய பிரச்சினைகளும், பிரதேச அபிவிருத்தி நடவடிக்கைகளும் பின்வருமாறு:-

☐ மட்/விமான நிலைய விஸ்தரிப்பை 250 மீற்றராக மட்டுப்படுத்தி அரச வர்த்தமானி மூலம் பிரகடனப் படுத்துதல்.

☐ மட்/விமானப்படையினரால் 500 வது மீற்றரில் இடப்பட்டுள்ள சுற்று வேலியை உடன் அகற்றுதல்.

☐ ஆலயங்கள், பாடசாலைகள், சேமக்காலை போன்றவைகளின் அபிவிருத்திகளை உடன் ஆரம்பிக்க சட்டபூர்வமாக அனுமதித்தல்.

☐ திருப்பெருந்துறை - வலையிறவு, திருப்பெருந்துறை - சேற்றுக்குடா வீதிகளை மட்/விமானப்படையினர் உடன் திறந்து போக்குவரத்துக்கு அனுமதிக்க நடவடிக்கை எடுத்தல்.

☐ 1970ம் ஆண்டு விமான ஓடுபாதைக்காகச் சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கான நட்டஈட்டை இன்றைய சந்தை விலையின்படி உடன் வழங்குதல்.

**தண்ணீர்ப் பிரச்சினை**

1. எமது பிரதேச தண்ணீர்ப் பிரச்சினைக்கு இயன்றவரை உடனடித் தீர்வு காணல்.
2. எமது பிரதேசம் அடங்கலாக மட்டுநகருக்கான நிரந்தர நீர் வழங்கும் திட்டத்தை உடன் ஆரம்பித்தலும், உத்தியோக பூர்வமாக தெரியப்படுத்தலும்.
3. தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபைக்கு 1998ம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கான குழாய்நீர் திட்டத்தை உடன் அமுல் செய்தல்.
4. வீதிகளினூடே நீர் குழாய்களை அமைத்து போதுமான நீரை உடன் வழங்க ஆவன செய்தல்.
5. தற்பொழுது வவுசர்கள் மூலம் விநியோகிக்கப்படும் நீர் விநியோகத்தின் அளவை அதிகரிக்கச் செய்தல்.
6. அனைத்து ஆலயங்களுக்கும், பாடசாலைகளுக்குமான குழாய் நீர்த்திட்டத்தை இலவசமாக நிறுவுதல்.

**எமது பிரதேசத்துக்கான அபிவிருத்தி நடவடிக்கைகள்**

1. தினமும் வீதிகளில் குவிக்கப்படும் குப்பைகளை உடனுக்குடன் அகற்றுவதும், துப்பரவு செய்வதும்.
2. அழிந்து கிடக்கும் வீதிகளை உடனடியாகச் செப்பனிடுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. காலத்துக்குக் காலம் வெள்ளத்தால் மூழ்கும் எமது பிரதேசத்துக்கான வடிகால் வசதிகளை ஏற்படுத்துதல்.

4. மக்கள் செல்ல முடியாமல் உள்ள மணல் வீதிகளைக் கிறவல் வீதியாக மாற்றியமைத்தல்.

5. பெருந்தெருக்கள் திணைக்களத்தால் பராமரிக்கப்படும் வீதிகளை செப்பனிடுதலும், பராமரித்தலும்.

6. எமது பிரதேசத்தில் உள்ள ஒவ்வொரு இரண்டு கிராமங்களுக்குமான எல்லை வீதிகளை தாரிட்டுச் செப்பனிடுதல்.

7. விமான நிலைய விஸ்தரிப்பால் பாதிக்கப்பட்டு, மீள்குடியேற்றப் பட்டுள்ள பிரதேசங்களுக்கான வீதிகளைச் செப்பனிடுதல், மின்சார இணைப்புகளை வழங்குதலும்.

8. இதுவரை பெயரிடப்படாத சகல வீதிகளுக்கும் பெயர்ப்பலகையிட உடன் நடவடிக்கை எடுத்தல்.

9. எமது பிரதேசத்துக்கான பொது விளையாட்டு மைதானத்தை அமைத்தலும் பராமரித்தலும்.

10. எமது பிரதேசத்துக்கான பொதுச் சந்தையை நிறுவுதல்.

11. எமது பிரதேச வீதிகளின் போக்குவரத்துக்கு தொந்தரவாக இருப்பதும், வீதிகளை அசுத்தப் படுத்துவதுமான கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டத்தை உடன் நிறுத்த நடவடிக்கை எடுத்தல்.

12. வீதிகளினூடே அங்காடி வியாபாரம் செய்பவர்களை பொதுச்சந்தையினூடே விற்பனை செய்ய ஒழுங்கு செய்தல்.

13. திருப்பெருந்துறை - நல்லையா இணைப்பு வீதியை (வாவிபுறமாக) உடன் அமைக்க உரிய நடவடிக்கை எடுத்தல்.

14. இறால் வளர்ப்பை மட்டுப் படுத்தி திருப்பெருந்துறையில் சுற்றாடலும், மண்வளமும் பாதிக்கப்படாமல் தடுத்தல்.

15. திருப்பெருந்துறையில் இருந்து மண்ணோ, கிறவலோ அகழ்வதற்கு அனுமதிப்பத்திரம் வழங்குவதை நிறுத்தி, சட்ட விரோதமாக மண், கிறவல் ஏற்றுபவர்களுக்கெதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுத்தல். ஆகிய கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

மேற்படி எம்மால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளை எமது மக்களின் உண்மை மனோநிலை உணர்வுகளைக் கருத்தில் கொண்டு நிறைவேற்றித் தருவீர்கள் என்ற பெரு நம்பிக்கையுடன் இம் மகஜரைத் தங்களுக்கு கையளிக்கின்றோம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இக் கோரிக்கைகள் உரிய காலப் பகுதியில் செய்து தரப்படத் தவறும் பட்சத்திலோ அல்லது அசமந்தப்போக்கு தென்படும் பட்சத்திலோ எமது பிரதேச மக்கள் மட்டுமல்லாது மட்/ மாவட்டத்தில் உள்ள அனைத்து பல்கலைக்கழக, பாடசாலை மாணவர்கள், மக்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து தொடரான மக்கள் எழுச்சி மறியல் போராட்டத்தை நடாத்த வேண்டிய நிரப்பந்த நிலை உருவாகும் என்பதை தங்களுக்கு மிகவும் மனவேதனையுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறோம் எனவும் ஒன்றியத்தின் செயலாளர் து.மனோகரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது மக்கள் பின்வரும் பதாதைகளை தாங்கியிருந்தனர். 'விமானப்படையினரே கண்ணகி அம்மன் ஆலயத்திலிருந்து வெளியேறு!'', 'வலையிறவு திருப்பெருந்துறை வீதி, விடத்தல் முனை வீதி என்பவற்றை உடன் திற!', 'விமானப்படை சுற்றுவே லியை அகற்று!' 'விமானநிலைய விஸ்தரிப்பு என்ற போர்வையில் தமிழ் மண் அபகரிப்பா!' 'விமானப் படையினரே கண்ணகி அம்மன் ஆலயத்துக்குள் ஆயுதங்களுடன் பிரவேசிக்காதே!", விமானப்படையினரே கோவில் கட்டடத்தை இடிக்காதே! படையினரே இந்து மதத்தை நசுக்காதே! 'படையினரே எங்கள் மண்ணிலிருந்து வெளியேறுங்கள்' போன்ற தமிழாலும், ஆங்கிலத்தாலும் எழுதப்பட்டிருந்த சுலோக அட்டைகளை மக்கள் தாங்கியிருந்தனர்.


மட்டுநகர் விமான நிலையப்பகுதி (11)

காணிகளை சுவீகரிக்க அனுமதிக்கமாட்டோம்

30.7.1985

— அமைச்சர் தேவா

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு விமான நிலையப் பகுதியை விஸ்தரிக்க [illegible] காணிகள் சுவீகரிக்கப்பட விருப்பதாக வெளியான [illegible] உண்மையில்லை என்று உள்நாட்டலுவல்கள் அமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் நேற்று கூறினார்.

மட்டக்களப்பு நகர மண்டபத்தில் நடைபெற்ற மாநாட்டில் இவ்வாறு கூறிய அமைச்சர் அவ்வாறு நடக்க அனுமதிக்கமாட்டோம் எனவும் சொன்னார்.

மாநாட்டில் கலந்துகொண்ட [illegible]

[illegible] தலைவர்களில் [illegible] பிரஸ்தாப காணி சுவீகரிப்பு [illegible] முறையிட்ட [illegible] பதிலாகவே அமைச்சர் [illegible] நாயகம் இதைச் சொன்னார்.

விமான நிலைய விஸ்த[illegible] புதூர், திருப்பெ[illegible] துறை, வலையிறவு, திமிலைத்தீவு குடியிருப்பு ஆகிய பகுதிகள் காணிகள் சுவீகரிக்கப்பட [illegible] பதாக தாம் அறிவதாக [illegible] தலைவர்கள் கூறினர்.

சுவீகரிப்பு காணிகள் உள்ள வீடுகள், ஆலயங்கள் இடிக்கப்படவிருப்பதாக அவர்கள் அங்கு தெரிவி[illegible] னர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் தர நகரங்களுக்கு குடிநீர் விநியோகத் திட்டம்.

ஆசிய அபிவிருத்தி வங்கியும் தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையும் இணைந்து மட்டக்களப்பு, பொலநறுவை, அம்பாந்தோட்டை முதலிய இரண்டாம் தர நகரங்களுக்கு குடிநீர் விநியோக சுகாதார திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

உன்னிச்சை குளத்திலிருந்து நாளொன்றுக்கு 70 ஆயிரம் கன மீற்றர் நீரை 10 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள வவுணதீவுக்கு கொண்டு வந்து அங்கு நீர் சுத்தகரிப்பு நிலையம் ஒன்றை அமைத்து நீரை சுத்திகரித்து வலையிறவு பாலம் ஊடாக மட்டக்களப்பு நகருக்கு கொண்டு வந்து 2 இலட்சத்து 70 ஆயிரம் மக்களுக்கு குடிநீர் வழங்குவதே இத் திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

மட்டக்களப்பு வலையிறவு, கல்லடி, காத்தான்குடி, ஏறாவூர், செங்கலடி ஆகிய பகுதிகளில் நீர்த் தாங்கிகள் அமைக்கப்பட்டு அப் பகுதிக்கு குடிநீர் வழங்கப்படும். இது 2 கட்டங்களைக் கொண்டது.1ஆவது கட்டம் 2015இல் பூர்த்தியாகும். இதன் மூலம் ஓர் இலட்சத்து 85 ஆயிரம் பேருக்கு குடிநீர் வழங்கப்படும்.

இத் திட்டம் பூர்த்தியானதும் உன்னிச்சை குளத்திலிருந்து நாளொன்றுக்கு 110 இலட்சத்து 66 ஆயிரம் கலன் நீர் பெறப்படும். உத்தேச 1ஆம் கட்ட திட்டத்துக்கு 32 மில்லியன் அமெரிக்க டொலர் அதாவது சுமார் 288 கோடி ரூபாய் செலவிடப்படவுள்ளது. 2ஆம் கட்டம் 2025இல் பூர்த்தியானதும் 2 இலட்சத்து 70 ஆயிரம் பேருக்கு குடிநீர் வழங்கப்படும்.


தற்போது அடிப்படைத் தேர்வுகள் முடிவடைந்துள்ளன. அடுத்த வருடம் யூன் மாதத்தில் திட்டமிடல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

உத்தேச திட்டமானது 2003இல் அவுமதிக்கப்பட்டால் 2005ஆம் ஆண்டில் அணைக்கட்டை உயர்த்தும் வேலைகள் ஆரம்பமாகி 8-10 மாதங்களில் பூர்த்தியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குளத்து நீரை வெளியேற்றி நீர்ப்பாசனத்துக்கு பாதிப்பு ஏற்படுத்தாமல் அணைக்கட்டை உயர்த்துவதற்கான ஒரு தொழில் நுட்ப வழிமுறை பற்றி ஆராயப்படுகிறது. இத சாத்தியப்படாது போனால் நீரை திறந்து விடும் போது ஒரு தடவை சிறு போகம் செய்கை பண்ண முடியாத நிலைமை ஏற்படும்.

இதனால் விவசாயிகள் மட்டுமன்றி தொழிலாளர்களும் குளத்தில் மீன் பிடித்து ஜீவனோபாயம் செய்பவர்களும் பாதிக்கப்படுவர். எனவே இவர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கும் உத்தேச திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. நிலச் சொந்தக்காரரும் குத்தகைக்கு செய்வோருமான ஆண் பெண் விவசாயிகள், ஆண் பெண் கூலித் தொழிலாளர்கள், ஆண் மீனவர் ஆகிய 3 பிரிவினருக்கும் நட்ட ஈடு வழங்கப்படவுள்ளது.

756 நிலச் சொந்தக்காரரும் 524 குத்தகைக்கு



பயிர் செய்வோரும் 450 கூலித் தொழிலாளர்களும் 177 மீனவர்களும் பாதிப்புக்குள்ளாவர். ஓர் ஏக்கருக்கு ஒரு போகத்தின் போது 4000 ரூபா தொடக்கம் 5000 ரூபாவரையும் ஒரு கூலித் தொழிலாளருக்கு நாளொன்றுக்கு 180ரூபா முதல் 230 ரூபா வரை 40-50 நாட்களுக்கு ஒரு போகத்தின் போது 7500 ரூபா முதல் 10500 ரூபா வரையும் ஒரு மீனவருக்கு 6 மாதங்களுக்கு மாதமொன்றுக்கு 5000 ரூபா முதல் 6000 வரையும் நட்ட ஈடு வழங்குவதற்கும் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

உன்னிச்சை குள அணைக்கட்டை உயர்த்தும் திட்டத்தினால் பாதிப்புக்கள் ஏற்படினும் வேறு சில நன்மைகளும் கிடைக்கவுள்ளன.


உத்தேச திட்டத்தினால் உன்னிச்சை நீரேந்து பகுதிக்கு மின்சாரம் கொண்டு செல்லப்படும். இதனால் அப்பகுதி வாசிகள் மின் இணைப்பைப் பெறுவதற்கு வாய்ப்பு கிட்டும். மேலும் உன்னிச்சை பகுதியில் 2500 பேர் நன்மையடையும் வகையில் கிராமிய நீர் விநியோகத்திட்டமும் அமுல் படுத்தப்படவுள்ளது. தற்போது உன்னிச்சை பிரதேசத்தில் மின்சாரம் இல்லை என்பதும் அங்கு குடிநீர் தட்டுப்பாடு நிலவுவதும் குறிப்பிடத்தக்கது.

எல்லாவற்றுக்கும் மேலாக அணைக்கட்டை உயர்த்தும் பணி நடைபெறும் போது கணிசமானோருக்க அங்கு வேலைவாய்ப்பு வசதியும் கிட்டவுள்ளது. இத்தனைக்கும் மேலாக குளத்திலிருந்து வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு வேளாண்மையும் விளைநிலமும் பாதிக்கப்படும் நிலை முற்றாக நீங்குகிறது. இதனால் வெள்ளத்தினால் வேளாண்மை நட்டம் என்ற பேச்சுக்கே இடமில்லை. வெள்ள அழிவு வேலைகளுக்கு விவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாயிகளும் நீர்ப்பாசனத் திணைக்களமும் பெரும் தொகைப் பணத்தை வருடாவருடம் செலவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை.



மட்டக்களப்பு மாவட்டத்தின் மேற்கே வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவில் மட்டுநகரில் இருந்து 20மைலுக்கு அப்பால் அமைந்துள்ள உன்னிச்சை குளமானது 1919ஆம் ஆண்டு மகிழவட்டவான் எனப்படும் ஆற்றை மறித்து கட்டப்பட்டதாகும். பதுளை மாவட்டத்திலிருந்து மழை நீர் இக் குளத்தை நிரப்புகிறது. 1957ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தின் போது இக் குளம் உடைந்து பலரைப் பலி கொண்ட அந்த சோகம் இன்னமும் மட்டக்களப்பு மாவட்ட மக்களின் நெஞ்சங்களை விட்டு அகலவில்லை. 106 சதுர மைல் பரப்பளவையும் 41500 ஏக்கர் அடி நீரையும் கொண்ட உன்னிச்சை குளமே மீன்பாடும் தேன் நாட்டிலுள்ள மிகப் பெரிய குளமாகும். இது 28 அடி உயரமுடையது.

இக் குளத்தின் அணைக்கட்டுகள் 1919ஆம் ஆண்டு தொடக்கம் 1960ஆம் ஆண்டு வரை நான்கு தடவைகள் உயர்த்தப்பட்டுள்ளதாக அறியக்கிடைக்கிறது. 1957ஆம் ஆண்டில் வெள்ளத்தினால் கட்டு உடைந்த பின்னர் 1960ஆம் ஆண்டில் 28 அடியாக உயர்த்தப்பட்டது. இதனால் பரப்பளவும் 36500 சதுர மைலிலிருந்து 41500 சதுர மைலானது. இப்போது மீண்டும் 7 அடியால் உயர்த்தப்படுகிறது.

மழைகாலத்தில் உன்னிச்சை குளத்திலிருந்து நீர் நிரம்பி வழிந்து வீணே கடலுக்கு செல்வது கடந்த 20 ஆண்டுகால அவதானிப்பின் மூலம் அறியப்பட்டுள்ளளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

எனவே உன்னிச்சை அணைக்கட்டை 7 அடி உயர்த்துவதே புதிய நீர் விநியோகத் திட்டத்தின் நோக்கமாகும். இதனால் குளத்தில் சேமிக்கப்படும் மேலதிக நீரின் ஒரு பகுதி நீர்தேக்கத்தில் தேக்கி வைக்கப்பட்டு குடிநீருக்கு பயன் படுத்தப்படுவதுடன் எஞ்சிய பகுதி மேலதிகமாக விவசாயத்துக்கும் பயன்படுத்தபடும்.

அணைக்கட்டை 7அடி மேலும் உயர்த்தினால் குளத்து நீரின் கொள்ளளவு 41500 ஏக்கர் அடியிலிருந்து 61000 ஏக்கர் அடியாக அதிகரிக்கும் என்றும் அதனால் பெரும் போகத்திலும் சிறு போகத்திலும் 11000 ஏக்கர் நெல் சாகுபடி செய்ய முடியும் என்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் அறிக்கை சமர்ப்பித்துள்ளது. சிறு போகத்தில் 500 ஏக்கரில் மேட்டு நிலப்பயிர் செய்யலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

அணைக்கட்டை உயர்த்துவது குடிநீரை வழங்குவதற்கும் வெள்ளப் பெருக்கைத் தடுப்பதற்கும் நீர்ப்பாசனத்துக்கும் உதவும். ஒரு துளி மழை நீராவது வீணே கடலுக்குள் போகக்கூடாது என்று பராக்கிரமபாகு மன்னன் கூறியது நினைவு கூரத்தக்கது.

ஏக்கருக்கு 60-80 புசல் விளைவை 80-100 புசலாக அதிகரிப்பதற்குரிய பாசன வசதியை அளிக்கலாம் எனவும் நீர்ப்பாசனத் திணைக்களம் அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

இதனை அடிப்படையாகக் கொண்டே உன்னிச்சை குடிநீர் விநியோகத் திட்டம் கருக்கட்டியது. உன்னிச்சை குடிநீர் விநியோகத் திட்டத்துக்கான ஆலோசனை 1983ஆம் ஆண்டில் முன் வைக்கப்பட்டுள்ளது. அப்போது நீர்ப்பாசன பிரதிப் பணிப்பாளராகக் கடமையாற்றிய திரு.வி.இரகுநாதனால் இத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது.

அன்று தொடக்கம் பல தரப்பினராலும் இத்திட்டம் காலத்துக்கு காலம் முன் வைக்கப்பட்டாலும் நிதி வசதியின்மையால் எதுவித பயனும் கிட்டவில்லை. இறுதியாக சமர்ப்பித்த அறிக்கையில் 59 கோடி ரூபா தேவை என மதிப்பிடப்பட்டது.

## இ.சீனிவாசகம்

காத்தான்குடியிலும் பாரிய குடிநீர்ப்பிரச்சினை உள்ளது. சுமார் 58 ஆயிரம் மக்கள் உள்ளனர். சன நெருக்கம் காரணமாக மலசலகூடங்களினால் அங்கு கிணற்று நீர் அசுத்தமடைந்துள்ளது. இதனை அடுத்து பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்தில் அங்கு ஒரு கிணறு அமைக்கப்பட்டு 250 குடும்பங்களுக்கும் 50 பொது இடங்களுக்கும் குடி நீர் இணைப்பு வழங்கப்பட்டு நாளொன்றுக்கு 66,000 கலன் நீர் விநியோகிக்கப்படுகிறது. எஞ்சிய குடும்பங்களுக்கு குடிநீருக்கு என்ன செய்வது? அப்போது பிரதியமைச்சராக இருந்த எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா இதற்கு தீர்வு காண முயன்ற போது உன்னிச்சை குடிநீர் விநியோகத் திட்டம் மட்டுமே காத்தான்குடி பிரச்சினைக்கு தீர்வுகாணும் என்பது சுட்டிக்காட்டப்பட்டது.

எனவே இதற்கு தேவையான நிதியைப் பெறுவதற்கு ஜனாப் ஹிஸ்புல்லா அப்போது ஆசிய அபிவிருத்தி வங்கியை நாடினார். அதனை அடுத்து உன்னிச்சை குடிநீர் விநியோகத்திட்டத்துக்கு நிதியுதவி வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி முன்வந்தது.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு மாவட்டத்தின் குடிநீர்ப் பிரச்சினை தீராத பிரச்சினையாகவும் நீண்டகாலப் பிரச்சினையாகவும் இருந்து வருகிறது.

தற்போது உள்ள நகர குடிநீர்த் திட்டம் 1917 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதாகும். அப்போது நகரின் சனத்தொகை சுமார் 5 ஆயிரமாக இருந்தது. ஆனால் அது தற்போது 2 இலட்சமாக உயர்ந்துள்ளது.

85 வருட கால பழமை வாய்ந்த இத் திட்டம் மாந்தீவு தொழு நோய் வைத்தியசாலை மட்டக்களப்பு பொதுவைத்தியசாலை ஆகியவற்றுக்கு குடிநீர் விநியோகிப்பதற்காகவே ஆரம்பிக்கப்பட்டிருக்கலாம்.

குடிநீர் விநியோகிப்பதற்கு பாலமீன் மடுவில் 6 கிணறும் கல்லடியில் 3 கிணறும் ஊறணியில் 1 கிணறும் சத்துருக் கொண்டானில் 1 கிணறும் ஆக 11 கிணறுகளிலிருந்து நாளொன்றுக்கு 3 இலட்சம் கலன் நீர் மட்டக்களப்பு நகரப்பகுதிக்கு விநியோகிக்கப்படுவதாக நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபை பொறியியலாளர் தெரிவித்தார். பொது வைத்தியசாலைக்கு 65 ஆயிரம் கலன் நீரும் வழங்கப்படுகிறது.

மட்டக்களப்பு நகரப்பகுதியில் 85,000 பேர் தற்போது வசிக்கின்றனர். ஆனால் 1200 குடும்பங்களுக்கு மட்டுமே குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இதன்படி சுமார் 6000 பேருக்கு மட்டுமே குடிநீர் வழங்கக் கூடிய நிலையில் தற்போது கிணறு வசதி உள்ளது.

புதூர், வலையிறவு, சேத்துக்குடா போன்ற புறநகர்ப்பகுதிகளில் 26 வீதியோர குழாய் இணைப்புகளும் உள்ளன. சத்துருக்கொண்டான், ஊறணி ஆகிய இடங்களில் மேலும் இரு கிணறுகளை அமைத்து குடிநீர் பெறுவதற்கான திட்டமொன்று மட்/நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையினால் தயாரிக்கப்பட்டு சம்பந்தப்பட்டவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதனை நிறைவேற்ற சுமார் 60 இலட்சம் ரூபாவை பெற்றுக் கொடுக்க கையாலாகாத நிலையில் சம்பந்தப்பட்டவர்கள் இருப்பது வேதனைக்குரியது. இப்போதும் காலம் கடந்துவிடவில்லை.

ஒவ்வொரு எம்.பி.க்குமான நிதி ஒதுக்கீடு 50 இலட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. எனவே மாவட்ட எம்.பி.க்கள் 5 பேரும் சேர்ந்து இப்பணத்தை அடுத்த வருடத்திலாவது ஒதுக்கி பொதுத் தேவையினை நிறைவேற்ற முன்வரவேண்டும். இது ஒரு அவசர தேவையாகும்.

ஏனெனில் தற்போது உள்ள கிணறுகளிலிருந்து பெறப்படும் நீர் போதுமானதாக இல்லை. அன்றியும் உன்னிச்சை குடிநீரின் திட்டம் 2010 ஆம் ஆண்டிலேயே பூர்த்தியாகும் வாய்ப்புகள் உள்ளன. எனவே அதுவரை அதிகரிக்கும் சனத் தொகையின் குடிநீரின் தேவையினை ஓரளவுக்காயினும் சமாளிப்பதற்கு இந்த கிணறுகள் உதவும்.

மக்களும் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தப்பழகிக் கொள்ள வேண்டும்.

கிராமங்களில் ஆங்காங்கே இருந்த தோணா மடு, சிறு குளம் ஆகிய நீர் நிலைகளில்நீர் தேங்கியிருந்ததால் அவற்றை அண்டியுள்ள கிணறுகளில் நீர் ஊறிக் கொண்டே இருந்தது. இவ்வாறான நீர் நிலைகள் எல்லாம் இப்போது குடியிருப்புகளாக மாறிவிட்டன. இதனாலும் கிணறுகளில் நீர் வற்றிவிடுகிறது.

நிலத்துக்கு அடியில் போதுமான அளவு நீர் இருப்பதாக நாம் நினைப்பது தவறாகும். நிலத்தின் அடியில் ஒரு குறிப்பிட்ட அளவே நீர் உள்ளது. சனத்தொகை அதிகரிப்பினால் கால கதியில்நீர் தட்டுப்பாடு ஏற்படுவது தவிர்க்கமுடியாததாகும். எனவே மக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும்.

நீரானது மட்டுப்படுத்தப்பட்டதும் மீளளிக்க முடியாததுமாகும். பூமியில் 1400 மில்லியன் கன கிலோமீற்றர் நீர் உள்ளது. இதை கூட்டவோ குறைக்கவோ முடியாது. இதில் 97.4 வீதம் உப்பு நீராகவும் 2 வீதம் பனிக்கட்டியாகவும் காணப்படுகிறது.

எஞ்சிய 0.6 வீதமான 8.4 கன கிலோ மீற்றர் நீர் மாத்திரமே தண்ணீராக காணப்படுகிறது. அதிலும்8 மில்லியன் கன கிலோமீற்றர் நீரானது பூமியின் அடியில் சேமிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளது. எனவே 0.4 மில்லியன் கனகிலோமீற்றர் நீர் மட்டுமே பாவனைக்காக உள்ளது.

அதாவது உலகிலுள்ள மொத்த நீரை ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலன் எனக்கொண்டால் ஒரு தேக்கரண்டி நீர் மட்டுமே எங்களால் பயன்படுத்தக்கூடியதாக உள்ளது.

அதனை வீண் விரயம் செய்து விரைவில் முடித்தோமானால் தண்ணீர் தட்டுப்பாடு ஏற் படுவது தவிர்க்க முடியாததாகும்.

மட்டு. குடிநீர் விநியோகத்திட்டம் பாலமீன் மடு கிணற்றில் இருந்து 1917 ஆம் ஆண்டு ஆரம்பமானது. இவ்வளவு பழமை மிக்கதாக இருந்தும் 1500 பேருக்கே இது வரை குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த அவல நிலைக்கு யார் பொறுப்பு? மட்டக்களப்பில் இயங்கிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச பையின் பிராந்திய நிலையம் 1983 இல் அம் பாறைக்கு மாற்றப்பட்டது. அன்று தொடக்கம் இன்று வரையில் சுமார் 10 ஆண்டு காலத்துள் 6000 இணைப்புகள் அம்பாறையில் வழங்கப் பட்டுள்ளது ஆச்சரியமாக உள்ளது.

எனவே இப்படியான பிரச்சினைகளையும் நிலைமைகளையும் கவனத்தில் கொண்டு இத னையும் யுத்தத்தை சாட்டாகச் சொல்லிக் காலத் தைக் கடத்தாமல் அபிவிருத்தியின் பேரால் காத்திரமான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அனைவரும் மேற்கொள்ள வேண்டும் என் பதே மாவட்ட மக்களின் ஆதங்கம்.

கல்லடியில் 3 கிணறுகளையும் அமைத்த போது அதற்கு 250 ஏக்கர் அரச காணி ஒதுக் கப்பட்டது. இக் கிணறுகளைச் சுற்றி வேறு கிண றுகள் அமைக்கப்படுமானால் நீர்த்தட்டுப்பாடு ஏற்படலாம். மேலும் இக் கிணறுகளுக்கு அருகே மலசல கூடங்கள் அமைக்கப்படுமா னால் நீரும் அசுத்தம் அடையலாம். இவற்றை கருத்தில் கொண்டே 250 ஏக்கர் ஒதுக்கப்பட் டது.

ஆனால் இக் காணி வேறு தேவைகளுக்காக பயன்படுத்தப்பட்டு 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 135 ஏக்கராக மட்டுப்படுத்தப் பட்டது. யூன் 90 அசம்பாவிதங்களை அடுத்து எஞ்சிய 135 ஏக்கரிலும் பெரும் பகுதியில் அத்து மீறிய குடியேற்றம் நடைபெற்றுள்ளது. இது மேற்படி இரு நலன்களுக்கும் குந்தகமாக அமைந்துள்ளது.

உன்னிச்சை குடிநீர் கிடைக்கும் 2010 வரை தற்போதைய நீர்க்கிணறுகள் பராமரிக்கப்படு தல் வேண்டும்.

அன்றியும் உன்னிச்சை குடிநீர் திட்டத்தில் ஏதும் தடங்கல்கள் ஏற்பட்ட காலத்தில் இவை இன்றியமையாததுமாகும். மேலும் நீர் வழங் கல் வடிகால் அமைப்புச் சபை உபகரணங் களை களஞ்சியப்படுத்துதல் போன்ற தேவை களுக்கு கல்லடி நிலம் அவசியமாகும்.

எனவே கடந்த கால முயற்சிகள் தோல்வி அடைந்த நிலையில் சமாதான சூழலை அடுத்து இந்த அத்து மீறிய குடியேற்றத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க மேற்படி சபை தீர்மானித்துள்ளது. மாவட்டத்தின் பொது நலனை கருத்தில் கொண்டு சகல தரப் பினரும் இதற்கு எதிராக செயற்படக்கூடாது என்பதே நலன் விரும்பிகளின் நோக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ජාතික ජල සම්පාදන හා ජලාපවහන මණ්ඩලය
தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை
# National Water Supply & Drainage Board


සභාපති / தலைவர் / Chairman — Tel/Fax 634488
උප සභාපති / உப தலைவர் / Vice Chairman — 635883
ප්‍රධාන කාර්යාලය / பொது அலுவலகம் / Head Office — 635281-3, 635247, 638999
තැ. පෙ. අංකය / த.பெ.இல. / P. O. Box — 14
ගල්කිස්ස / கல்கிசை / Mt. Lavinia
සාමාන්‍යාධිකාරී / முகாமையாளர் / General Manager — 636449
Telex: 21482 NWSDB CE
Fax : 636449, 635999
E-mail: nwsdb agc @ sltnet.lk
ගාලු පාර / காலி வீதி / Galle Road
රත්මලාන / இரத்மலானை / Ratmalana, Sri Lanka


මගේ අංකය / எனது இல. / My No. மா.பொ/மட்/ பொது/03

ඔබේ අංකය / உமது இல. / Your No.


மாவட்ட பொறியியலாளர்.
காரியாலயம்,
றிசேவயர் வீதி,
மட்டக்களப்பு.
தொ.பே/பெக்ஸ் 065-24479


03.01.2002.

தலைவர்,
ஐக்கிய சமூகநல அமைப்புக்களின் ஒன்றியம்.
(புதுநகர், திமிலைத்தீவு, சேற்றுக்குடா, வலையிறவு, வீச்சுக்கல்முனை, திருப்பெருந்துறை)
மட்டக்களப்பு.

ஐயா,

குழாய் மூலம் குடிநீர் வழங்கல்.

மேற்படி விடயம் சம்மந்தமாக தாங்கள் அனுப்பிய 10.11.2001 திகதியிடப்பட்ட கடிதம் தொடர்பாக தங்களிற்கு தெரிவிக்க விரும்புவதாவது,

மேற்படி கிராமங்களிற்கு நீர் வழங்கல் எமது நகர் தாங்கியில் இருந்தே வழங்கப்படுகிறது. இதிலிருந்து இப்பகுதிகள் தொலைவில் இருப்பதால் (மட்டக்களப்பு நகர் புளியந்தீவை விட) இந்நகர்களுக்கு அமுக்க குறைபாடு உள்ளது. மேலும் எம்மால் நாளொன்றுக்கு வழங்கப்படும் நீர் கூடியளவு நகர் எல்லைக்குள் உபயோகிக்கப்படுவதாலும் இப்பகுதிக்கு இக்குறைபாடு மேலும் அதிகரித்துள்ளது.

இதன் காரணமாகவே இப்பகுதிகளிற்கு தனிப்பட்ட வீட்டு இணைப்புக்கள் வழங்க முடியாதுள்ளது. ஆனாலும் எம்மால் முடிந்தளவு வீதி இணைப்புக்களிற்கு நீர் வழங்கும் அளவை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டே வருகிறது. இதன் பிரகாரம் எமது நீர் அளவை அதிகரிக்கப்படுமிடத்து வீடுகளிற்கான இணைப்புக்களை வழங்க முடியும். தற்பொழுது தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான நீர் வழங்கல் திட்ட அறிக்கையைத் தயாரித்துள்ளது. இதன்படி இத்திட்டம் நிறைவேற்றப்படும் பட்சத்தில் மேற்படி பகுதிகளிற்கு ஒரு நீர் தாங்கி நிறுவப்படவும் ஆலோசனை அவ்வறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன். எனவே எமக்கு தங்கள் ஒத்துழைப்பை நல்குமாறும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

(ஒப்பம்)

மாவட்ட பொறியியலாளர் - மட்டக்களப்பு.

பிரதி: 01. அரசாங்க அதிபர், மட்டக்களப்பு. - தகவலுக்காக.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ජාතික ජල සම්පාදන හා ජලාපවහන මණ්ඩලය
தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை
**National Water Supply & Drainage Board**

සභාපති / தலைவர் / Chairman } Tel/Fax 634488
උප සභාපති / உப தலைவர் / Vice Chairman } 635883
ප්‍රධාන කාර්යාලය / பொது அலுவலகம் / Head Office } 635281-3, 635247, 638999
තැ.පෙ.අංකය / த.பெ.இல. / P. O. Box } 14
ගල්කිස්ස / கல்கிசை / Mt. Lavinia

සාමාන්‍යාධිකාරී / முகாமையாளர் / General Manager } 636449
Telex : 21452 NWSDB CE
Fax : 636449, 635999
E-mail : nwsdb agc@slinet.lk
ගාලු පාර / காலி வீதி / Galle Road - රත්මලාන / இரத்மலானை / Ratmalana, Sri Lanka

මගේ අංකය / எனது இல. / My No. } ADLGM / RO/ 4 C
ඔබේ අංකය / உமது இல. / Your No. }

30-07-2002

Vice Secretary
Federation Of United Social Services,
Batticaloa.

Dear Sir,

<u>DRINKING WATER</u>

We are in receipt of your letter dated 12-06-2002, addressed to Hon. Arumugan Thondaman, Minister of Housing and Plantation Infrastructure regarding the above subject.

We are unable to extend the water supply facilities immediately to cover the areas mentioned in your letter due to limited capacity of the existing scheme. However , the National Water Supply & Drainage Board with the assistance of Asian Development Bank is implementing a Water Supply Project to provide drinking water facilities for urban dwellers of the Batticaloa district. The Proposed scheme will cover Puthunagar, Thimilatheevu, Setthukudah, Valayiravu, Veechikalmunai and Thiruperunthurai areas.

We are taking every effort to commence the project works in the near future and once when the project is completed the entire area from the Manmunaipattu to the Eravur Pattu will be supplied with drinking water.

Yours faithfully,

Eng: S.A.S.De Silva
Addl. General Manager (RO) 31/7/2002.
National Water Supply & Drainage Board

MINISTRY OF URBAN DEVELOPMENT, PUBLIC UTILITIES, HOUSING AND SPORTS
"Water - Every Drop Is Precious"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ශ්‍රී ලංකා ගුවන් හමුදා මූලස්ථානය. තැ.පෙ. 594, කොළඹ, ශ්‍රී ලංකාව
இலங்கை விமானப்படைத் தலைமையகம், த.பெ. 594, கொழும்பு, இலங்கை
SRI LANKA AIR FORCE HEADQUARTERS, P.O. Box 594, Colombo, Sri Lanka

SLAF/477/17/ORG

27 February 2003

Mr. T Manokaran
Secretary
Federation of United Social Services
NO 11
Boundary Road
Puthunagar
Batticaloa

Dear Sir

**APPEAL TO REDUCE BATTICALOA AIRPORT BOUNDARY BY 250 METERS**

1. Reference is made to your letter on the above subject dated 06th December 2002 addressed to Hon. Prime Minister with a copy to the Commander of the Air Force, and this Headquarters wishes to make the following observations on the issue projected therein.

2. In 1985, under Emergency Regulations, all lands falling within a boundary of 500 meters parallel to the runway of the Batticaloa Airport was requisitioned to the State and handed over to the SLAF. The above requisition was followed by the formal Land Acquisition Act requisites where compensation have now been paid for majority of the previous land owners.

3. Following public places are located within the total land area acquired under this decree.

a. Puthunagar Sri Sithivinayagar Hindu Kovil.
b. Valaiyiravu Sri Nadaththu Pillayar Hindu Kovil.
c. Bt/Puthunagar Vigneshwara Tamil Mixed School.
d. Bt/Valaiyiravu Govt School.
e. Alayadicholai Cemetery.

-01-

Cont'd Page 2/=......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. Though fencing-off of this acquired land area has now been initiated, arrangements were made to maintain access roads leading to these public places unrestricted in order to continue the facilities for the general public of the area with free access to these public places as had been done by the Air Force ever since these lands were acquired.

5. In a further development, with the public convenience in mind, construction of a direct road network was undertaken utilizing Air Force funds to facilitate easy access. It has also been planned and arrangements have been made ultimately to demarcate and reserve these public places and the road network for public use exclusively, though they still continue to be located within the land area vested with the Air Force.

6. This Headquarters do not intend to prevent development of these public places for their intended use except subject to flight safety limitations imposed by International Regulations and the security concerns of this vital Airfield in the East, which needs to be maintained even if the facility is used under Civil Aviation requirements.

7. All the same, it is wished to point put that the land demarcated and vested with the Air Force is not possible to be reduced any further due to flight safety and security concerns involving this Military Airfield though the public using the facilities situated therein could continue as done up to now.

Thanking you
Yours faithfully

(R ARUNTHAVANATHAN)
Air Vice Marshal
Director Administration
for **COMMANDER OF THE AIR FORCE**

Copy to:

1. **Secretary to the Prime Minister**
   Prime Minister's Office
   Colombo
2. **Secretary**
   Ministry of Defence
   Colombo
3. **Government Agent**
   Batticaloa
4. **Divisional Secretary**
   Manmunai North
   Batticaloa
5. **Rt. Rev. Dr. Kingsley Swamipillai**
   Bishop of Trincomalee-Batticaloa
6. **Commanding Officer**
   SLAF
   Batticaloa



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனை வடக்கு
தேச செயலரின் அலுவலகம்

මන්මුනේ උතුර
ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය

Office of the
Divisional Secretary
Manmunai North

எனது இல:
මගේ අංකය:
My No: மஎன்/எம்என்/பி/எல்டி/3010/

உமது இல:
ඔබේ අංකය:
Your No.

ප්‍රා. ලේකම් කාර්යාලය
නව කාර්යාල සංකීර්ණය
මඩකලපුව.
Divisional Secretariat
New Secretariat
Batticaloa.

24.03.200-

அரசாங்க அதிபர்,
கச்சேரி,
மட்டக்களப்பு.

மட்டக்களப்பு விமான நிலைய விஸ்தரிப்புக்கான
காணி சுவீகரிப்பு

மட்டக்களப்பு விமான நிலைய விஸ்தரிப்புக்காக சுவீகரிக்கப்பட்ட காணிக்குள் அமைந்திருக்கும் மட்/புதுநகர் விக்னேஸ்வரா வித்தியாலயம் புதுநகர் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், ஆலையடிச்சோலை பொதுமயானம் ஆகியவற்றைப் பாவிப்பது சம்பந்தமாக விமானப்படை கட்டளையிடும் அதிகாரி திரு.ஆர்.ஏ... ஆர்.எல் விஜேசுந்தர அவர்களுடன் பொதுமக்களின் பிரதிநிதிகள் சிலரும் நானும் நேற்று பிற்பகல் 12.00 மணிக்கு கலந்துரையாடியதன் பயனாக பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

1. பாடசாலை வழக்கம்போல நடைபெறுவதற்கும், தேவையேற்படின் பி.ப.6.00 மணிவரை பாடசாலையைப் பாவிப்பதற்கும் அனுமதியளித்தல்.

இந்த ஆலயத்தில் பகல் வேளையில் மூன்று நேரப் பூஜைகளை நடாத்துவதற்கும் அனுமதியளிக்கப்பட்டது. பி.ப.6.00 மணிக்குப் பின் கோயில் வளவுக்குள் எவரும் நடமாடக் கூடாது...

விசேட பூசைகள், விசேடகாரணங்களுக்காக பி.ப.6.00 மணிக்குப் பின்னர் கோயிலைப் பாவிக்க வேண்டியேற்பட்டால் அதற்கான முன் அனுமதியை விமானப்படை அதிகாரியிடமிருந்து எடுக்க வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனை வடக்கு
ச செயலரின் அலுவலகம்

මන්මුනේ උතුර
ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය

**Office of the**
**Divisional Secretary**
**Manmunai North**

எனது இல:
මගේ අංකය:
My No:

உமது இல:
ඔබේ අංකය:
Your No.

-2-

මහ ලේකම් කාර්යාලය
නව කාර්යාල ගොඩනැගිල්ල
මඩකලපුව.
Divisional Secretariat
New Secretariat
Batticaloa.

24.03.200 0

11. இந்த ஆலயத்தில் இரவு வேளையில் பூசகரும், இன்னொருவரும் தங்கியிருக்க அனுமதியளிக்கப்படும். இவர்களின் பெயர், விலாசம், அடையாள அட்டை இலக்கம் என்பன விமானப்படை அதிகாரிக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அனுமதியளிக்கப்படாத எவரும் தங்கியிருக்கக் கூடாது. இவ்விருவரும் பி.ப.6.00 முதல் அடுத்த நாள் அதிகாலை 6.30 மணிவரை வெளியில் நடமாடக் கூடாது.

111. வழக்கம் போல ஆலயத்தில் ஒலிபரப்பி பாவிக்க அனுமதியளிக்கப்படும். ஒலிபரப்பி குழல் படை முகாமை நோக்கியிராமல் கோயிலிலிருந்து தூரத்தில் மட்டக்களப்பு நோக்கியிருப்பதுடன் சத்தமும் அளவு குறைவானதாகவும் இருத்தல் வேண்டும்.

3. ஆலையடிச் சோலை மயானத்தில் வழக்கம் போல விமானப்படையினரின் முன் அனுமதி பெற்று பிரேதங்களை அடக்கம் செய்ய அனுமதியளிக்கப்படும்.

4. பொதுமக்கள் பி.ப.6.00 மணிக்குப் பின்னர் அடுத்த நாள் காலை 6.30 மணிவரை விமானப்படை முகாமுக்கருகில் நடமாடுதல் அனுமதிக்கப்பட மாட்டாது.

பாடசாலை, இந்துக்கோயில், மயானம் என்பன விமானப்படை விஸ்தரிப்புக்காக சுவீகரிக்கப்பட்ட காணிக்குள் அமைந்துள்ளதால் இயன்றவரை விரைவில் இவற்றை வேறிடத்துக்கு மாற்றுவதற்கு கல்வித் திணைக்களம், ஆலய பரிபாலன சபை, மட்டக்களப்பு மாநகரசபை என்பன நடவடிக்கை எடுக்க வேண்டும் என படையதிகாரியினால் தெரிவிக்கப்பட்டது.

MR. K. KATHIRGAMANATHAN
Divisional Secretary,
Manmunai North

(ஒப்பம்) க. கதிர்காமநாதன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிகள்:- 1. வலயக்கல்விப் பணிப்பாளர், மட்டக்களப்பு- தகவலுக்கும், நடவடிக்கைக்கும்.

2. தலைவர், மட்/புதுநகர் விக்னேஸ்வரா வித்தியாலம்- தகவலுக்கும், நடவடிக்கைக்கும்.

3. மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்,- தகவலுக்கும், கல்விப் பணிமனை, மட்டக்களப்பு. நடவடிக்கைக்கும்

4. தலைவர்/ ஆலயபரிபாலனசபை, மட்/புதுநகர், ஸ்ரீ சித்திவினாயகர் ஆலயம். - தகவலுக்கும், நடவடிக்கைக்கும்.

5. மாநகர ஆணையாளர், மட்டக்களப்பு, தகவலுக்கும், நடவடிக்கைக்கும்,

6. கிராம உத்தியோகத்தர், புதுநகர்/சேத்துக்குடா/திமிலைதீவு/வலையிறவு/வீச்சுக்கல்முனை. - தகவலுக்கும், நடவடிக்கைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27.9.2003

# விமானப்படை உயர் அதிகாரிகள் குழு கொழும்பிலிருந்து மட்டு. வருகை

## விமானதள விஸ்தரிப்பால் பாதிக்கப்படும் பாடசாலைகள் பற்றி ஆராய்வு

(மட்டு. சுழற்சி நிருபர்)

மட்டக்களப்பு விமானப் படை தள விஸ்தரிப்பால் பாதிக்கப்பட்ட புதூர் விக்னேஸ்வரா வித்தியாலயம், வலையிறவு மெதடிஸ்த மிஷன் பாடசாலைகளில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கு விமானப்படையினர் விதித்திருந்த தடையால் எழுந்த பிரச்சினைகளை ஆராய்வதற்காக விமானப் படை அதிகாரிகள் குழு ஒன்று நேற்று முன்தினம் கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்குச் சென்று நிலைமைகளை நேரில் அவதானித்ததுடன் கல்வித் திணைக்கள அதிகாரிகளுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தினர்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவின் பணிப்புரைக்கமைய இக்குழு மட்டக்களப்புக்கு விஜயம் செய்தது.

மட்டக்களப்பு விமானப்படை தளத்தை விஸ்தரிப்பதற்கென அவசரகால சட்டத்தின் கீழ் 1985 ம் ஆண்டு முன்னர் இருந்த விமானப் படைத்தளத்தைச் சுற்றி 500 மீற்றர் பரப்பளவு நிலம் சுவீகரிக்கப்பட்டிருந்தது. இச்சுவீகரிப்புக்குள் 385 குடும்பங்களின் வீடுகளும், இரு பாடசாலைகள், பிள்ளையார் ஆலயம், ஆலையடிச்சோலை மயானம் என்பனவும் அடங்கியிருந்தன.

இந்தப் பாடசாலைகள் சுவீகரிப்பு எல்லைக்குள் வந்த போதிலும் வேறு இடத்திற்கு இப்பாடசாலைகளை இடமாற்றுவதற்கான காணி வசதிகள் இல்லாதிருந்ததுடன், இதை இடமாற்றுவதற்கு அப்பிரதேச மக்கள் கடும் எதிர்ப்பும் தெரிவித்து வந்தனர்.

1985ம் ஆண்டிலிருந்து எந்த அபிவிருத்தியும் இன்றிக் காணப்பட்ட இந்த இரு பாடசாலைகளையும் அபிவிருத்தி செய்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி ஒதுக்கீடுகளை செய்திருந்தது. அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்த போது விமானப் படையினர் தடைவிதித்ததையடுத்து பிரச்சினைகள் எழுந்தன. இதனையடுத்தே விமானப்படை அதிகாரிகள் குழு அங்கு விஜயம் செய்து நிலைமைகளை நேரில் அவதானித்ததுடன் கல்வித்திணைக்கள அதிகாரிகளையும் சந்தித்தனர்.


இச்சந்திப்பையடுத்து புதூர் விக்னேஸ்வரா வித்தியாலயத்தை அபிவிருத்தி செய்வதற்கு ஆலயத்திற்கு சமீபமாக ஒரு ஏக்கர் நிலத்தை வழங்குவதென்றும் பாடசாலைக்கான புதிய கட்டிடங்களை நிர்மாணிக்க அனுமதி வழங்குவதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

18 மில்லியன் ரூபா செலவில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் புதூர் விக்னேஸ்வரா வித்தியாலயத்திற்கு இரு மாடிக் கட்டிடமும் ஒன்றுகூடல் மண்டபமும் அமைக்கப்படவுள்ளது.

வலையிறவு மெதடிஸ்த மிஷன் பாடசாலைக்கு புதிய கட்டிடம் அமைப்பதற்கு தற்போது பாடசாலை இயங்கும் இடத்திற்கு அப்பால் சுவீகரிக்கப்பட்ட எல்லையில் காணி வழங்குவதாக விமானப் படையினர் தெரிவித்தனர். இதை ஏற்க மறுத்த வலயக் கல்விப் பணிப்பாளர் தற்போது பாடசாலை இருக்கும் இடத்திலேயே புதிய கட்டிடங்களையும் அமைக்க வேண்டுமென பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் விரும்புகின்றனரென தெரிவித்தார். இது தொடர்பாக பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினருடன் கலந்துரையாடியே முடிவை எடுக்குமாறு கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆலயத்தின் பின் தோற்றம்




தீர்த்தமாடும் நிகழ்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுவாமி ஓங்காரனந்தாவினால்
புதிய ஆலயத்திற்கு கல் நாட்டும் நிகழ்வு




புதிதாக அமைக்கப்பட்ட நவக்கிரக ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




புதுநகரில் இருந்து வெளியிடப்படும் சஞ்சிகைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







புதுநகரில் இருந்து வெளியிடப்படும் சஞ்சிகைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**விமான நிலைய விஸ்தரிப்பால் பாதிக்கப்பட்டோர் சங்கம்**
**வண. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆயர் அவர்களைச் சந்தித்த போது ...**




கிராமமோதய சபை உறுப்பினர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பாரதி நூற்றாண்டு விழா நிகழ்வு



புயலுக்குப் பின்னர் அமைக்கப்பட்ட இரண்டாவது
சன சமூக நிலையக் கட்டிட திறப்பு விழாவின் போது . . .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆங்கிலேயரின் பிரதான அபிவிருத்தியில் ஒன்றான கல்லடிப்பாலத்தின் திறப்பு விழா - 1923ம் ஆண்டு.





1957ம் ஆண்டு மட்டக்களப்பில் ஏற்பட்ட பெருவெள்ளத்தின் போது வெபர் விளையாட்டு மைதானத்தில் வந்திறங்கிய வானூர்த்தியில் இருந்து பிரித்தானிய அரசின் நிவாரண உணவுப் பொருட்கள் பார ஊர்த்தியில் ஏற்றப்படும் காட்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆங்கிலேயரின் பாதுகாப்பு அரனாக விளங்கிய கோட்டையின் ஒரு பகுதி




கோட்டை மேல் பகுதியில் ஒரு மூலையில் பொருத்தப்பட்டிருந்த சுடுகலானான பீரங்கிப் படம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**திமிலைதீவு துறையில் அமைந்திருந்த பிரயாணிகள் தங்கும் மடம் 1978 சூறாவளியில் சேதமடைந்த தோற்றம்.**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திமிலைதீவு இ. சே. பிரிவு

இராமோதய சபை

நடாத்தும்

# பாரதி நூற்றாண்டு விழா



காலம்: **11-9-1982**

இடம் : மட்/புதுநகர் விளையாட்டுத் திடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுநகர் ஆனந்தா சனசமூக
நிலையத்தினரின்

30 வது ஆண்டு

நிறைவு விழாவும்
விளையாட்டுப் போட்டியும்

காலம் : 19 - 4 - 1980 சனிக்கிழமை
நேரம் : காலை 7 - 00 மணி முதல்
மாலை 10 - 30 மணி வரை.

இடம் : மட் / புதுநகர் ஆனந்தா
சனசமூக நிலைய முன்றல்.


குமாரசாமி நாகையா இப்பிரதேசத்தில் சமூக, சமய, கல்வி வளர்ச்சிக்காக வித்திட்டு வழிகாட்டிய சமூக சேவையாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அந்நாளில் இயங்கிய பாலர் பாடசாலை



பூஜையில் கலந்து கொண்ட விமானப்படை அதிகாரி, மனைவி, பிள்ளைகள் சகிதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிராமி சிற்ப நிலையம்
# ABIRAMI SCULPTURAL CENTRE

ச. சண்முகவடிவேல்
ஸ்தபதி
1ம் குறுக்குத் தெரு,
வவுனியா.

S. SANMUGAVADIVEL
Isthapathi
1st CROSS STREET,
VAVUNIYA.

விக்கிரகங்களும், ஞாபகார்த்த கற்களும்.
Statues and Memorial Stones.

Regd. No. 1973

T. Phone No: 024-246

திரு. க. தேவராஜா (திருப்பணிக்குழுத் தலைவர்)
பரிபாலன சபை
புதுநகர் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம்
மட்டக்களப்பு

01-03-95

| | | |
|---|---|---|
| 21" | விநாயகர் | 7000.00 |
| " | ஆசனம் | 2000.00 |
| 16" | மூஷிகம் | 4000.00 |
| " | ஆசனம் | 1500.00 |
| 08" | பலிபீடம் | 2500.00 |
| " | ஆசனம் | 1500.00 |
| 12" | சிவலிங்கம் | 5000.00 |
| " | ஆசனம் | 1500.00 |
| 16" | உமையம்மை | 4000.00 |
| " | ஆசனம் | 1500.00 |
| 19" | வைரவர் | 4500.00 |
| " | ஆசனம் | 1500.00 |
| 19" | சுப்பிரமணியர், வள்ளி, தெய்வானை | 12000.00 |
| " | ஆசனம் | 3500.00 |
| 19" | நாகர் ([illegible]) | 3500.00 |
| " | ஆசனம் | 1500.00 |
| 15½" | நவக்கிரக விக்கிரகங்கள் 3000x9 | 27000.00 |
| 9x | " ஆசனம் | 9000.00 |
| | | 93000.00 |
| | முற்பணம் | - 20000.00 |
| | மிகுதி | = 73000.00 |

6-1995

ச. சண்முகவடிவேல்
01-03-95



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவித்தல்

புதுநகர் ஸ்ரீ சித்தி விநாயகர்
ஆலய பரிபாலன சபை
மட்டக்களப்பு
01/04/2015

இறையன்புடையீர்!

## புதுநகர் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வரலாற்று நூல் ஆக்கம்.

மேற்படி ஆலய வரலாற்றினை ஆலய பரிபாலன சபை தற்பொழுது எழுதிக்கொண்டிருப்பதால் இவ்வரலாறு சம்பந்தமான குறிப்புக்கள், படங்கள் ஆகியவற்றையும், அத்துடன் புதுநகரின் வரலாற்றுக் குறிப்புக்கள் ஆகியவற்றையும் உடன் தந்து உதவுமாறு உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி.

இவ்வண்ணம்

க. தவராசா.

செயலாளர்
( க.தவராசா )

தொடர்புகளுக்கு - 0779594473

புதுநகர் ஸ்ரீ சித்திவிநாயகர்
ஆலய பரிபாலன சபை
மட்டக்களப்பு
பதிவு இல : HA/5/BT/41



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபை

புதுநகர், மட்டக்களப்பு - பதிவு இல ; எச்ச/5/விரி/41

திரு / திருமதி: ....................................................

....................................................

அன்புடையீர்,

ஆலய வரலாறு

மேற்படி எமது பரிபாலனசபையால் தங்களிடம் அன்புடன் எதிர் பார்ப்பது :-

எமது ஆலயம் மீன்பாடும் தேன் நாடாம் மட்டுநகரின் புதுநகர் தன்னில் வீற்றிருந்து சுமார் நூறு ஆண்டுகளைக் கடந்த புகழ்பொலிவுடன் திகழ்கின்ற ஸ்ரீ.சி.வி. ஆலயத்தின் புனித வரலாற்றை புத்தகப் படைப்பாக உருவாக்கவேண்டிய அவசிய தேவை ஏற்பட்டுள்ள இவ்வேளையில், அதற்கான ஆரம்பம் முதல் இன்றுவரையிலான வரலாற்றுத் தகவல்களைத் திரட்டவேண்டிய கட்டாய தேவை உங்கள் ஒவ்வொருவரின் தலையாய கடமையாகும்.

இதனடிப்படையில் உங்கள் ஒவ்வொருவரின் மூத்த குடும்பத் தலைவர்கள், தலைவர்கள் அல்லது உங்களால் இவ் ஆலயத்திற்கு ஆற்றப்பட்ட பணிகளை கீழ்வரும் அடிப்படையில் எதிர்வரும் மார்கழி 31ந். திகதிக்கு முன்னர் (31.12.2003) செயலாளர் ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயப் பரிபாலனசபை, புதுநகர், மட்டக்களப்பு. என்னும் முகவரிக்கு எழுத்து மூலம் அறியத்தருமாறு உங்களை மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

1) முழுப்பெயர், விபரம், பரிபாலனசபையில் பதவி வகித்திருந்தால், அங்கத்துவ நிலை.

2) ஆற்றிய பணிகள், அதனுடன் சம்பந்தப்பட்டவர்களின் விபரங்கள்.

3) ஆலயப் பணிகள் ஆற்றிய காலப்பகுதி.

4) எமது ஆலயத்தில் உணரப்பட்ட அற்புதங்கள் அல்லது காட்டப்பட்ட சித்திகள்.

5) வேறு ஏதேனும் விபரங்கள்.

நன்றி.

இவ்வண்ணம்
இறை தொண்டில்,


செயலாளர்.
ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய பரிபாலனசபை

புதுநகர், மட்டக்களப்பு.
01.11.2003.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமங்களின் தற்போதைய அமைப்பு






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 2014 குடிசன மதிப்பீடு

| கிராமம் | G.S பிரிவு | விஸ்தீரணம் | மொத்த குடும்பம் | ஆண்கள் | பெண்கள் | பெண்கள் தலைமை தாங்கும் குடும்பம் |
|---|---|---|---|---|---|---|
| புதுநகர் | 181 C | 1.136 ச.கி.மீ | 598 | 1008 | 1022 | 81 |
| சேற்றுக்குடா | 181 D | 0.2825 ச.கி.மீ | 371 | 704 | 733 | 48 |
| வீச்சுக்கல்முனை | 181 B | 0.22 ச.கி.மீ | 274 | 435 | 472 | 55 |
| திமிலைதீவு வலையிறவு | 181 | 1.085 ச.கி.மீ | 369 | 622 | 733 | 60 |
| திருப்பெருந்துறை | 181 A | 2.841 ச.கி.மீ | 436 | 861 | 894 | 44 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமான நிலைய அமைப்புக்கு முன்னர்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சம் பொங்கும் நன்றிகள்



ஒருகரம் உதவ மறுகரம் அறியா அன்றும் இன்றும் உன்னத
ஆலய பணி நிறைவேற உவகையுடன் உதவிய நல் உள்ளங்களே!
காலத்தால் செய்யும் உதவி பெரியதோ! சிறியதோ உள்ளம் கனிந்து செய்யும்
உதவிகள் மேன்மையானவையே!
இதை காலத்தால் மக்கள் மறந்தாலும் இராமர் பாலம் அமைக்க அணில்
பிள்ளை செய்த உதவி வரலாற்றில் பதியப்பட்டது போல, நீங்கள் செய்த
உதவியும் இறை உள்ளம் என்னும் பதிவேட்டில் வரலாறாய் பதிந்து நன்மை
பயக்கும் என்பதுடன்
இன்று அழகுடன் விளங்கும் ஆலயமும் அற்புத கலைமிளிரும்
வண்ணத்தேரும் உங்கள் கண்முன்னே தோன்றுகிறதென்றால்
அதன் பெருமையில்
உங்களுக்கும் பங்குண்டு என்பதில் பெருமையடைகின்றோம்.
இவ்வகையில் புதுநகரில் புகழ் பொங்க அருள்மாரி பொழியும்
விநாயகப் பெருமானின் அருளும் ஆசியும் நிச்சயம் உங்களை வந்தனைக்கும்
என்பதுடன் எங்கள் நெஞ்சம் பொங்கும் பணிவுமிகு நன்றிகளையும்
உங்களுக்கு சமர்ப்பிக்கின்றோம்.

**- ஆலய பரிபாலன சபையினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நியூ வின் அச்சகம், மட்டக்களப்பு தொ. பே : 065 2222204

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org